# கிழக்கொளி

කිළක්කොළි

*Kizhakkoli*

ISSN 2012-7332

ஒளி : 15 2010 புரட்டாதி - மார்கழி கதிர் : 01




## எழில்மிகு மட்டுநகர் இன்று...

**கலை கலாசார காலாண்டு சஞ்சிகை**

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்க வெளியீடு

*Publication of Eastern University Employees' Union*

# கிழக்கொளி

කිළක්කොළි **Kizhakkoli** ISSN 2012-7332

ஒளி : 15 (2010 புரட்டாதி - மார்கழி) கதிர் - 01

**பிரதம ஆசிரியர்**

**V.பிரகாஷ்**

**துணை ஆசிரியர்**

**A.நிர்மோகன்**

**சஞ்சிகைக் குழு:**

**K.தேவராஜா**

**K.கதிர்காமத்தம்பி**

**A.தேவராஜ்**

**K. சந்திரலிங்கம்**

**P. ரமேஷ்**

**விலை ரூபா : 50 /-**

**தொடர்புகள்**

பிரதம ஆசிரியர்
நோய் உடற் தொழிற்பாட்டியல் துறை
சௌக்கியப் பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
இல. 50, புதிய வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி இல: – *065 - 2227841*
E mail : *kizhakkoli@yahoo.com*
Web:*www.esn.ac.lk/journal/kilakkoli*

## உள்ளே....

**ஆக்கம்** **பக்கம்**

ஆசிரிய பீடத்திலிருந்து.................................... (ii)
அறுவைச் சிகிச்சையின் தந்தை (தொடர்...)... 01
வாடிக்கையாளர் திருப்தியை மதிப்பிடலில்..... 06
இதயத்தின் முடியுரு நாடியில் ஏற்படும்........... 08
நீங்கள் முன்னேறச் சில யோசனைகள்.......... 13
நிஜங்கள் (கவிதை)........................................ 15
ஓவியத்திற்கு அப்பால் லியானாடோ டாவின்சி 16
பௌத்த மெய்யியலில் மாத்தியமிகம்............ 20
பொருளாதார வீழ்ச்சியும், பொருளாதார.......... 24
இது பற்களின் கதை......................................... 30
முள்முருக்கு (சிறுகதை).................................. 34
ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளின் 38
புலமைப்பரிசு (குட்டிக்கதை)............................ 44
கர்ப்ப காலத்தில் கலவி...................................... 46
*Bone - A Marvel of Strengh*........................ 49
மலேரியாவின் பொது அறிகுறிகள் (தொடர்...) 51
மட்டக்களப்பு மாவட்ட கல்வி வளர்ச்சியும்....... 54
10வது மினி ஒலிம்பிக் விளையாட்டப் போட்டி... 65
பாரதி புகழ்பரப்பிய முதற்பெண் ...................... 68
குறுக்கெழுத்துப்போட்டி.................................... 71
கேட்டதும் கொடுப்பவனே................................ 75
கிழக்கொளி செய்திகள்..................................... 77
ஆக்கியோர் விபரம்.......................................... 78

இது கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் வெளியிடப்படும் ஒரு காலாண்டு சஞ்சிகையாகும்

# ஆசிரிய பீடத்திலிருந்து...

கடந்துபோன ஆண்டில்
எம் பிராந்தியத்தில் ஏற்பட்ட வெள்ள
அனர்த்தம் கசப்பான நினைவலைகளாக
எம் முன்னே வந்து போகின்றது. அதன் தாக்கம்
எம் பல்கலைக்கழகத்தையும் விட்டுவைக்கவில்லை.
தொடரும் துன்பங்களால் துவண்டுபோயுள்ள எம் வாசக
நெஞ்சங்களின் துயருடன் நாமும் பங்குகொள்கிறோம்.

எம் இதழின் அடுத்த வெளியீட்டின் தாமதத்திற்கு வழமையான சாக்குபோக்குகள் தான் காரணமாக எப்போதும் இருக்கின்றது. நிதிப் பற்றாக்குறை மிகப்பெரும் குறை என்றாலும் பல காரணிகள் தடை செய்தாலும் தாமதமாயினும் தைரியமாக இவ்விதழ் வெளிவருகிறது. இயற்கையின் மாறாச் சட்டத்தில் சூரியன் உதிக்காமல் விடுவதில்லையே! அதேபோன்று கிழக்கொளியும் மிளிராமல் போகாதுதானே!

பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பற்றி அடிக்கடி கவலைப்பட்ட நாம் கடந்த இதழின் ஆசிரிய பீடத்தின் கருத்தினை மறுபார்வை செய்யுமாறு வாசகர்களை கோருகிறோம். அதன் நோக்கமும் தாக்கமும் பல்கலைக்கழக சமூகத்தால் இன்று தெளிவாக காணக்கூடியதாக உள்ளதை யாவரும் ஒப்புக்கொள்வர். இதுவே ஊழியர் சங்கத்தின் மாறாத நிலைப்பாட்டை ஆணித்தரமாகவும் பறைசாற்றி நிற்கிறது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொடரும் ஒவ்வொரு காலடியும் வளர்ச்சிப் பாதையை ஒட்டியதாகவும் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதாயும் எம் சார்ந்த சமூகத்தினது பாரம்பரிய கலாசார தொன்மையையும் மேன்மையையும் பேணிக்காக்கக் கூடிய ஓர் உன்னத இடமாக மாற்றியமைப்பதாக இருக்குமானால், அதுவே எம் சார்ந்த சமூகத்திற்கு நாம் செய்யும் அளப்பரிய கைமாறாகும்.

இவ்விதழின் வெளியீட்டில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு மனமார்ந்த வருத்தத்தை தெரிவித்து உங்கள் ஆக்கங்களையும் ஊக்கங்களையும் தொடர்ந்து தருமாறு வேண்டி விடைபெறுகிறோம்.

நன்றி.

31.02.2011

ஆசிரியபீடம்
கிழக்கொளி

# அறுவைச் சிகிச்சையின் தந்தை சுஸ்சுருதர்

-புவிலோகசிங்கம் அருள்நேசன் [8] -

**(சென்ற இதழின் தொடர்ச்சி.....)**

அதன் பிறகு ஒட்டப்பட்ட சதையின் மீது பதங்கம், யஷ்டிமதுகம், ரசஞ்ஜனம் ஆகிய மருந்துப் பொருள்களை ஒன்றாகச் சேர்த்துத் தூளாக்கி அந்தப் பொடியை மூக்கின் மீது படியுமாறு வைத்தார்கள். சுத்தமான எள்ளிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயை பஞ்சின் மீது தெளித்துவிட்டார்கள். சுத்தமான நெய்யைக் குடிக்கக் கொடுத்தார்கள். அத்துடன் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, உண்ட உணவு செரித்தவுடன் பேதி மருந்து கொடுத்தார்கள். புது மூக்கு சரியாகப் பொருந்தியிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டார்கள். சரியாகப் பொருந்தாவிட்டால் ஒட்டாத பகுதியை மீண்டும் ரணப்படுத்தி விட்டு, காயம் ஆறிய பின்னர் மூக்கு சுருங்கிப் போய்விடாமலும் நீளம் குறைந்துவிடாமலும் நீட்டி விடப்பட்டது. அப்படியும் நீளம் போதாமல் இருக்குனால் மீண்டும் அறுவை சிகிச்சை செய்தார்கள். ஆறிய பிறகு பெரியதாகவோ, தொய்வுகண்டோ இருந்தால் தேவையற்ற பகுதி சீவி அகற்றப்பட்டது. இந்த முறை நீண்டகாலமாக பாரதத்திலிருந்து வந்திருக்கிறது.[13]

இக் குழைம ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை, இன்று குழைம ஒட்டுறுப்பு சிகிச்சை முறையின் (Plastic Surgery) கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சையின் மாதிரிகளே பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைக்குத் தூண்டுதலாக இருந்தது என்று பக்ச்சி (Bagchi) என்பவர் குறிப்பிட்டுள்ளார்.[14] குறிப்பாக 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலிய மருத்





துவர் காஸ்ப்பாரோ டால்யாககோஸி (Gaspara Tagliacozzi) என்பவரே மூக்கைச் சீராக்கும் அறுவைச் சிகிச்சையினை முதல் முதலில் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.[15] எனினும் 1814ஆம் ஆண்டு சுஸ்சுருத ஸம்ஹிதாவில் கூறப்பட்டுள்ள அறுவை சிகிச்சை முறைகள் முதன் முதலில் பிரசுரிக்கப்பட்டன. இதைப் படித்த ஐரோப்பிய பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முன்னோடியான டாக்டர் ஜோசப் காண்டன்டைன் கார்ப்பு (Dr. Joseph Constantine Carpue) என்பவர் இம்முறைகளைத் தனது வைத்தியத்தில் பயன்படுத்தி பல வெற்றிகளைக் கண்டார்.[16]

## கண்படல மாற்று அறுவைச் சிகிச்சை (Transplantation of Eye -balls)

சுஸ்சுருத ஸம்ஹிதாவில்

கண் படல மாற்றுச் சிகிச்சை (Cataract operation–Couching) பற்றி, செய் முறை விளக்கத்துடன் விரிவாக விவ ரித்துள்ளார். குறிப்பாக சுக்லாதாஸ் (Sukla Das) என்பவரின் கருத்துப்படி சுஸ்சுருத ஸம்ஹிதாவில் காணப்படும் பெருமளவிலான கண் விழிகளின் மறு பொருத்துதல் தகவல்கள் பௌத்தர்க ளின் மருத்துவ ஏடுகளிருந்து பெறப் பட்டவையாகும். சுஸ் சுருதஸம்ஹிதா வின் 18 பகுதிகள் கண் சம்பந்தமான விடயங்களை விளக்குகின்றன. இதில் 76 வித்தியாசமான கண் நோய்களும் 51 வகையான கண் அறுவைச் சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளமையி னைக் காணலாம்.[17] மேலும், கண்படல மாற்று அறுவை சிகிச்சை செய்யும் முறையை சுஸ்சுருதர் பின்வருமாறு விவரித்திருக்கின்றார். "குறிப்பாக கண் ணின் மீது ஊதி தன் மூச்சின் வெப் பத்தினால் சூடேற்றிக் கொண்டிருந் தார். வைத்தியர் தன் பெரு விரலால் நோயாளியின் மூடியிருந்த கண்ணை லேசாகத் தேய்த்துவிட்டு அவனைக் கீழே தலையை நோக்கி இருக்கும் படி கூறினார். பின்னர் தலையை இரு உதவியாளர் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள கூரிய மெல்லிய கருவி ஒன்றை நோயாளியின் கண்ணில் உள்ளே செலுத்தினார் வைத்தியர். இக் கருவி கண்ணின் கருமணிக்கு மிகவும் அருகே சென்றதும் கருவை போன்ற வஸ்து நோயாளியின் மூக்கை நோக் கித் தள்ளப்பட்டது. நோயாளி சளி சிந்துவது போன்று அந்தப் பொருளை மூக்கிலிருந்து வெளியே விட்டான். பின் னர் நோயாளி கண்ணை வீழ்த்தப் பார்த்த போது அதுவரை மங்கலாயி ருந்த பார்வை மாறிப் பொருட்கள் தெளி வாய்த் தெரிந்தது" என்னும் வருண னையும் சுஸ்சுருத ஸம்ஹிதாவில் கூறப்பட்டுள்ளமையினைக் காணலாம். மேலும் மருத்துவர் கருவியைக் கண்ணி லிருந்து வெளியே எடுத்து கண்ணை சிறிது கொழுப்புச் சத்து தடவிய பஞ் சால் மூடிக் கட்டுப் போட்டார். நோயா ளியின் வலி தீர மூலிகைச் சாற்றைக் குடிக்கச் செய்து அவனை வீட்டின் ஒரு பகுதியில் படுக்கச் செய்தார். மற்றுமொரு கண் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிவுற்ற திருப்தியுடன் வீட்டின் வெளியே காத்திருக்கும் இதர நோயாளியிடம் சென்று விசாரித்தார். கண்ணில் பூ விழுந் ததை (Cataract surgery) நீக்குவதற்கு கண் டாக்டர் செய்யும் அறுவை சிகிச்சை யின் விளக்கமே இதுவாகும். இவை யாவும் கண் அறுவை சிகிச்சை தொடர் பாக சுஸ்சுருத சம்ஹிதையில் காணப் படும் விளக்கங்களாகும்.[18]





**மூளை அறுவை சிகிச்சை :**
**(Nauru Surgery)**

மண்டையோட்டு அறுவை சிகிச்சையிலும், சுஸ்சுருதர் சிறந்து விளங்கியதாக கூறப்படுகின்றது. மனித இனக் கரு மூளை பற்றி சுஸ்சுருதர் அளித்துள்ள விளக்கங்கள் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் கேஸ்வானி(Keswani) பின்வருமாறு வியந்து பாராட்டுகின்றார். அதாவது "மனித இனக் கரு மூளையானது அது சினையுற்ற காலம் முதல் முதிர்ச்சியுறும் காலம் வரை அடைகின்ற பல்வேறு வளர்ச்சி நிலைகள் பற்றி கூறப்பட்டுள்ள விளக்கங்கள் சுஸ்சுருதரின் நுண்ணோக்கு மதிநுட்பத்தை வியந்து பாராட்டும் வகையில் அமைந்துள்ளன" என்கிறார். குறிப்பாக கருப்பையில் குழந்தை இருக்கும் நிலை, பிரசவத்தின் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள், அதை சமாளிக்கும் விதம், குழந்தையின் சருமம், சளிப்படலம், இரத்தக் குழாய்கள், எழு குழல்கள், எழு தாதுக்கள், தசைகள், நரம்புகள், எலும்புகள், மூட்டு தசை நார்கள், மர்ம உறுப்புக்கள் போன்றன படிப்படியாக உருவாகி வளர்கின்றமை விளக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.[19]



இதற்காக பரிசோதனையில் கருவியல் (Embryology) அல்லது கருச் சிதைவு (Abortion) பற்றி அறிந்திருக்க வேண்டும். இதனையே பண்டைய இந்திய மருத்துவர்கள் "மிகவும் நுண்ணிய தோற்றமுடைய இருபாலணு இணைவுப் பொருளையும் (Zygote) கூட விளக்கிக் காட்டும் திறன் கொண்ட ஒரு வகை ஒளியியல் கருவி (Optical Instrument) யினை வைத்திருக்க வேண்டும்" என C.Dwaravanath என்பவர் "Medicine in Ancient India" என்ற கட்டுரையில் கூறியுள்ளமையினைக் காணலாம்.[20] மேலும், இவர் கி.பி 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய மருத்துவர்கள் கண்டு பிடித்த இரத்த ஓட்டச் சுழற்சியும் கரு முளையில் நிகழும் தாயின் இரத்த ஓட்டச் சுழற்சியும் கூட பண்டைய இந்திய மருத்துவர்கள் பல காலம் முன்னதாக அறிந்தவையே எனக் கூறுகின்றார்.

**சிறுநீரகக் கல் அகற்றும் அறுவை சிகிச்சை** (Lithotomy)

சுஸ்சுருதர் விவரித்துள்ள மற்றுமொரு அறுவை சிகிச்சை முறையானது சிறுநீரகப்பையில் அடைத்துக் கொள்ளும் கற்களை (Removal of stone in urinary tract or Lithotomic) அகற்றும் முறையாகும். குறிப்பாக ஆசன வாயிலுள்ள முளை, மூல நோய், சிறு நீரகத்தில் கல், குடல் அடைப்பு, குடலில் ஓட்டை விழுதல் ஆகியவற்றுக்குக்கெல்லாம் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறுகின்றார்.

கி.பி முதலாம் நூற்றாண்டில் ரோமானிய மருத்துவரான செல்லஸ் என்பவர் எழுதிய நான்கு பாகங்கள் கொண்ட மருத்துவ நூலில் இந்த சிகிச்சை பற்றிக் காணலாம்.[21] மேலை நாட்டு மருத்துவத்தில் இச் சிகிச்சை பற்றி நாம் காணும் முதல் குறிப்பு இது வாகும். இதற்குப் பல நூற்றாண்டுக ளுக்கு முன்னரே சுஸ்சுருதரின் சுஸ் சுருத சம்ஹிதையில் இம்முறை பற்றி குறிப்பிட்டுள்ளமையினைக் காணலாம். இவர் கூறும் முறை மிகவும் நுட்பமாக விவரிக்கப்பட்டுள்ளது. தன் விரல்களில் கொழுப்பைப் பூசிக்கொண்டு நகத்தை வெட்டிய பின் நோயாளியின் ஆசன வாய் வழி (Anal Fistula) சிறு நீரகத் தையடைந்து தசைகளை வெட்டிக் கல்லை வெளியே எடுக்க வேண்டும் என அவர் எழுதியுள்ளார். எனினும் 15ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் பியெர் பிராங்கோ (Pierre Franco) என்னும் பிரெஞ்சு அறுவைச் சிகிச்சை மருத்துவரே சிறுநீரப் பைக் கல்லை எடுக்கும் அறுவை சிகிச்சையினை முதல் முதலாக மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது.[22]

## வயிற்றுறுப்பு பிரசவ அறுவைச் சிகிச்சை முறை : (Caesarian operation)

தாயின் கருப்பையில் இருந்து குழந்தை வெளியே வர கஷ்டப்பட் டால் அறுவைச் சிகிச்சை மூலம் குழந் தையை வெளியே எடுப்பது இப்பொ ழுது (Caesarian operation) எனக் கூறப்படும் உரோமானிய காலத்து முறை என்பதை சிசேரியன் எனும் தொடர் காட்டுகின்றது.[2] ஆனால் சுஸ் சுருத சம்ஹிதையில் இம்முறை விளக் கப்பட்டிருக்கின்றமையைக் காண லாம். கருப்பையில் இருக்கும் சிசு எட்டு வகையான வழிகளில் இருக்க லாம் (Abdominal Presentation) என் றும் அதற்கான முறைகளையும் தன் னுடைய நூலில் சுஸ்சுருதர் விளக் கியுள்ளார்.[24]

## முடிவுரை:

மருத்துவத்தில் காணப்படும் பல முக்கிய சிந்தனைகள் கிரேக்க, உரோமானிய நாகரிகத்துக்கு மட்டும் சொந்தமாகக் காட்டும் வழக்கம் மேலை நாடுகளில் வழக்கமாக உள் ளது. ஆனால் இந்து மருத்துவக் கலை இந்த இரண்டு நாகரிகங்களுக் கும் முன்னமே செழிப்பாக வளர்ந் துள்ளது என்பதை சரகர், வாக் பட்டர், ஆத்ரேயர், சுஸ்சுருதர் போன்றோரின் நூல்கள் நமக்குச் சான்றாகவுள்ளன. இவர்களுள் சமுதாய நோக்கோடு செயல்பட்ட இந்து மெய்ஞானியான சுஸ்சுருதர் அறுவைச் சிகிச்சையின் முன்னோடியாக ஏற்றுக்கொண்டு பாராட்டுவது நம்மைப் பெருமைப்படுத் துவதாகும். குறிப்பாக இவருடைய அறுவை முறைகள் மிகவும் நூதன மானவை. உடலின் உறுப்புக்களைச் சேதமில்லாமல் வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை என்று பிற்காலத்தில் மேற்கத்திய மருத்துவர்களால் வியந்து பாரட்டப்பட்டவையாகும். இவ்வாறு மேனாட்டு அறிவியலின் சிந்தனையின் சுவடு கூறப்படாத காலத்திற்கு முற் பட்ட சுஸ்சுருத சம்ஹிதையில் மருத் துவ அறிவியல் கருத்தமைவுகளைக் கொண்டு, இந்து இலக்கியங்களின்

விடயப் பரப்பை வெறுமனே சமயத் தளத்திலிருந்து மட்டும் நோக்காமல் இந்து இலக்கியங்களின் உண்மை யான வீச் செல்லையினை அறிவி யல் ரீதியில் நோக்க வேண்டியது முக்கியமானதாகும்.

**(முற்றும்)**

**அடிக்குறிப்புக்கள் :**


13. http://www.treasurehouseofagathiyar.net/23000/23028.htm
14. Banchi.k.Asoke, (1997), **medicine in medieval India – 11 th – 10 th centuries**, konark publishers pvt ltd , New Delhi.
15. http://en.wikipedia.org/wiki/Sushruta_Samhita
16. http://en.wikipedia.org/wiki/Gentleman%27s_Magazine
17. Neuberger Max ., A History of Medicine- Vol-I , Oxford University Press, London,Page- 57-58.
18. M.A.Priya dnarsini,(2004), இந்து விழிப்பு, இலங்கை சின்மயா மிஷன், கொழும்பு. பக் -118
19. அறிவியல் முன்னோடிகள், மே. கூ. நூ. பக்-57.
20. http://www.nature.com/nature/journal/v58/n1497/abs/058233b0.html
21. மெய்ஞ்ஞானம் - விஞ்ஞானம், மே. கூ. நூ. பக்-58.
22. கலைக் களஞ்சியம் (தொகுதி- 8), மே. கூ. நூ. பக்-41.
23. NIRANJANA DEVI.R, (2004) TENNINDIYA MARUTHUVA VARALARU, International Institute of tamil studies, Chennai. http://www.faqs.org/health/topics/50/Sushruta.html




**ஆ**ணும் பெண்ணும் இணைவதே திருமணம். அதுவே இறைவனளித்த வெகுமானம். ஆனால் ஸ்வீடன் நாட்டில் ஒத்த பாலினத்தோர் திருமணம் செய்து வாழலாம் என்று கடந்த 2009ம் வருடம் அந்நாட்டின் முக்கிய "லூதரன் சேர்ச்" (தேவாலயம்) அங்கீகாரம் அளித்துள்ளதாம். உலகின் மிகப்பெரிய தேவா லயங்களில் ஒன்றான இதுவே தான் முதன் முதலில் ஆணும் பெண்ணும் மட்டுமே திரு மணத் தில் இணையலாம் என்ற பாரம்பரியக் கோட்பாட்டை மீறிச் செயற்பட்டதென அறிக் கைகள் கூறுகின்றன.

" பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க"

***Dagens Nyheter (News Paper)***


## ஆச்சரியமான உண்மை



**வ**ருடத்திற்கு வருடம் அமெரிக்கா வில் அதிக விற்பனையாகும் ஒரே புத் தகம் பைபிளே! 90%மான மக்கள் ஏற் கனவே ஒரு பைபிளையாயினும் கைவசம் கொண்டிருந்தாலும் 25 Million பிரதி கள் ஆங்காங்கே ஒவ்வொரு வருடமும் விற்றுத் தீர்த்துவிடுகின்றனவாம்.

***The wall Street Jounal U.S.A***

## E-mail சாதனை



**2008** ஆம் ஆண்டில் மட்டும் ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 210 பில்லி யன் e mails அனுப்பப்பட்டனவாம்.

**New Scientist - Britain**

# வாடிக்கையாளர் திருப்தியை மதிப்பிடலில் Ghost Shopping முறையின் பங்களிப்பு

- S.நீரஜா (b) -

## முறையின் பங்களிப்பு

சந்தைப்படுத்தல் செயன்முறை ஒன்றின் ஆரம்பமாகவும், முடிவாகவும் வாடிக்கையாளன் காணப்படுகின்றான். அத்துடன் போட்டிச் சந்தையொன்றின் அரசனாக வாடிக்கையாளன் விளங்குகின்றான். இவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் வாடிக்கையாளன் திருப்தியானது எந்த ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும் முக்கியத்துவமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனால் நிறுவனங்கள் வாடிக்கையாளன் திருப்தியை மதிப்பீடு செய்வதற்கு பல்வேறு செயற்பாடுகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரிப்பதில் கூடிய கவனத்தை செலுத்துகின்றனர். இவ்வகையில் வாடிக்கையாளர் திருப்தி என்றால் யாதென நோக்குவோமாயின், **வாடிக்கையாளர் திருப்தி** என்பது குறித்த ஒரு பொருள் மீது வாடிக்கையாளன் எதிர்பார்த்த பெறுபேற்றையும், அதனை நுகரும் போது பெறப்பட்ட விளைவையும் ஒப்பீடு செய்து பெறப்படுகின்ற உணர்வு பூர்வமான நிலை ஆகும்.

ஒரு வாடிக்கையாளன் ஒரு பொருளை நுகரும்பொழுது 3 வகையான திருப்தி நிலைகளை அடைகின்றான்.

1. ***உச்ச திருப்தி நிலை:*** குறித்த ஒரு பொருளை நுகரும்பொழுது கிடைக்கும் பெறுபேறானது நுகர்வோனது எதிர்பார்க்கையை விட அதிகமாக இருக்கும் நிலையாகும்.

2. ***திருப்தி நிலை:*** குறித்த ஒரு பொருள் தொடர்பான வாடிக்கையாளன் எதிர்பாக்கையும் நுகர்வினூடான திருப்தியும் சமனாக காணப்படும் நிலை.

3. ***அதிருப்தி நிலை:*** குறித்த ஒரு பொருள் தொடர்பான வாடிக்கையாளன் எதிர்பார்க்கையை விட நுகர்வின் மூலம் கிடைக்கப் பெறும் விளைவு குறைவாக காணப்படும் நிலை.


இங்கு வாடிக்கையாளன் எதிர்பார்ப்பானது அவனது கடந்தகால அனுபவங்கள், நண்பர்கள், உறவினர்களது கருத்துக்கள், சந்தைப்படுத்துனர் மற்றும் போட்டி நிறுவனங்களினது உறுதிமொழிகள் என்பவற்றினால் ஏற்படுத்தப்படுகின்றது. சந்தைப்படுத்துனர்கள் வாடிக்கையாளர் மத்தியில் பொருள் தொடர்பான எதிர்பார்ப்பினை உச்ச அளவில் உயர்த்தும் பொழுது அது பூர்த்தியாகாதவிடத்து நிறுவனம் மீதான ஒரு தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தக்கூடும்.

எனவே தற்கால சந்தையை வெற்றி கொள்ள வேண்டும் எனின் வாடிக்கை யாளன் எதிர்பார்க்கை, வாடிக்கையா ளன் திருப்தி, நிறுவன தொழிற்பாடு என்பவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். வாடிக்கையாளரை மைய மாக கொண்ட நிறுவனங்களின் வாடிக் கையாளர் திருப்தி என்பது அந் நிறு வனங்களின் இலக்காகவும் சந்தைப் படுத்தல் கருவியாகவும் காணப்படு கின்றது.


வாடிக்கையாளர் திருப்தியை மதிப்பிட நிறுவனங்களில் பல முறை கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒரு முறையாகவே **Ghost Shopping** முறை பின்பற்றப்பட்டு வரு கின்றது. இம்முறையின்கீழ் வெளிநபர் கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அவர் களால் குறித்த நிறுவனத்தினதும் அதன் போட்டி நிறுவனங்களினதும் பொருட்கள் ஒப்பீடு செய்யப்பட்டு பின் னர் குறித்த நிறுவனத்தின் பொருட் களில் காணப்படும் சாதகமான, பாதக மான காரணிகள் அடையாளம் காணப் பட்டு அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டப்படுகின்றது.

அதே சந்தர்ப்பத்தில் இக் Ghost shoppers வாடகைக்கு அமர்த்தப்படா மல், நிறுவன முகாமையாளர் மற்ற வர்கள் தங்களை அறியாவண்ணம் தமது நிறுவனங்களுக்கும் போட்டி நிறுவனங்களுக்கும் சென்று வாடிக் கையாளராக தமது அனுபவத்தைப் பெற்று அதற்கேற்ப செயலாற்றும் சந் தர்ப்பங்களும் உள்ளன. சில சந்தர்ப் பங்களில் முகாமையாளர் தமது நிறு வனத்திற்கு ஒரு வாடிக்கையாளனாக தொலைபேசி அழைப்பினை ஏற்ப டுத்தி தமது பிரச்சினைகளை எடுத் துக்கூறி அதற்கு ஊழியர்கள் எவ் வாறு பதிலினை அழிக்கின்றனர் என்பதனை அறிய முற்படுகின்றனர். உதாரணமாக திரைப்பட தயாரிப்பா ளர்கள் ஓர் படத்தினை முதன் முத லாக வெளியீடு செய்யும் பொழுது அதை பார்வையாளர்கள் அறியா வண்ணம் தானும் ஓர் பார்வையாள னாக இருந்து பார்வையிட்டு படம் தொடர்பான ரசிகர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டினை அறிந்து கொள்ள முற்படுகின்றனர்.

**Ghost Shopping** முறையா னது வெளிநாடுகளில் வாடிக்கை யாளர் திருப்தியை மதிப்பிட பயன்ப டுத்தப்பட்டாலும் கூட இலங்கையைப் பொறுத்தவரை இம்முறை பிரபல் யம் அற்ற ஒன்றாகவே இருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. ஆனா லும் இதன் பயன்பாடு அதிகரித்து வரும் போட்டிச் சந்தையில் அதிக ரிக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.



**நர்ஸ் :** *டாக்டர், கேட்டீங்களா சேதியை, இன்று பின்னேரம் 4 மணிக்கு 'ஆபரேஸன்' செய்ய திகதி கொடுத்திருந்தோமே, அந்தப் 'பேஸன்ட்' காலை 10.00 மணிக்கு வாகன விபத்தில் இறந்துவிட்டானாம்.*



**டாக்டர் :** *என்ன செய்வது, அவனது காலம் இன்று எப்படியாவது சாகவேண்டும் என்று உள்ளதாக்கும்.*

ஜெனிற்றா

# இதயத்தின் முடியுரு நாடியில் ஏற்படும் நோய்கள்

## CORONARY ARTERY DISEASE

*- Dr.சர்மிளா இஸ்மாயில் [c], Dr.R.ராஜேந்திர பிரசாத் [d] -*

இதயத்திற்கு குருதியினை வழங்கும் முடியுரு நாடி எனும் நாடிகளில் ஏற்படும் மாற்றங்களினால் இந்நோய் ஏற்படுகிறது. நாடிகளின் உள் விட்டம் பல்வேறு காரணிகளினால் குறைவடைந்து செல்வதே இதற்கான பிரதான காரணமாகும். இதனை கவனத்திற் கொள்ளாமல் விடுவதன் காரணமாக மாரடைப்பு (Heart Attack) ஏற்பட்டு மனிதன் இறந்து போகவும் நேரிடலாம்.

முடியுரு நாடிகளின் (Coronary artery) உள்விட்டம் குறைவடைவதற்கான பல காரணிகளில் கொலஸ்திரோல் எனும் வகையான கொழுப்பு படிவு ஒரு முக்கிய காரணியாகும் (Cholesterol Plaques).

இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப நிலைகளில் நெஞ்சு வலி ஏற்படுவதில்லை. பின்பு காலம் செல்லச் செல்ல மற்றும் கடுமையான வேலைகள் செய்யும் சந்தர்ப்பங்களில் நெஞ்சுப்பகுதியில் ஒரு வகையான இறுக்கம் போன்ற உணர்வு ஏற்படும். இது நெஞ்சு வலியாகும். இவ்வலியானது நெஞ்சுப்பகுதியில் இருந்து இடது கைப் புயத்தின் உட்பக்கம் நோக்கி அல்லது தாடையை நோக்கி பரவக் கூடும். அக்கண நேரத்தில் செய்து கொண்டிருக்கும் வேலையை நிறுத்தியதும் வலி தானாகவே குறைந்து விடும்.

இவ்வாறு நெஞ்சுவலி ஏற்படும் தடவைகள் கூடிச்செல்லும் போது நோயின் தன்மையும் கூடிக்கொண்டே செல்லும். தொடர்ச்சியாக வலி ஏற்படுமானால் இறுதியில் மாரடைப்பு ஏற்பட்டுவிடும்.

### இந்நோயினை உக்கிரமடையச் செய்யும் காரணிகள்

1. வயது (> 45)
2. பரம்பரை (Genetics)
3. உடல் நிறை கூடிய நிலை
4. சர்க்கரை வியாதி
5. உயர் இரத்த அழுத்தம்
6. வேலை, தேக அப்பியாசமற்ற சுகபோக வாழ்க்கை முறை (Sedentary life style)
7. சில ஓமோன்களின் தொழிற்பாடு (Endocrinological disease)
8. புகைத்தல்

மேற்கூறப்பட்ட காரணிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது இந்நோய் ஏற்படும் அபாயத்தை தடுக்கலாம். இது முதன்மையான தடுப்பு முறை எனக் கூறப்படுகின்றது. (Primary Prevention)

மேலும், இந்நோய் ஏற்பட்டுவிட்ட பின்னரும் கூட மாரடைப்பு ஏற்படும் அபா

யத்தை தடுக்க முடியும். இது இரண்டாவ தான தடுப்பு முறை (Secondary Prevention) எனப்படும். மாரடைப்பு ஏற்பட்ட ஒருவர், மீண்டும் ஒரு தடவை ஏற்படுவதைக் கூடத் தடுக்க வழிமுறைகள் உள்ளன. (Tertiary Prevention)

ஆகவே, ஒருவருக்கு நெஞ்சுவலி ஏற்படும் போது அது மாரடைப்பினால் ஏற்பட்ட நெஞ்சுவலியா என்பதை கண்டறிந்து ஊர்ஜிதம் செய்தல் அவசியமாகின்றது. ஏனெனில், சாதாரண நெஞ்சுவலிக்குரிய வைத்திய பரிகாரங்களும், மற்றும் மாரடைப்புக்கான பரிகாரங்களும் வேறுபட்டவையாக உள்ளன. மேலும், சாதாரண நெஞ்சுவலி ஏற்பட்ட ஒருவர் அதனை அலட்சியப்படுத்துவதனால் அவருக்கு எந்தவித பாதிப்பும் அந்த நிலைமையில் காணப்படாது. அதேவேளை மாரடைப்பு ஏற்பட்ட ஒருவருக்கு அதற்குரிய சரியான வைத்திய ஆலோசனைகளும் செயன்முறைகளும் வழங்கப்படாதவிடத்து அவரின் உயிர் பிரியும் நிலை கூட அக்கணமே ஏற்படும் வாய்ப்புள்ளது. இதனால், வைத்திய ஆலோசனைய்ய உடனே நாடுவது மிக மிக அவசியமாகின்றது.

மாரடைப்பை கண்டறிவதற்காக தற்காலத்தில் பல இலகுவானதும் நம்பகரமானதுமான பரிசோதனைகள் புழக்கத்தில் உள்ளன. அவை

## 1. E.C.G (Electro Cardigran)

இதயத் தொழிற்பாட்டினை காகிதம் ஒன்றில் அலை வடிவில் பதிவு செய்து கொள்ளும் ஒரு பரிசோதனையாகும். இது இலகுவானதும், விரைவானதும் மற்றும் நம்பகமானதும்.

சாதாரண நெஞ்சுவலி, மாரடைப்பு போன்றவற்றிற்கு E.C.G அலை வடிவில் மாற்றங்கள் காணப்படும். இம்மாற்றங்கள் தென்பட்டால் இந்நோய்களை இலகுவில் உறுதி செய்யலாம். மேலும், அப்பியாச (Excercise E.C.G) எனும் சோதனையின் மூலம் நோயாளியின் இருதய தொழிற்பாட்டினையும் ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

## 2. Echocardiogran

இந்தசோதனையின் மூலம் இதயத்தின் உடற் கூறமைப்பு (Anatomy) அதன் தொழிற்படும் தன்மை, தொழிற்படும் அளவு போன்ற விடயங்களை வைத்தியரினால் அறிந்துகொள்ள முடியும். இதுவும் ஒரு எளிமையான நம்பகரமான ஒரு சோதனையாகும். உயர் தொழில் நுட்ப முறைகளின் பாவனையால் ஓரளவு விலை அதிகமாக இருக்கும்.

மேற்கூறிய 02 சோதனை முறைகளும் விஞ்ஞான உலகில் இதயத்திற்கான வைத்திய நிபுணர்களின் "வலது கை" என்று கூறினாலும் மிகையாகாது.

இந்நோய்க்கான சிகிச்சைகளை பின்வரும் அடிப்படையில் மேற்கொள்ளலாம்.

1. **துரித சிகிச்சை**
   ஏற்பட்டிருக்கும் அடைப்பிற்குரிய உடனடி சிகிச்சை. இதன்மூலம் அடைப்பு கரைக்கப்பட முடியுமானதாயின் கரைக்கப்படும். மேலும் நோயாளியின் வலி மற்றும் அசௌகரியங்கள் நீக்கப்படும்.
2. **நாடியினதும் இதயத் தசையினதும் புனரமைப்பு**
3. **ஆபத்தான காரணிகளின் தடுப்பு**

4. **இரண்டாம் தடுப்பு முறை** (Secondary Prevention) இதன் மூலம் மீண்டும் ஒருமுறை மாரடைப்பு ஏற்படு வதைத் தடுத்தல்.

சிகிச்சை முறைகளை 02 வகையா கப் பிரிக்கலாம்.

1. மருத்துவ சிகிச்சை முறை
   * மருந்து வகை மூலம்
   * சத்திர கிசிக்சை முறை
2. மருத்துவமற்ற சிகிச்சை முறை

## நோயினை உக்கிரப்படுத்தும் காரணி களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

1. 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் வைத் திய ஆலோசனையைப் பெற்று அதன் படி தமது உடலைப் பரிசோதனை செய்து பரிசோதனை அறிக்கைகளை பெற்றிருத்தல் வேண்டும். (Full body check up with reports)

2. சர்க்கரை வியாதி (Diabetis), உயர் குருதி அழுத்தம் (High Blood Pressure, அதிகரித்த உடல் பரு மன் (Obesity) போன்ற காரணிகளை கட் டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும்.

3. இரத்தத்திலுள்ள கொழுப்பின் அள வினை அளவிடும் சோதனைகளை 06 மாதத்திற்கு ஒரு தடவை செய்து கொள்ள வேண்டும். (Lipid Profile) அதன் அளவுகள் சாதாரண வீச்சை மிஞ்சிக் காணப்படும் போது அதனை குறைக்கும் வழிமுறைகளை வைத் திய ஆலோசனைப்படி மேற்கொள் ளல் வேண்டும்.

4. வாழ்க்கை முறையை மாற்றியமைத் தல் மிக முக்கியமாகும். வாழ்க்கை யில் மனச்சோர்வு, பதட்டம் என்பன அடிக்கடி அல்லது தொடர்ச்சியாக காணப்படுமாயின் அவற்றைக் குறைத் துக் கொள்ள வேண்டும்.

5. சிறு வயதிலிருந்தே உணவுக்கட்டுப் பாட்டை கையாள வேண்டும். தேவை யானளவு மாத்திரம் மாப்பொருள், எண் ணெய், கொழுப்புணவுகளை உட் கொள்ள வேண்டும். அளவுக்கதிக மாக இவற்றை உட்கொள்ளக்கூடாது. உணவில் சேர்க்கும் உப்பின் அள வையும் அளவாக வைத்தல் வேண்டும்.

   இதன் காரணமாக மிகையான உடல் நிறையை தவிர்ப்பதுடன் (Obesity) அதன் விளைவாக ஏற்படக்கூடிய நிலைமைகளையும் தடுக்க முடியும்.

6. தேக அப்பியாசமற்ற சுகபோக வாழ்க் கைமுறையே (Sedentary life style) இன்றைய உலகில் அதிகமாக காணப் படுகின்றது. ஆகவே, எமது சந்தர்ப்பங் களுக்கேற்ப குறித்த ஒரு நேரத்தில் தவறாமல் தேக அப்பியாசம் செய்து கொள்ளல் வேண்டும். 20-30 நிமிடங் கள் வேகமாக நடப்பது கூட ஒரு நல்ல தேக அப்பியாசமாகும். இது உடல் உறுப்புகளுக்கு தெம்பை ஊட்டுகின்றது.

7. புகைபிடித்தலை முற்றாக தவிர்க்க வேண்டும்.

## மருந்து முறையிலான சிகிச்சை முறைகள்

1. மருந்து வகை
2. மருந்தின் அளவு, தடவைகள்
3. பாவிக்க வேண்டிய கால அளவு

## மருந்து வகைகளின் தேர்வும் நோக்கமும்

1. இதயத்திற்கு திரும்பும் இரத்த அளவைக் குறைப்பதன் மூலம் இதயத்தின் வேலைப்பழுவை குறைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
   Eg. GTN - நாக்கின் கீழ் வைத்தல்
2. இதயத்துடிப்பு வீதத்தை குறைத்தலும், இதயச்சுருக்கத்தின் பழுவைக் குறைத்தலும்.
3. இதயத் தசைக்கு தேவையான $O_2$ (ஒட்சிசன்) அளவைக் குறைத்தல்.
   Eg. Atenolol (blocker)
4. முடியுரு நாடியின் சுருக்கத்தைக் குறைத்தல், கால் கைகளிலுள்ள குருதிக் கலன்களின் விட்டத்தை விரிவாக்கல்
   Eg. Verapamil

## சத்திர சிகிச்சை முறைகள்

### 1. Angioplasty

இதனை மேற்கொள்ளும் முன், Angiogram எனும் சோதனை செய்யப்பட வேண்டும்.

### Angiogram ஆய்வு

குழாய் ஒன்றினை (Catheter) உடலின் மேல் தளங்களிலுள்ள நாடிகளினூடாக அனுப்பி இருதய நாடியினை அடைந்து கொண்டு, Dye (டை) ஒன்றின் உதவியுடன் காட்சித் திரைப்படுத்தி. நாடிகளிலுள்ள அடைப்புக்களை கண்டறிதலாகும். இதற்காக கையிலுள்ள நாடி அல்லது தொடைக் கருகிலுள்ள நாடிகளை பயன்படுத்தலாம். X-ray படம் போன்று இதனை காட்சிப்படுத்தும் போது, இருதய நாடிகளின் தொழிற்பாடு, மற்றும் அடைப்பு உள் இடங்களையும் அறிந்து கொள்ளலாம். இதன் பின், இரத்த நாடியின் உள் வட்டம் 70% இற்கும் அதிகமாக குறுகியுள்ள இடங்களை பெரிதாக்குவதற்கு Angioplasty செய்யப்படும்.

### Angioplasty

Balloon catheter இனை உடலின் மேற்பரப்பில் உள்ள நாடியினூடாக செலுத்தி இதய நாடியின் அடைப்பினை அடைந்ததும் , Balloon ஊதப்படும். பின்பு வெடிக்கச் செய்யப்படும். இதனால் அடைப்புக்கள் நசுக்கப்பட்டு உடைக்கப்படுகின்றன. இதன் மூலம் அடைப்புக்கள் அழிக்கப்படுகின்றன.

இச் செயன்முறையின் பின்னரும் 30-40% ஆன நோயாளிகளுக்கு மீண்டும் அடைப்பு ஏற்படலாம். ஆகவே, உடைக்கப்பட்ட இடத்தில் உடனே மெல்லிய கம்பிக்குழாய் ஒன்று வைக்கப்பட்டு மீள் குறுக்கம் தடுக்கப்படுகின்றது. (stent)

இச்சிகிச்சையினால் நோயாளியின் நெஞ்சுவலி மறையலாம். ஆனால், தொடர்ந்து இக்குழாய்களை விரிவாக்கக்கூடிய மருந்துகளை நோயாளிக்கு தவறாமல் வழங்க வேண்டும்.


### 2. இதயத்தை திறந்து மேற்கொள்ளும் சத்திர சிகிச்சை

இதய நாடியிலுள்ள அடைப்பினைக் கடந்து வேறு பாதையூடாக இரத்தம் செல்லும்படியாக மாற்றிக் கொள்வதாகும். (Coronary Artery Bypass grafting)

இதற்காக உடம்பில் வேறு பகுதிகளிலுள்ள ஒரு நாளத்தினை ( கால் நாளம்) எடுத்து இதய நாடியின் அடைப்புள்ள பாகத்திற்கு முன்னும் பின்னுமாக உள்ள பகுதிகளை இணைத்து விடுவர். இதன் மூலம் இரத்த அடைப்பை தாண்டிச் செல்ல முடியும். வழக்கமாக, பெரிய நீளமான (Aorta) தொகுதிப் பெருநாடியினை அடைப்புள்ள இதய நாடியுடன் இணைத்து விடுவர்.

ஆகவே, பெருகி வரும் இந்நோயின் தாக்கத்தை மேற்கூறப்பட்ட வழிமுறைகளை கையாள்வதன் மூலம் தடுத்து, Coronary artery disease அபாயமற்ற எதிர்கால சந்ததிகளை கட்டியெழுப்ப பிரயத்தனம் செய்வோமாக.

## அழகுக் குறிப்புகள்



- முகத்திற்கு மேக்கப் போடுவதற்கு முன் ஒரு துண்டு ஐஸ் எடுத்து முகம் முழுவதும் நன்கு தேய்த்து, உலர்ந்த பின் மேக்கப் போட்டால் நீண்ட நேரம் வரை அழியாமல் இருக்கும்.
- எண்ணெய் பசையுள்ள சருமம் பெற்றவர்கள் வெயில் காலங்களில் முகத்திற்கு எலுமிச்சை சாறு தடவலாம்.
- கண் இமைகளுக்கு தவறாமல் விளக்கெண்ணை தடவி வந்தால் இமை முடி நீண்டு அழகாக வளரும்.
- தண்ணீரில் எலுமிச்சை சாறு அல்லது வினிகரைக் கலந்து கூந்தலை அலசினால் கூந்தல் பள பளப்பாக இருக்கும்.

## சமையற் குறிப்புக்கள்



- ரவையை சிறிது எண்ணெய் விட்டு வறுத்து வைத்தால் பூச்சி புழு வராது.
- தோசை மொறுமொறுப்பாக இருக்க சிறிதளவு வெந்தயத்தை ஊறவைத்து மாவுடன் சேர்த்து அரைக்க வேண்டும்.
- பருப்பு வேக வைக்கும்போது சிறிதளவு எண்ணெய் சேர்த்தால் பருப்பு மிகவும் சுவையாக இருக்கும். அதிலுள்ள புரதமும் வெளியேறாது.
- கோதுமை மாவை நன்கு அவித்து சிறிதளவு டேயின் சால்ட்டைக் கலந்து வைத்தால் வண்டுகள் வராது.

தொகுப்பு – திருமதி. செ. சிதம்பரேசன்

# நீங்கள் முன்னேறச் சில யோசனைகள்

- செல்வி எஸ்.பூபாலபிள்ளை (e) -

வீர வரலாறு படைத்த சாதனையாளர்கள், வாகை சூடியவர்கள், சான்றோர்கள் ஆகியோரின் வாழ்க்கை முறையை உளவியலாளர்கள் ஆய்ந்து சில வகையான பண்பு நலன்கள் அத்தகையோரிடம் பரிமளித்ததை கண்டனர். இத்தகைய ஆற்றல்களைப் பற்றியும் குணவியல்புகளைப் பற்றியும் திருவள்ளுவர் அழகுடன் எடுத்தியம்பியிருக்கிறார். உளவியலிலுள்ள கோட்பாடுகளில் ஒன்று சமூகக் கற்றல் கோட்பாடு, ஒருவன் சமூகத்தில் இடைவினை புரிவதால் அவனுடைய நடத்தையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது இதன் அடிப்படைக் கருத்தாகும். சிலர், தலை விதி, கர்மம், நேரம், ஆள்பலம் எனப் புறக்காரணிகளைத் தங்களின் வெற்றிக்கும் தோல்விக்கும் காரணங்களாகக் கூறுவர். மாறாகச் சிலர், தங்களுடைய முயற்சியின்மை, ஊக்கமின்மை, சோம்பேறித்தனம் ஆகியவற்றை நொந்து கொண்டு அவற்றைச் செம்மைப்படுத்திட முனைவர். அத்தகைய மனப்பாங்கு தான் வெற்றிப் பாதை அமைத்து தரும்.



நம்மிடம் பொதிந்துள்ள திறமைகளை நான்கு வகையாக்குவர். நமக்குத் தெரிந்தவை, நாம் அறியாமல் பிறர் அறிந்தவை, இருவரும் அறிந்தவை, இருவரும் அறியாதவை என்பன அவை. முதுகலை வகுப்பு மாணவர் ஒருவரிடம் "உங்களிடமுள்ள திறமைகளை வரிசைப்படுத்திக் கூறுங்கள்" என்றேன். "திறமைகளா? என்னிடமா?" என வினவினார். "ஆம் உங்களிடமுள்ள திறமைகளைத்தான் கேட்கிறேன்" என்றேன். இப்போதும் பதிலில்லை. ஏனெனில் அவர் அவரைப் பற்றியே சிந்தித்ததில்லை. நான் கூறினேன், "நீங்கள் ஒரு பட்டதாரி தமிழ், ஆங்கிலம், தெரியும், சிங்களத்தில் பேச மட்டும் தெரியும், அறிவுடையவர், எளிமையானவர், பிறருடன் எளிதில் பழகும் பண்பாளர்" என்று. உடனே அவர் "இது தான் திறமைகளா?" என்றார். பக்கத்து மாணவன் எழுந்து "இவன் அருமையாகப் பாடுவான்", கவிதை எழுதுவான் என்று மேலே தொடர்ந்தார். "உன்னை அறிந்தால் உலகத்தை நீ ஆளலாம்" என்பர். உண்மை. "நீ யார்? நான் யார்? என்கிற கேள்விக்கு விடை காண முடியாமையால் தான் பல பிரச்சினைகளுக்கு ஆளாகின்றோம்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களை மதிப்பீடு செய்யும் போது கீழ்கண்ட பண்பு நலன்

கள் உள்ளனவா எனக் கணக்கிடு கின்றன.

- தன்னம்பிக்கையும், சுயசார்பும் மிக முக்கியமான குணங்களாகும். தன் கையே தனக்குதவி என்பது போல பிறரை சார்ந்திராமல் சுதந்திரமாக செயல்படும் ஆளுமை வேண்டும்.
- சூழ்நிலைக்கும் காலத்திற்குமேற்ப நெகிழ்வுத்திறம் பெற்றிருக்க வேண் டும். "தூங்குக தூங்கிச் செயற் பால, தூங்கற் தூங்காது செய்யும் வினை" என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். பகை, மாட்சி யும், பகை திறம் தெரிதலும் பயன் தரத்தக்க குணங்களாகும்.
- இதனை இதனால் இவன் முடிக் கும் என ஆய்ந்து அவனிடத்தில் அச்செயலை ஒப்படைத்து அத னைச் செய்து முடிக்கவும். வினை வலியும், தன் வலியும், மாற்றான் வலியும் துணை வலியும் அறிந்திருக் கவும் கூடிய ஆற்றலைப் பெறல் வேண்டும்.
- நேரம் தவறாது பொறுப்புணர்ந்து கடமையை ஆற்றும் பாங்கு வேண் டும். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட செயலைச் செவ்வனே செய்ய முழு மனத்துடன் அதில் ஈடுபட வேண்டும்.
- இடுக்கண் பலவரினும், சிந்தனை மயங்காது நுண்மாண் நுழை புலம றிந்து, புதிய முறைகளில் சிந்தித் துத் (Lateral Thinking) தீர்வு காணு கின்ற ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- குற்றம் நம்மிடம் இருக்குமாயின், அக்குற்றத்தைப் போக்குவதற்கான வழிமுறைகளைப் பெற, அறநெறி கூறும் தக்கவரைப் பயன்படுத்திக் கொள்ளும் வன்மை வேண்டும்
- நட்பு ஆராய்ந்து தம் சுமைகளைக் களையும் இயல்புடைய ஒருவரைத் தேடிப் பெற வேண்டும். அவருடன் இணக்கமாகப் பழகி நம் செயல் களை வெற்றியுடன் முடித்துக் கொள் ளும் குணம் வேண்டும்.
- நம்முடைய செயலில் முன்னேறுவ தற்கான வழிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். செயல் பற்றிய நுணுக்கங்களையும், விரிவான அறி வையும் பெற முயற்சியும் வேண்டும்.
- தோல்விகள் அடுக்கி வரினும், உள் ளம் சோர்ந்து விடாமல் முயற்சியில் குறைவில்லாமல், மன நல மாண் பினைப் பெற்றிட வேண்டும்.
- நெறிமுறைகளுக்கு ஏற்ப அவை யறிந்து திறன் அறிந்து கேண்மை யைத் தேர்ந்தெடுத்து அவர்களுக் குரிய மதிப்பையும் பெருமையை யும் கொடுத்து பண்பு பாராட்டும் குணநலன் வேண்டும்.
- தலைமைப் பண்புகளைப் பெற்றி ருப்பது மிக முக்கியமான ஆற்றலா கும். சொல்வன்மை என்னும் பண்பு பெற்றவனை எளிதில் வென்றுவிட முடியாது. ஆக்கமும், கேடும் அத னால் வருவதனால் நாகாக்கவும் அறிந்திருக்க வேண்டும். கேட்டார் பிணிக்கும் வகையில் ஏற்படுத்தும்

குரல் வளம் மிக்க பயனாக இருக்கும்.

- ஊக்கமும் புத்துணர்வும் உடையவர்களை ஆக்கம் வந்தடையும். எனவே, மகிழ்ச்சியோடு கூடிய மலர்ந்த முகம் பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டும் என்பதை உணருங்கள். உலகத்தோடு ஒட்ட ஒழுகவும், பெரியாரைத் துணையாகக் கொள்ளவும், ஆற்றுவார் ஆற்றலை இகழாத் தன்மையைப் பெறவும் முயற்சி செய்யுங்கள்.

இக்குண நலன்களே உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும் வழித்துணைகளாகும்.இவற்றைப் பெற்றிடவும் வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

---

## நீங்கள்

வரவுக்கு மேல் செலவு கூடாது
வசந்தங்கள் நாளாந்தம் வீசாது

சொத்துக்கள் என்றும் நிலைக்காது
சொந்தங்கள் தொடர்ந்தும் உதவாது

ஏமாற்று வேலை என்றும் பலிக்காது
ஏழையின் சொல் சபைக்கு ஏறாது

முயற்சியின்றி முன்னேற்றம் கிடைக்காது
மூழ்காமல் முத்துக்கள் எடுக்கலாகாது

இரு கை தட்டாமல் ஓசை எழாது
இருவரும் இணையாமல் இல்லறம் சிறக்காது

நினைத்தது என்றும் நடக்காது
நடந்தாலும் அது நிலையாக இருக்காது

இயற்கையினால் பிரபஞ்சம் உண்டானாலும் அந்த
இயற்கையைப் படைத்ததும் இறைவன் தானே!

- பரா (f) -



# ஓவியத்திற்கும் அப்பால் லியோனாடோ டாவின்ஸி...

-ஜெகதீசன் கோபிநாத் (உ)-


டா வின்சி என்றதும் அனைவருக்கும் நினைவிற்கு வருவது மோனாலிசா என்ற ஓவியம் தான். ஒரு பெண்ணோவியம் காரணமாக புகழின் உச்சிக்கே சென்றதோடு மட்டுமல்லாது இன்றும் வரலாற்றில் பேசப்பட்டுக் கொண்டிருப்பவர்தான் மறுமலர்ச்சி கால ஓவியரான "லியானாடோ டாவின்சி" என்பவராவார். இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவரான டாவின்சி 1452ஆம் ஆண்டில் பிறந்து 1519 வரை வாழ்ந்தார். இவர் வாழ்ந்த காலத்திற்கும் இன்றைய இருபத்தியோராம் நூற்றாண்டிற்கும் இடையில் பல நூற்றாண்டுகள் கழிந்துவிட்ட நிலையிலும் இவருடைய பல்துறை புலமை காரணமாக இன்றும் வரலாற்றில் வலம் வந்து கொண்டிருக்கிறார். இவர் வரைந்த ஓவியங்களிலே மோனாலிசா, இயேசுவின் கடைசி இராப்போசனம் என்பன புகழ் பெற்றவையாகும். இவரிடத்தில் இருந்த இரண்டு கைகளாலும் விரைவாக ஓவியம் வரைகின்ற இணையற்ற ஆற்றல் வேறு எந்த ஓவியரிடத்திலும் இல்லாத ஒன்று. டாவின்ஸி ஓவியம், கட்டடக்கலை, சிற்பம், இசை, அறிவியல், கணிதம், பொறியியல், தாவரவியல் முதலான பல்வேறு துறைகளில் வியக்கத்தக்க மேதையாக விளங்கினார். ஆனாலும் இவரை அநேகமான பதிவுகள் ஒரு ஓவியராக மட்டுமே படம் பிடித்துக் காட்டுகின்றன. அதிலும் குறிப்பாக டாவின்ஸி என்றதுமே மோனாலிசா ஓவியத்தைப் பற்றியே புகழ்ந்து கூறுகின்றன. அதற்கான காரணம் உண்மையில் டாவின்சியை வரலாற்றில் இடம் பிடிக்க வைத்தது மோனாலிசா என்ற ஓவியம் தான். ஒருவேளை அவர் மோனாலிசா என்ற ஓவியத்தை வரையாமல் போயிருந்தால் வரலாற்றில் யாருமே அறியாதவராய் காணாமற் போயிருக்கக் கூடும். எனவே, ஓவியம் மூலமாக புகழும் வரலாற்றில் இருப்பும் கொண்டவரான டாவின்சி ஓவியத்திற்கு அப்பாலும் பல திறமைகளைக் கொண்டிருந்தார். அவ்வாறாக டாவின்ஸியிடம் காணப்பட்ட பெரும்பாலும் பேசப்படாத திறமைகளைத் தான்






இந்தக் கட்டுரையின் பக்கங்கள் பிரதிபலிக்கின்றன.

ஓவியர் மட்டுமல்லாது தத்துவ மேதை, வானியல் விஞ்ஞானி, பொறியியல் நிபுணர், கட்டிடவியலாளர், இராணுவ ஆலோசகர், கடல் ஆராய்ச்சியாளர், நீர்ப் பாசன நிபுணர், சிறந்த சிற்பி, கவிஞர், இசை



விற்பனர், விளையாட்டு வீரர் என டாவின்ஸி எடுத்த அவதாரங்கள் பலவாகும். சுமார் ஐநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் கண்டுபிடிக்கவிருக்கும் விமானங்கள், யுத்த ஆயுதங்கள் போன்ற பலவற்றை தொலைநோக்கோடு டாவின்ஸி கற்பனை செய்து ஓவியமாக வரைந்தார். இராணுவ தளபாடங்கள், யுத்த விமானங்கள், மனிதனின் உள்ளக உறுப்புக்கள் முதலான டாவின்ஸியின் ஓவியங்களும் குறிப்பேடுகளும் அவருடைய அறிவியல் சிந்தனைத் திறனை சிறப்பாக உணர்த்தி நிற்கின்றன. பாரிய கப்பல்களே கண்டுபிடிக்கப்படாத இவருடைய காலத்தில் இவர் நீர்மூழ்கிக் கப்பலை தனது ஓவியத்திலே கொண்டு வந்தார்.

அறிவியல் பெரிதும் வளர்ச்சியடையாத கதிர்வீச்சு உபகரணங்கள் (X-Ray, Scanner) கண்டுபிடிக்கப்படாத காலத்தில்,




அந்தக் காலத்தில் தாயின் கருவறையில் குழந்தை எப்படியிருக்கிறது? என்று கூட டாவின்ஸியின் கற்பனை விசாரணை செய்தது மனிதனுடைய உடலமைப்பை அணுவணுவாக டாவின்ஸியின் ஓவியம் படம்பிடித்துக் காட்டியது. எலும்புகள், தசைகள், நரம்புகள் இதயம் முதலான உறுப்புக்கள் போன்றவற்றின் அமைப்பு முறை, தொழிற்பாடுகள் பற்றி டாவின்ஸி நம்பகமான பல சிந்தனைகளை தன்னகத்தே கொண்டிருந்தார். அவற்றை ஓவியங்களாகவும் குறிப்புகளாகவும் ஆவணப்படுத்தினார். விஞ்ஞான ரீதியாக சிந்தித்த டாவின்ஸி முதன் முதலாக ஓவியத்தில் ஒளியையும் நிழலையும் கொண்டு வந்தார். ஒளியையும் நிழலையும் இவர் ஒருமித்து ஆராய்ந்த போது கண்களைப்பற்றி ஆராய முற்பட்டார். பின்பு ஒளியலைகளைப் பற்றி ஆராய்ந்தார். ஒளிப்படக் கருவி (Camera)களின் அடிப்படைத் தத்துவம் பற்றி டாவின்சி அப்போதே சிந்தித்துவிட்டார்.



மனிதர்களின் உருவங்களை முழுமையாக வரைந்தார். முப்பரிமாண முறையில்


மனிதர்களை வரைந்த போது மனிதர்களின் உடற்கூட்டு இயல்பை ஆராய்ச்சி செய்தார். மனிதர்களுடைய உள் உறுப்புக்களையும் இவரது தூரிகை கற்பனையாய் கிறுக்கித் தள்ளியது. செடிகள், இலை, கொடிகள் முதலானவற்றை வரைந்த போது தாவரவியல் பற்றிய தேடலில் டாவின்ஸி இறங்கினார். இவரின் காலத்தில் இவற்றைப் போன்ற ஆராய்ச்சிகள் துளிர்விடக் கூட ஆரம்பிக்கவில்லை. அவ்வாறான நிலையில் டாவின்ஸியின் இவ்வாறான அறிவியல் சிந்தனைகள் அசாதாரணமானவை என்றுங் கூட சொல்லலாம்.

ஓவியத்திற்கு அப்பால் வண்ணங்களின் கோட்பாடு, மனித உடலமைப்பு, இயற்கை, பிரபஞ்சம், கட்டடக்கலை. உடலியல் மற்றும் மருத்துவம், விலங்குகளின் வாழ்க்கை மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்த ஆய்வுகள் என்று பன்முகப்



படுத்தப்பட்ட ஆளுமை கொண்ட மேதையாகலியானாடோ டாவின்சி விளங்கினார். தன் எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும், பரிசீலனைகளையும், சந்தேகங்களையும், ஆய்வுகளையும் 5000 பக்கக் காகிதங்களில் இடமிருந்து வலமாக புதிர்ப்புதையலாக டாவின்ஸி விட்டுச் சென்றுள்ளார். இவ்வாறான பக்கங்களில் கிடைக்கும் விபரங்கள், குறிப்புக்கள், உரையாடல்கள், சிந்தனைகள் ஆகியவற்றிலிருந்து டாவின்சியின் மன மண்டலத்தையும் அவர் அழகியல் ஊடாக தம்மைச் சுற்றியிருந்த மானிட உலகின் இயற்கையை தரிசிப்பதையும் அறிவியலை ஆய்வு செய்யும் முறைமைகளையும் அறிந்து கொள்ளலாம் என்று புகழ்பெற்ற சிந்தனையாளராக காப்ரா என்பவர் விவரிக்கின்றார்.

டாவின்சியில் காலத்தில் அறிவென்பது அது குறித்து அதற்கு முன்பாக எழுதப்பட்ட அனைத்தையும் படிப்பதென்பதாகும். டாவின்சி அதிலிருந்து மாறுபட்டார். அவர் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து படித்



தார். தமது அனுபவ அறிவிலிருந்தே அவர் ஓர் உண்மையை ஏற்றுக்கொண்டவராக இருந்தார். டாவின்சி கலைக்காக இயற்கையை ஆராய்ந்து பார்த்து அனுபவித்தார். ஆராய்ந்தார். அவரது அறிவியல் அந்தக் காலங்களை இயற்கை தரிசனத்தின் மூலமாகப் பெறப்பட்டது . இதன் விளைவாகவே நியூட்டன், பிரான்சிஸ். பேகர் ஆகியவர்களின் அறிவியல் கட்டமைப்பு

களில் இருக்கும் இயற்கையிலிருந்து விலகிய இயற்கையை அடிமைப்படுத்துகின்ற பார்வை டாவின்சியிடம் இல்லை என்பதை காப்ரா சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இவ்வாறாக பல அறிவியல் சிந்தனைகளை, கற்பனையை அப்போதே முன் வைத்தவராக டாவின்ஸி இருந்த போதிலும் அவர் தொடர்பாக சில விமர்சனங்களும் எழுந்துள்ளன. அவருடைய குறிப்புகளும், சிந்தனைகளும், அவருடைய அறிவியல் சிந்தனைகளுக்கும் திறமைக்கும் சான்று பகர்கின்ற போதிலும் அவை பெரிதான அளவில் பிற்கால அறிவியல் வளர்ச்சிக்கு செல்வாக்கு எதனையும் பெறவில்லை. அவர் சிந்தனை செய்த கண்டுபிடிப்புக்களின் மாதிரி எதனையும் அவர் உருவாக்கியிருக்கவில்லை. அவருடைய அறிவியல் சிந்தனை வெறுமனே சித்திரங்களாயும் சிந்தனைகளாயும், குறிப்புக்களாகவுமே புதைந்துபோயின. இவ்வாறான டாவின்சியின் குறிப்புக்கள், விபரங்கள், சிந்தனைகள் அடங்கிய பக்கங்கள் இவர் சிந்தனையில் அமைந்த பல அறிவியல் கண்டுபிடிப்புக்கள் ஏற்பட்ட பின்னரே கண்டுபிடிக்கப்பட்டன. "அவருடைய சிந்தனைகள் மிகவும் தேர்ச்சி திறன் வாய்ந்ததாக இருந்தபோதிலும் அந்தக் கண்டுபிடிப்புக்கள் நடைமுறையில் செயற்பட்டிருக்கும் எனத் தோன்றவில்லை. ஒரு விமானம் அல்லது நீர் மூழ்கிக் கப்பலைப் பற்றிய கருத்தை சிந்திப்பது ஒன்று நடைமுறையில் செயற்படக்கூடிய அந்த மாதிரிகளை துல்லியமாக வடிவமைத்து உருவாக்கம் செய்வது மற்றொன்று. இரண்டாவது மிகக் கடினமானது. டாவின்ஸி இரண்டாவதை செய்ய தவறிவிட்டார்" என்று கார்லஸ் பல்கலைக்கழக பல்துறை விற்பன்னரான மைக்கை ஹெரி ஹார்ட் கூறியுள்ளார். எது எவ்வாறாக இருந்தபோதும் டாவின்சியின் திறமை குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. அறிவியல் வளர்ச்சி ஏற்படாத அந்தக் காலத்திலேயே அவர் பல அறிவியல் சிந்தனைகளை கொண்டிருந்தார். தன் தூரிகையால் அறிவியல் பிரபஞ்சத்தை அலசிப் பார்த்தார். மனித உடற் கூறுகளை தன் தூரிகையால் துல்லியமாக வரைந்தார். விமானம், நீர் மூழ்கிக் கப்பல், பரசூட் தொடங்கி கருவில் குழந்தை எப்படி இருக்கும் என்பது வரை அவருடைய கற்பனை விரிந்து சென்றது. உலக வரலாற்றுப் பக்கங்களில் ஒரு ஓவியராகவே பெரும்பாலும் பேசப்படுகின்ற டாவின்ஸியின் பல்துறை சார்ந்த திறமைகளும் அலசி ஆராயப்படுவது அவசியமான ஒன்றாகும்.

> **ஓவியர் மட்டுமல்லாது தத்துவமேதை, வானியல் விஞ்ஞானி, பொறியியல் நிபுணர், கட்டிடவியலாளர், இராணுவ ஆலோசகர், கடல் ஆராய்ச்சியாளர், நீர்ப்பாசன நிபுணர், சிறந்த சிற்பி, கவிஞர், இசை விற்பன்னர், விளையாட்டு வீரர் என டாவின்ஸி எடுத்த அவதாரங்கள் பலவாகும்.**

**உசாத்தணை நூல்கள்**


1. மைக்கெல் ஹெஜ் ஹார்ட், 1998 நூறு பேர், மீரா பப்ளிகேஷன்ஸ், சென்னை
2. பாலசுப்ரமணியன், 2001, வாவ் 2000 வேல்ஸ், விகடன் பிரசுரம்

# பௌத்த மெய்யியலில் மாத்தியமிகம் பெறும் முக்கியத்துவம்



-சிவானந்தன் சுதாகரன் (h)-

**(சென்ற இதழ் தொடர்ச்சி....)**

புத்தர் ஆன்மாவை ஒப்புக்கொள்பவரல்ல. ஆனால் அதே சமயத்தில் லோகாயுத வாதியுமல்ல. இவ்விரண்டுக்குமிடையிலேயுள்ள மத்திய வழியைப் பின்பற்றுபவர்.

நீ ஒரு பொருளல்ல என்பதை நீ புரிந்துகொண்டால் பொருள் ஆன்மா அல்ல என்பதையும் பொருளும் ஆன்மாவும் உன்னிலே இல்லை என்பதையும் தெரிந்து கொள்வர். ஒருவர் ஒரு பொருளின் குணங்களை அறிவார். ஆனால் பொருட்களை அறிவதில்லை. குணங்களின்றிப் பொருட்களை அறிந்துகொள்ள முடியாது. குணங்கள் பொருட்களுக்கு வெளியேயுமில்லை உள்ளேயுமில்லை. பொருளும் குணமும் ஒன்றல்ல வேறுமல்ல இரண்டும் சார்புடையவை ஆனால் இல் பொருட்கள்.

அமைதியான கடல் நீர் காற்றால் அலையாகத் தோன்றுவது போல, களிமண் ஆனது பலவகைப்பட்ட பானை சட்டிகளாகத் தோன்றுவது போல, நனவு உலகில் அறியாமையால் தான் எல்லைக்குட்பட்ட அறிவுடை மனிதனாக தோன்றுகிறது. (ஆன்மா என்பது கடல் அலை, பல வகைப் பானை போல நனவு நிலையில் ஆன்மாவாகத் தெரிகிறது) உண்மையான அறிவினைப் பெறும் போது தான் உண்மையை உணர முடியும். பொருட்கள் அடிப்படையில் உள்பொருள் அற்றவை. அத்தோடு பன்மைத் தன்மையும் இல்லாதவை. இவ்வாறு சூனியம் உள்பொருள், சார்புநிலை என்ற இரு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. அதுவே பிறப்பு, இறப்பு, சுழற்சி, நிர்வாணம் என்றும் பொருள் தருகிறது.

ஆகவே உள்பொருள் என்பது பற்றி நோக்கின் உள்பொருள் என்ற ஒன்று இல்லை. அத்தோடு அதை விவரிக்க முடியாத பொருளாகக் காணப்படும் எனப் பொருள் கொள்ளலாம். சார்புநிலை என்பது ஒன்றோடு ஒன்று சேர்ந்து காட்சிப் பொருளாகவும் பொருள்களுக்குள் அடங்கியதாக அல்லது உற்பட்டதாக உள்ளவையே சார்பு நிலையாகும். எனவே இவை சார்ந்து நிற்பதால் அடிப்படைப் பொருள் அல்லது மூலப்பொருள் அன்று. இவ்வாறு அனைத்துப் பொருட்களும் சார்பு நிலையுடையதாக அதாவது ஒன்றினைச் சார்ந்து காணப்படுவதால் அவை உண்மையான தோற்றத்தினை கொண்டிருக்க மாட்டாது.

ஆகவே உள்பொருள் என்ற ரீதியிலே அடிப்படை உள்பொருள் அல்ல. ஆனால் சார்புநிலையில் அவை முழுவதும் இல்பொருளும் அல்ல. இதனால் இவை உள்பொருள் சார்ந்தவையாக உள்பொருள் சார்புநிலை இருக்க வேண்டும். இந்த உள்பொருளே சார்பு நிலையில் பொருளாகத் தோன்றுகிறது. இந்தப் பொருளுக்கு உற்பட்டதான சார்புநிலையே பன்மை நிலையை

உண்டாக்கின்றது. ஆகவே சூனியம் என்பது இல்லை என்று கூறமுடியாது. அனைத்தும் அறியும் சார்புடையதாகவே இருக்கிறது. எதுவும் முழுமையான உண்மையாக இல்லை. இதற்கேற்ப அவர்கள் புற இயலான உள்பொருளோ அக இயலான உள்பொருளோ எதுவுமே இருப்பதாக நம்புவதில்லை.

உலகமும் அதிலுள்ள எல்லா ஜடப் பொருட்களும் உயிர்களும் எந்த வொரு மாற்றமற்ற தத்துவம் (ஆன்மா, பொருள் முதலியவை) இல்லாமல் சூனியமாகவே இருக்கிறது. அதாவது உலகம் நிகழ்ச்சிகளின் திரட்டே தவிர பொருட்களின் திரட்டு அன்று. எல்லாப் பொருளும் தமது உற்பத்தியில் தமது சக்தியைப் பெறுவதற்காக வேறொரு காரணத்தைச் சார்ந்திருக்கிறது. உற்பத்தியாகி நிலைத்து அழியும் எதற்குமே அதீத சக்தி இருக்கமுடியாதென்று நாகர்ஜுனர் கூறுகின்றார். வேலை செய்பவனும் வேலையும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதில்லை. அதாவது தனியாக நோக்கும் போது இரண்டில் ஒன்றுக்குமே தனிச் சக்தி இல்லை. "உலகமென்றால் உனக்கு என்னவென்று தெரியாது உலகத்தின் எட்டுவித நிலைகளான லாபம், நஷ்டம், மகிழ்ச்சி, துயரம், மானம், அவமானம், புகழ்ச்சி, இகழ்ச்சி என அனைத்தையும் சமமாக எண்ணு. ஏனெனில் அவை உன்னால் சிந்திக்கப்படக்கூடிய விஷயங்களல்ல" என்கிறார்.

உலகத்துப் பொருட்களை குறிப்பிட்டுக் கூற நான்கு விதமான வழிகளே உண்டு. அவை

1. அது உண்டு - அதாவது ஒரு பொருள் இருக்கிறது.
2. அது இல்லை — அதாவது ஒரு பொருள் உள்ளதாக இல்லை.
3. ஒரு பொருள் இருக்கவும் இருக்கிறது. - இல்லவும் இல்லை என பொருள்படும் வகையில் கூறுவது.
4. அது இருக்கவும் இல்லை இல்லாமலும் இல்லை — அதாவது ஒரு பொருள் உள்ளதாகவும் இல்லை இல்லாததாகவும் இல்லை என்று பொருள்படும்.

இவ்வகையில் வாதம் செய்யும் நாகர்ஜுனர் இந்த நான்கையும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு வியப்புமிக்க தர்க்க வாதத்தால் ஒவ்வொன்றிலும் உள்ள உள்ளார்ந்த ஒரு முரண்பாட்டை கொண்டிருப்பதாக மிகச் சாதுரியமாக விளக்குகின்றார்.

இவ்வாறான விளக்கத்தைக் கொண்டு பரமசத்தியத்தை நோக்கமுடியாது. ஏனெனில் பரமசத்தியம் தன் இயல்புக்கேற்ப முரண்பாடு எதுவும் இல்லாதது. இந்த நான்கு விளக்கங்களும் பொருட்கள் வெறும் தோற்றங்கள் என்று சொல்ல முற்படுகின்றன. ஆனால் சத்தியமோ தோற்றத்திற்கு அப்பாற்பட்டது. அது மாயமான இரகசியமான உணர்வுக்கு மட்டுமே அகப்படும்.

இவ்வுலகம் விவரிக்க முடியாதது. ஏனெனில் அது இருப்பு அன்று இல்லாததும் அன்று. முழுதாக விவரிக்க முடியாதது. அது கடந்த நிலை இயல்புடையது. அறிவின் வகைகளால் அதை விவரிக்க இயலாது. எல்லாம் சூனியத் தோற்றங்கள். உலகப் பொருட்கள் எல்லாம் மனம் சார்ந்தவையாகவும் பொருள் சார்ந்தவையாகவும் நனவுநிலை சார்ந்ததாகவும் இல்லாதன எனவும் கூறுமுடியாது. அதாவது எல்லாவற்றையும் விவரிக்க முடியாது. அதனால் உண்மையான உள்பொருள் இல்லை எனக் கூற முடியாது. ஏனெனில் உள்பொருளே அதுவாகத் தோன்றுகிறது.

உலகம் உண்மைப் பொருள் எனக் கருதுவது தவறானதாகும். ஏனெனில் உள் சென்று ஆழமாக நோக்கும் போது உலகம் உண்மைப் பொருளாகக் காணப் படவில்லை. அது சார்புநிலையுடையதா கவே காணப்படுகிறது. அடிப்படையில் இல் பொருள் எனக் கருதுவது தவறான தாகும். ஏனெனில் அவ்வாறு கருதுவது இவ்வுலகின் தெரிந்து கொள்ளக்கூடிய உள்பொருட் தன்மையை (காட்சிப் பொருள் உண்மையை) மறுப்பதாகிவிடும். எனவே அறிவுத்தன்மை, அறியாத்தன்மை இரண் டும் பொய்யே.

சார்பில் தோற்றக் கொள்கை என் பது பொருட்களின் தோற்றம் ஆனது அதன் காரணங்களையும் நிலைகளை யும் சார்ந்ததாகும். இது சூனியவாதத் தால் குறிக்கப் பொறுகிறது. சூனியவா தம் மாத்தியமிகக் கொள்கையின் முக் கிய கருத்தாகும்.

ஒவ்வொரு பொருளுக்கும் தனியி யல்பு அல்லது இயற்கை நிலையுண்டு. நெருப்பு ஆனது சூடாகும் இயல்புடை யது. தனது இருப்பிற்கு மற்றதைச் சார்ந் திருப்பதன்று. அத்தோடு முதலில் இல் லாதிருந்து பின்பு தோன்றுவதுமன்று. சூடு அல்லது வெப்பம் தோன்றுவதற்கு காரணமான நிலைகள் அமையும் போது வெப்பம் தோன்றுகிறது. ஆனால் இது முன்னர் இல்லை. இவ் வெப்பம் தோன் றுவதற்கு மற்றவற்றைச் சார்ந் துள்ளது. ஆகவே வெப்பம் என்பது நெருப்பின் இயல்பாகாது.

மாத்தியமிகர்களது கொள்கைப் படி வெப்பம் நெருப்பின் இயல்பு அன்று. நெருப்பு தோன்றாமை, மற்றவற்றைச் சாராது இருத்தல் என்பவற்றைக் கொண்டு இதனைப் பொய்த் தோற்றம் எனக் கூறமுடியாது. இவற்றால் இதனைச் சுபா வம் என்று வழங்க வேண்டும். ஏனெனில் இது எதனாலும் தோன்றாதது. இதனால் ஒழுக்கம் இல்லாதது ஆகும். இவ்வாறு நெருப்பைப் போல எல்லாப் பொருட்க ளும் சுபாவம் இழந்து இருக்கின்றன.

சூனியம் என்பதன் பொருள் சுபா வம் இழந்து இருப்பதாகும். இதனை சர்வ தர்ம சூன்யா என்கிறது பௌத் தம். பொருட்கள் நமக்கு தோன்றுகின்ற நிலையானது தம் சொந்த உயரிய இயல் புகளோடு கூடிய நிலை அன்று. அது அவற்றின் மீது சுமத்தப்பட்ட கூறுகளோடு தோன்றுகிறது. வேதாந்தத்திலே பிரதி பாசிகம், வியவ காரியம் என்ற இரண்டுக் குமிடையிலுள்ள வேறுபாட்டை உணர மாட்டாதவர்கள் புத்தரது போதனை ஆழத்தை அறியமாட்டார்கள். பேருண்மை (பரமாத்திகம்) ஆகிய உயரிய உண்மை யினை அறியாது நிர்வாணத்தையடைய முடியாது. உண்மையை உள்ளவாறு உணர்ந்தால் தடைகள் ஏதுமில்லை.

சூன்யம் என்பது பிரதீத்ய சமுத் பாதம் போன்றதே. பொருட்கள் காரணங் களால் தோன்றுகின்றன. சார்ந்தே தோன் றுகின்றனவே தவிர வேறில்லை. இயல் பினால் இயற்கையில் தோன்றுவ தில்லை. படைப்பை காரணகாரிய வாதத் தின் மூலம் நாகர்ஜுனர் மறுக்கிறார். எதையுமே எப்பொழுதுமே தோற்றிவிக்க முடியாது. ஒரு பொருள் தன்னிலிருந்தோ தனக்குப் புறம்பானதிலிருந்தோ இரண்டி லிருந்தோ இரண்டுமல்லாத தன்மையிலி ருந்தோ தோன்ற முடியாது. காரியம் காரணத்தில் இல்லை. உதாரணமாக முயற்கொம்பு, மலடிமகன் என்பவற்றைக் குறிப்பிடலாம். காரியம் காரணத்தில் உள் ளது எனின் உற்பத்தி என்பது தேவை இல்லை. இவ்வாறு ஒரு பொருள் தன்னி லிருந்து தோன்ற முடியாது எனின் தனக் குப் புறம்பானதிலிருந்து எப்படித் தோன்

றும் எனக் கூறி நாகர்ஜுனர் தோற்றத்தை மறுக்கிறார்.

சூனியவாதத்தைப் புரிந்துகொள்ப வன் புத்தரின் தத்துவங்களைப் புரிந்து கொள்வான். அதைப் புரிந்து கொள்ப வன் புத்தரின் நான்கு சிறந்த சத்தியங் களைப் புரிந்து கொள்வான். அவற்றைப் புரிந்து கொள்பவன் அவனுடைய கோரிக் கைகள் முற்றுப் பெற்று அவர் நிர்வா ணத்தை அடையக்கூடும் என்று நாகர் ஜுனர் கூறுகின்றார்.

*நிர்வாணம் என்பது ஒரு திரிபுக்காட்* சியாகும். தளையும் விடுதலையும் இல் பொருட்களாகும். கட்டுப்படுதல் விடுத லை பெறுதல் என்ற இரண்டையும் பெறு தல், பெறாவிடுதல் என்பனவும் இல்லை. நிர்வாணமும் இருப்பற்றது. ஏனெனில் இதுவும் மற்றப் பொருட்களைப் போல் தோற்றம், முடிவு ஆகியவற்றைப் பெற் றிருக்க வேண்டும்.

நிர்வாணம் இல்லாதது அன்று இல்லாதது இருப்பதைச் சார்ந்துள்ளது. நிர்வாணம் இருக்கவும் இல்லாததுமாக இருக்க முடியாது. ஏனெனில் இது முரண் பாடுடையது. இரண்டும் இல்லாததாக வும் இருக்கமுடியாது. ஆகவே நிர்வா ணம் இருப்பதுமன்று இல்லாததும் அன்று. அது திரிபுக் காட்சியே.

மனதினை ஒருநிலைப்படுத்துவ தற்கு சமாதி தேவை. சமாதிக்கு துறவு, ஆறு பரணிதாக்கள், பயிற்சி செய்தல் என்பவை முக்கியமானதாகும். கருணை, நல்லொழுக்கம், அமைதி, தைரியம், தியானம், ஆன்மீக நிலை ஆகிய ஆறும் பரணிதாக்கள் எனப்படும். பயிற்சி இன்றி கடந்த நிலையில் உண்மை அறியாது. தவமே மிக முக்கியமானதாகும். அது துன்பத்தை அழித்து அறிவைப் பெற உதவுகிறது. இவ்வாறு நாடுபவன் சூனி யத்தை அறிகிறான்.

ஆயினும் அதை இரகசியமான உணர்வுக்கு அல்லது அனுபவ ரீதியில் இரகசியப் பிரக்ஞையால் உணர்ந்து பற் றவும் இயலும். அதற்கு பிரக்ஞாபாரமிதா என்று பெயர். யாவற்றையும் கடந்து அப் பாற்படும் மிகமிக உயர்ந்த ஞானம் என் பது அதன் பொருள். இதன் ஞானத்தை அடைதலே மெய்யான பௌதீக உலகத் திலிருந்து விடுதலை பெறுவது. அது நிர்வா ணம் எனப்படும். அதாவது உலக பந்தங் களிலிருந்து விடுபடுதல் எனப் பொருள்ப டும். நாகர்ஜுனரின் தத்துவமான சூன்யதை என்பதன் மறுபெயரே நிர்வாணம் ஆகும்.

இவ்வகையில் நாகர்ஜுனரின் தத்து வத்தைப்புரிந்து கொள்வது கடினமான தாயினும் அவற்றிலே கூறப்படுகின்ற தத் துவ சிந்தனைகள் சிறப்பானவை. மெய் யியல் மரபிலே நாகர்ஜுனர் சிறப்பிடம் பெற்றமைக்கு மாத்தியமிக தத்துவத் தின் சிறப்பே காரணம் எனலாம். அவ் வகையில் பிரமம், ஆன்மா, உலகம், தோற் றம், நிர்வாணம் என்ற ரீதியிலே மாத்தி யமிக தத்துவத்தினை ஆராய முடிகிறது.

(முற்றும்)

**உசாத்துணை நூல்கள்:**


1. ராகுல் சாங்கிருத்யாயன்,பௌத்த தத்துவ இயல், நியூசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.
2. ஹரியண்ணா, இந்தியா மெய்யியல், இந்து பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
3. மகாதேவன்.ரி.எம்.பி.,இந்து சமயத் தத்துவம்,(2005),குமரன் பதிப்பகம், கொழும்பு.
4. கந்தசாமி.சோ.ந,(2003),இந்திய தத்துவக் களஞ்சியம்,மெய்யப்பன் பதிப்பகம்,சென்னை.
5. இராதாகிருஷ்ணன்.ச,(1949),கீழை மேலை நாடுகளின் மெய்பொருளி யல் வரலாறு, அண்ணாமலைப் பல் கலைக்கழகம், அண்ணாமலை.

# பொருளாதார வீழ்ச்சியும் (Recession) பொருளாதார மந்தமும் (Depression)

- ஆ.சௌந்தரலிங்கம் (1) -



## அறிமுகம் :-

பேரினப் பொருளியலில் இடம்பெறு கின்ற பல்வேறு கோட்பாடுகளில் வர்த் தக சகடவோட்டம் (Trade cycle) என்பது முக்கியம் வாய்ந்ததாகும். வாணிபச்சுழல் என்றும் இதனை அழைப்பர். முதலாளித் துவ பொருளாதாரங்களில் இடம்பெறு கின்ற பொருளாதாரச் செயற்பாடுகளில் காலத்திற்கு காலம் ஏற்பட்டுச் செல்லு கின்ற எழுச்சி நிலை, வீழ்ச்சி நிலை, தேக்க நிலை, மீண்டெழும் நிலை ஆகிய பல்வேறு நிலைகள் பற்றியும், அவ் வாறான நிலைகள் தோன்றுவதற்கான காரணங்கள், அந்நிலைகளின்போது பொரு ளாதார செயற்பாடுகள் எவ்வாறு அமைந் திருக்கும் என்பன போன்ற விடயங்கள் இக்கோட்பாட்டில் இடம்பெற்றிருக்கும்.

இவற்றில் அண்மைக் காலமாக பல ராலும் பேசப்பட்டு, அறியப்பட்டுவரும் விடயங்களாக, வீழ்ச்சி நிலை, (Recession) தேக்கநிலை (Depression) ஆகியன காணப்படுகின்றன. எனவே இக்கட்டுரை யானது இன்று பல்வேறு நாடுகளில் இடம்பெற்று வரும் பொருளாதார வீழ்ச் சிப்போக்கு, அதன் விளைவாக ஏற்படு கின்ற பொருளாதார மந்தம் என்பன பற்றி ஆராய்கிறது.

அண்மைக் காலமாக ஊடகங்க ளில் நாம் காணும் செய்திகளில் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தொடர்பான பொருளாதாரச் செய்திகளே முக்கியத் துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. அதிகரித்துச் செல்லும் வேலையில்லாப் பிரச்சினை, உற்பத்தி நிறுவனங்களின் இலாபத்தில் ஏற்பட்டுச் செல்லும் வீழ்ச்சி, சரிந்துகொண்டிருக்கும் நிதிச் சந்தைக ளின் போக்கு, வீடமைப்புத்துறையில் ஏற் பட்ட சடுதியான வீழ்ச்சிப்போக்கு போன்ற விடயங்களே செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறாக காணப்படும் அனைத்துப் பொருளாதார நிலைமைகளையும் கருத் தில் எடுத்து அதற்குப் பொதுவான ஒரு பெயரைக் கொடுப்போமானால், அதுதான் பொருளாதார வீழ்ச்சி ஆகும். (Recession) தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் உலகளாவிய நிதிசார் பிரச்சினையானது, பல நாடுகளில் பொருளாதார செயற்பா டுகளின் வீழ்ச்சிப்போக்குடன் இணைந்த தொன்றாக காணப்படுவது குறிப்பிடத்தக் கது.

## வரலாற்றுப் போக்கு :-

வரலாற்றை எடுத்துநோக்கும்போது பொருளாதார வீழ்ச்சியானது பல நாடுக ளில் பல்வேறு காலகட்டங்களில் தோன்றி

மறைந்துள்ளதை அவதானிக்கக்கூடிய தாக உள்ளது. வளர்ச்சியடைந்த பல பொருளாதாரங்களில் ஒரே காலகட்டத் தில் பொருளாதார வீழ்ச்சியானது ஏற்பட் டுள்ளது. கடந்த தசாப்தங்களில் இந் நிலை பலதடவைகளில் இடம்பெற்றுள் ளதையும் காணக்கூடியதாக உள்ளது. எழுபதுகளின் நடுப்பகுதி, எண்பதுகளின் முற்பகுதி, தொண்ணூறுகளின் முற் பகுதி, 2000ம் ஆண்டின் முற்பகுதி போன்ற காலகட்டங்களில் எல்லாம் இந்நாடுகளில் பொருளாதார வீழ்ச்சிப்போக்கு காணப் பட்டதை வரலாறு கூறுகின்றது.

## அமெரிக்கப் பொருளாதாரமும் – உலகப் பொருளாதார வீழ்ச்சியும்

அமெரிக்காவானது உலகின் மிகப் பெரும் பொருளாதாரமாகக் காணப்படு கின்றது. அதுமட்டுமின்றி உலகின் ஏனைய பொருளாதாரங்களோடு அது மிகவும் பல மான வர்த்தக மற்றும் நிதிசார் தொடர்பு களை வைத்திருப்பதனாலும் அங்கு பொரு ளாதார வீழ்ச்சிநிலை ஏற்படுகின்றபோது அது ஏனைய நாடுகளுக்கும் பரவிவிடு கிறது. எனவே அமெரிக்க பொருளாதா ரத்தில் ஆரம்பித்த வீழ்ச்சி நிலையானது உலகப் பொருளாதார வீழ்ச்சியாக பரிண மித்து விடுகிறது. எழுபதுகளில் இருந்து 2000ம் ஆண்டின் முற்பகுதிவரை அவ்வப் போது அமெரிக்காவில் காணப்பட்ட மேற் படி வீழ்ச்சி நிலைமைகள் பொதுவாக சிறிய அளவிலேயே காணப்பட்டிருந்தன. ஆனால் தற்போது காணப்படும் வீழ்ச்சி நிலை அவற்றைவிடப் பெரிதாக அமைந்து விட்டது.

ஏறக்குறைய இரண்டு வருடங்கள் நீடித்துவிட்ட இவ்வீழ்ச்சிக் காலத்தின் போது நுகர்வு, முதலீடு என்பனவற்றில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. இவ்வீழ்ச் சிப் போக்கானது மேலும் சில வருடங்க ளுக்கு நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுவதினால் 1930களில் ஏற்பட்டிருந்த மிகமோசமான பொருளாதார வீழ்ச்சி நிலைமைக்குப் பிறகு ஏற்பட்ட மிக நீண்ட காலத்தைக் கொண்ட பொருளாதார வீழ்ச்சி நிலைமையாக இது நோக்கப் படுகிறது. எனவே இதன் விளைவுகள் மிகப்பாரதூரமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வரைவிலக்கணம் :-

பொருளாதார வீழ்ச்சி (Recession) என்ற பதத்திற்கு இதுவரை திட்டவட்ட மான வரைவிலக்கணம் எதுவும் வழங்கப் படவில்லை. ஆயினும் பொதுவாக வரை யறுக்கும்போது "பொருளாதார செயற் பாடுகளின் வீழ்ச்சி நிலைமை" என்று குறிப்பிடலாம். மிகவும் ஒரு குறுகிய காலத்திற்கு இடம்பெறும் பொருளாதார செயற்பாடுகளின் வீழ்ச்சியினை பொரு ளாதார வீழ்ச்சி என்று கூறிவிட முடியாது. ஆய்வாளர்களின் கருத்துப்படி தொடர்ச் சியாக இரண்டு காலாண்டுப் பகுதிக் காலத்தில் ஒரு நாட்டின் மெய்ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுக் காணப்படும்போது அதுவே பொருளாதார வீழ்ச்சியாகும். மேற்கூறப் பட்ட வரைவிலக்கணமானது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்றாக காணப் பட்ட போதிலும் விமர்சனத்திற்குட்பட்ட தாக காணப்படுகிறது. ஏனெனில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மட்டுமே இங்கு கருத்தில் எடுக்கப்பட்டமை அதன் குறு கிய நோக்கினைக் காட்டுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. ஒரு நாடானது உண் மையிலேயே பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தீர் மானிப்பதற்கு பலதரப்பட்ட பொருளாதார செயற்பாடுகளும் கருத்தில் எடுக்கப்படு வதே சிறந்ததாகும். நாட்டின் பொருளா தார நிலையை நல்ல முறையில் எடுத்தி

யம்ப மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஏனைய குறிகாட்டிகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு ஆய்வு நிறுவனம் பொருளாதார வீழ்ச்சி நிலமைக் குப் பரந்த ஒரு வரைவிலக்கணத்தை முன்வைத்தது. அதன்படி பொருளாதார வீழ்ச்சி நிலையைக் குறிப்பிட அது பொரு ளாதாரத்தின் பல்வேறு செயற்பாடுகளின தும் அளவீடுகளைக் கவனத்திற்கு எடுத் தது. எனவே பொருளாதார வீழ்ச்சி நிலைமை என்பது நாட்டின் பொருளாதார செயற்பாடுகளில் ஏற்படுகின்ற கணிசமான அளவிலான ஒரு வீழ்ச்சியைக் காட்டி நிற் கும் என்றும், அந்நிலைமை நாடு முழுவ தும் பரந்துகாணப்படும் என்றும், இது ஒருசில மாதங்களுக்குமேல் நீடித்துக் காணப்படும் என்றும், அவ்வாய்வு நிறுவ னம் தெரிவிக்கின்றது. மேலும் இவ்வீழ்ச்சி யானது பொதுவாக நாட்டின் உற்பத்தி, வேலை வாய்ப்பு, மெய் வருமானம் மற்றும் பல பொருளாதாரம் தொடர்பான குறிகாட் டிகளில் காணப்படும் என்றும் அதுவரை யறுத்துக் கூறுகிறது.

பொருளாதாரமொன்றின் செயற்பாடு கள் உச்சநிலையைத் தொடும்போது வீழ்ச்சிநிலை ஆரம்பிக்கின்றதென்றும் வீழ்ச்சி நிலை கீழ்மட்டம் அடையப்படும் போது அது நிறைவுபெற்று விடுகின்றதென் றும் குறிப்பிடும் அவ்வாய்வு நிறுவனம் விரிவான முறையில் பல்வேறு விடயங்க ளில் கவனம் செலுத்தி பொருளாதார செயற்பாடுகளின் போக்கினை பகுப்பாய்வு செய்து வீழ்ச்சி நிலையினை ஆராய்ந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியை மட்டு மின்றி, வேலை வாய்ப்பு, வருமானம், விற் பனை அளவு, கைத்தொழில் உற்பத்தி அளவு போன்றவற்றையும் உள்ளடக்கிய வகையில் பொருளாதார வீழ்ச்சி நிலை மையை வரையறுத்தது.

## வீழ்ச்சி நிலைமையினை இனங் காணுதல் :-

ஒரு வீழ்ச்சிநிலையானது தொடங்கு வதற்கு சில மாதங்களுக்கு முன்பே பொருளாதாரத்தின் பலவீனம் வெளிப்ப டுத்தப்பட்டிருக்கும். ஆயினும் ஒரு நாடு உண்மையான ஒரு வீழ்ச்சிநிலையில் உள்ளதா, அல்லவா என்பதனைத் தீர்மா னிக்கப் பொதுவாக நீண்டகாலம் எடுக் கும். உதாரணமாக அமெரிக்காவில் தற் போது நிலவுகின்ற பொருளாதார வீழ்ச்சி நிலையானது 2007 டிசம்பரில் ஆரம்பித் தது என்பதை அறிவிப்பதற்கு மேற்படி ஆய்வு நிறுவனத்திற்கு ஒரு வருடம் எடுத் தது. உண்மையில் இந்த காலதாமதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றே. ஏனெ னில் பொருளாதாரம் தொடர்பான பல் வேறு மாறிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து தொகுத்து ஆராய்ந்த பின் னரே பொருளாதாரச் செயற்பாடுகளின் வீழ்ச்சி தொடர்பான முடிவுக்கு வரக்கூடி யதாகயிருக்கும். அதுமட்டுமின்றி, மேற்படி கருத்திற்கொள்ளப்படும் மாறிகள் குறு கிய காலப்பகுதியில் மாற்றங்களுக்கு உள்ளாகக்கூடியவையே. இங்கு கவ னிக்க வேண்டிய மற்றொரு விடயம் என்ன வெனில் பொருளாதாரத்தின் வெவ்வேறு செயற்பாடுகள் தொடர்பான மதிப்பீடுகள் சிலவேளைகளில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட போக்கினைக் காட்டி நிற்க லாம். அவ்வாறான நிலைமையானது குறித்த ஒரு நாடு தனது பொருளாதார செயற்பாடுகளில் ஒரு பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கியிருக்கிறதா என்பதை இனங் காண்பதில் ஒரு கஷ்டமான நிலையை ஏற்படுத்தி விடக்கூடும்.

## பொருளாதார வீழ்ச்சி நிலைமை ஏன் ஏற்படுகிறது?

பொருளாதார வீழ்ச்சிநிலைமை

ஏற்படு வதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உள்ளீடு களின் விலைகளில் ஏற்படும் தீவிரமான அதிகரிப்பு பொருளாதார வீழ்ச்சிக்கு அடிப் படையாக அமையலாம். உதாரணமாக எண்ணெய் விலைகளில் ஏற்படும் ஒரு தீவிரமான அதிகரிப்பு. எண்ணெய் விலை உயர்வானது பொதுவிலை மட்டத்தை உயர்த்தி மொத்தக் கேள்வியைக் குறைத்து, வீழச்சிக்குக் காரணமாக அமையலாம்.

நாட்டில் நிலவுகின்ற பணவீக்கத் தைக் குறைக்க, அரசாங்கம் சுருக்க விளைவை ஏற்படுத்தும் நாணய மற்றும் இறைக் கொள்கைகளைப் பயன்படுத்தும் போதும் வீழ்ச்சிநிலைமை தோன்றலாம். அத்தகைய கொள்கைகளை அளவுக்க திகமாகப் பயன்படுத்தும்போது அது பொருட்கள் சேவைகளின் கேள்வியில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தி இறுதியில் பொருளாதார வீழ்ச்சிநிலைக்கு வழிவகுக் கக்கூடும். வீழ்ச்சி நிலைமையானது நிதிச் சந்தைகளில் ஏற்படும் பிரச்சினைகள் கார ணமாகவும் தோன்றலாம். தற்போது வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் வீழ்ச்சிநிலைமைக்கு அடிப்படைக் காரண மாக நிதிச்சந்தைப் பிரச்சினைகளே விளங் குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சொத்துக்களின் விலைகளில் ஏற்ப டும் கடுமையான அதிகரிப்பும் அவற்றைக் கொள்வனவு செய்ய வணிக வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் வழங் கும் கடன்களில் ஏற்படும் தீவிரமான அதி கரிப்பும், பொருளாதார வீழ்ச்சிநிலைமைக் கான மற்றைய காரணிகளாகும். நிறுவ னங்களும் மக்களும் சொத்துக்களை கொள்வனவு செய்ய அதிகளவு கடன்க ளைப் பெற்றுக்கொண்டு பின்னர் அவற் றைத் திருப்பிச் செலுத்துவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன. இதன் விளைவாக அவர்கள் மேற்கொள் ளும் நுகர்வு, முதலீடு என்பன குறைந்து விடுகின்றன. இதன் விளைவாகப் பொரு ளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. கடன்கள் அதிகரித்துச் செல்வது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருளாதார வீழ்ச்சியில் போய்முடியாது. ஆனால் இக்காரணத்தினால் பொருளா தார வீழ்ச்சிப்போக்கு ஏற்படுமானால், அது ஏனையவற்றால் ஏற்படும் பொரு ளாதார வீழ்ச்சியைவிட மோசமான வீழ்ச் சியை ஏற்படுத்தி விடும்.

ஒரு நாட்டின் ஏற்றுமதிக்கான வெளி நாட்டுக் கேள்வியில் வீழ்ச்சி ஏற்படுவ தாலும் பொருளாதார வீழ்ச்சிநிலைமை ஏற்படலாம். குறிப்பாக ஒரு நாட்டின் பொருளாதாரமானது பெருமளவுக்கு வெளிநாட்டுத் துறையில் தங்கியிருக்குமா னால், இவ்வெளிநாட்டுக் கேள்வி வீழ்ச்சி யானது பொருளாதார வீழ்ச்சிக்குக் கார ணமாக அமைந்துவிடும். இன்று நிலவு கின்ற உலகப் பொருளாதார வீழ்ச்சி நிலைமையின் பாதக விளைவுகள் ஜேர் மனி, ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளினால் மிக வேக மாக உணரப்பட்டன. காரணம், இவ் வீழ்ச்சிநிலையின்போது மேற்படி நாடுக ளின் வர்த்தகப் பங்காளி நாடுகளின் ஒரே காலப்பகுதியில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்குதான்.

## பொருளாதார வீழ்ச்சியை எதிர்வு கூறல் :

இவ்வாறு பொருளாதார வீழ்ச்சி நிலைக்குப் பல்வேறு காரணங்கள் இருப் பதனால் அவற்றை முன்கூட்டியே எதிர்வு கூறுவது மிகக்கடினமான ஒரு காரியமா கும்.

கடன்களின் அளவு சொத்துக்களின் அதிக விலை, வேலையின்மை வீதம் போன்றன பொருளாதார வீழ்ச்சி நிலைமைக்கு காரணம் என்று கூறப்பட்டாலும் அவையே பொருளாதார வீழ்ச்சிப் போக்கின் விளைவுகளாக அமைந்து காணப்படுகின்றமை இவ்வீழ்ச்சிப் போக்கிலிருந்து மீள்வதில் எதிர்நோக்கும் கடினத்தன்மையைக் காட்டி நிற்கிறது. பொருளியலாளர்கள் பொருளாதார மாறிகளின் பெரிய தொகுதி ஒன்றினைப் பயன்படுத்தி பொருளாதார செயற்பாடுகளின் எதிர்காலப் போக்கினை முன்கூட்டியே கூறக்கூடியதாக இருந்தாலும் ஒரு பொருளாதார வீழ்ச்சிநிலை ஏற்படப் போகிறதா, இல்லையா என்பதை எடுத்துக்கூற அம்மாறிகள் எதுவுமே நம்பகத்தன்மை கொண்டதாக அமைவதில்லை. சொத்துக்களின் விலைகள், வேலையின்மை வீதம், வட்டி வீதங்கள், நுகர்வோரின் மன உறுதி என்பன பொருளாதார வீழ்ச்சியை முன்கூட்டியே எடுத்துக் கூறுவதற்குப் பயன்மிக்கதாகத் தோன்றினாலும் பொருளியலாளர்களைப் பொறுத்தவரையில் பொருளாதார வீழ்ச்சியின் முக்கியமான கட்டத்தினை சரியானமுறையில் முன்கூட்டியே எதிர்வுகூறமுடியாமல் போய் விடுகிறது. அதனால் ஒரு ஒப்பீட்டு அடிப்படையில், பொருளாதார வீழ்ச்சி காணப்படும் காலப் பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளானவை, சாதாரண நிலைமையைவிட எவ்வளவுக்கு மாறுபட்டு அமைந்திருக்கிறது என்பதன் அடிப்படையில் வீழ்ச்சியின் தீவிரத்தன்மையை சொல்லக்கூடியதாக இருக்கும். அவர்களுக்கு இருக்கும் ஒரே தெரிவு இதுவாகத்தான் இருக்கும்.

## பொருளாதார வீழ்ச்சிப் போக்கின் தாக்கம்

1960க்கும், 2007க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உலகின் முன்னேற்றமடைந்த 21 நாடுகளில் மொத்தமாக 122 முழு அளவிலான பொருளாதார வீழ்ச்சி நிலைமைகள் காணப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை அதிகம் போலத் தோன்றினாலும், பொருளாதார வீழ்ச்சி நிலையானது நாடுகளில் அடிக்கடி ஏற்படுவதில்லை என்பதே உண்மை. மேலும் நாடுகள் வீழ்ச்சிப் போக்கை அனுபவித்த காலப்பகுதி குறுகியதாகவே காணப்படுகிறது.

## பொருளாதார வீழ்ச்சி நிலையின் பொதுவான இயல்புகள் :

ஒவ்வொரு பொருளாதார வீழ்ச்சி நிலையும் தனக்கென தனித்துவமான சில அம்சங்களைக் கொண்டிருக்கின்ற போதி லும், வீழ்ச்சி நிலைமைகளானவை பல பொதுவான இயல்புகளை தன்னகத்தே கொண்டிருக்கும். அவை வருமாறு.

1) அவற்றின் ஆயுட்காலம் குறிப்பாக ஒரு வருடம் ஆகும். வெளியீட்டில் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கும். வழமையாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% வீழ்ச்சி காணப்படும். வீழ்ச்சி நிலைமை மோசமானதாக இருந்தால் அது 5%தை அண்மித்ததாக அமையும்.

2) வீழ்ச்சிக் காலத்தின் போது நுகர்வில் ஏற்படுத்தப்படும் வீழ்ச்சியானது எப்போதும் சிறியதாகக் காணப்படும். ஆனால் கைத்தொழில் உற்பத்தியிலும், முதலீட்டிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீழ்ச்சியிலும் பார்க்க அதிக வீழ்ச்சி காணப்படும்.

3) வீழ்ச்சிக் காலத்தின் போது நாட்டின் ஏற்றுமதிகளிலும், குறிப்பாக வீழ்ச்சி ஏற்பட்டுச் செல்லும். அதனால் சர்வதேச வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகும்.

4) வேலையின்மைப் பிரச்சினையில் ஒரு வேகமான அதிகரிப்பு இடம்பெறும் அதே வேளை பணவீக்கத்தில் மெதுவான வீழ்ச்சி காணப்படும். இதற்குக் காரணம் பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சியே. வீடுகள் மற்றும் பங்குகளின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்படும். இந்நிலைமை யானது. பொருளாதாரத்தில் தொடர்ந்து காணப்பட, பொருளாதார வீழ்ச்சியானது நிதிச் சந்தைகளின் குழப்ப நிலையுடன் இணைந்ததாகவும் மாறிவிடும்.

## பொருளாதார வீழ்ச்சி (Recession) பொருளாதார மந்தம் (Depression) – தொடர்பு

1960 ஆம் ஆண்டிலிருந்து நோக்குவோமாயின் தற்போது அமெரிக்க நாடு அனுபவிப்பது எட்டாவது பொருளாதார மந்தமாகும். இக்காலப்பகுதியில் இடம் பெற்ற – மந்தத்திற்குரிய சகல பண்புகளையும் கொண்ட மந்தமானது – 11 மாதங்களுக்கு நீடித்தது. 1973, 1981 ஆகிய ஆண்டுகளில் 16 மாதங்களுக்கு நீடித்த மந்த நிலைமைகள் காணப்பட்டன. 1980இல் மிகவும் குறுகிய கால – 08 மாத மந்தம் இடம்பெற்றிருந்தது. இக் காலப் பகுதியில் வெளியீடு, கைத்தொழில் உற்பத்தி என்பவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளன. மொத்தம் 08 மந்த நிலைமைகளிலும் 03 இல் மட்டுமே நுகர்வு வீழ்ச்சி கண்டது.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சி நிலையினை 1930களில் உலகம் எதிர்நோக்கிய பாரிய மந்தநிலையோடு ஒப்பிட்டுப்பார்க்க முடியுமா? முதலில் பொருளாதார மந்தநிலை என்பதை வரையறுக்க வேண்டும். மந்த நிலை அல்லது தேக்கநிலை என்பதற்குப் பொதுவான வரைவிலக்கணம் கிடையாது. ஆனால் அநேகமான ஆய்வாளர்களின் கருத்துப்படி பொருளாதார வீழ்ச்சி நிலையானது மிக மிக மோசமாக அமையும் போது அது மந்தம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படுகின்ற வீழ்ச்சியானது 10%தை விட அதிகமாகக் காணப்படும் போது அதனை மந்தம் எனக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

1960 இலிருந்து மிகக் குறைந்தளவு மந்தநிலைமைகளே முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் பதிவாகியுள்ளன. குறிப்பிட்டுச் சொல்வதானால் பின்லாந்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தமே மிகவும் அண்மையில் ஏற்பட்டது. சோவியத் யூனியன் பிளவுபட்டமை காரணமாக, அதன் பெரும் வர்த்தகப் பங்காளியான பின்லாந்தின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. அது மந்தநிலைக்கு அந்நாட்டை இட்டுச் சென்றது.

1930 இல் இடம்பெற்ற பாரிய மந்த நிலையின் போது அமெரிக்கப் பொருளாதாரம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருந்தது. அதன் தேசிய வருமானம் 30%க்கு மேற்பட்ட அளவால் வீழ்ச்சியடைந் தது. தொடர்ந்து நான்கு வருட காலத்திற்கு இத்தகைய வீழ்ச்சிநிலை காணப்பட்டது. இன்று அமெரிக்கா எதிர்நோக்கும் வீழ்ச்சி நிலையானது மிகவும் மோசமானது என்றாலும் அதன் மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது 1930ன் பாரிய மந்த காலப்பகுதியில் இருந்ததை விட சிறிய அளவிலேயே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## References:


1. Lipsey, R.G., Harbury, C. (1994) First principles of Economics, Oxford, ELBS.
2. Vaish ,M.C.(2000) Macroeconomic Theory ,Vicas Publishing House,New Delh
3. Classens,S.,Ayhan Kose,M.(2009) What is a Recession? Finance and Development, I Washington.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும்
இரண்டும் சொல்லுக்குறுதி"




# இது பற்களின் கதை

-Dr.தேனுகா முரளீஸ்வரன் [i]-

இது கற்காலத்துக்கும் முற்கால எமது சான்றோர் வாக்கு. அக்காலத்திலேயே பற்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பது இக்கூற்றிலிருந்து புலனாகின்றது. இன்று நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் உச்சக்கட்டத்தில் இருக்கும் நாம் ஏன் எமது பற்களைப் பற்றிய ஒரு சிறந்த அறிவைப் பெறக்கூடாது. இக்கட்டுரையின் மூலமாக வாசகர்கள் தமது பற்களைப் பற்றிய ஒரு சிறு விளக்கத்தைப் பெறுவார்கள் என நினைக்கின்றோம்.

பற்கள்! நம் உடலில் இதற்கும் ஒரு முக்கிய பங்குள்ளது. இவற்றிற்கும் இரத்தவோட்டம் நரம்புகள் உள்ளன. குளிர், சூடு போன்றவற்றை உணரும் தன்மையும் கொண்டது தான் நம்முடைய பற்கள். பற்களின் தன்மைகளை அறியாதவர்களாகிய நாம் நம் அறியாமை என்னும் மூடுபனியை விரட்டியடிக்க தெளிவுபெற தொடர்ந்து படிப்போம். வாயைத் திறந்து உங்கள் பற்களை கண்ணாடியில் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் கண்களுக்குப் புலப்படும் வெண்ணிற பாகம்தான் பற்களின் தலைப் பாகம். மரம் செடி கொடிகளைப் போல பற்களுக்கும் வேர்ப்பகுதி உண்டு. அது தாடை எலும்பிலும் நிலைத்து நிற்கின்றன. பொதுவாக மனிதர்களுக்கு இரண்டு முறை பற்கள் முளைக்கின்றன. முதலில் குழந்தைப் பருவத்தில் காணப்படுவது பாற்பற்கள். இவை மொத்தம் 20. தற்காலிக பற்கள் எனப்படும் இவை விழுந்த பின்னர் நிரந்தர பற்கள் முளைக்கும். நல்லமுறையில் பேணிக்காத்தால் நம் வாழ்நாளில் கடைசிவரை வரக்கூடியவை என்பதால் இவற்றிற்கு நிரந்தரப் பற்கள் எனவும் பெயர் அமைந்தது.

பால்பற்கள் 12 வயதிற்குள் விழுந்து விடுபவையாக இருந்தாலும் பல பயன்களைச் செய்யக்கூடியவை. அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே இழக்கநேரிட்டால் உணவுப் பொருட்களை சரியாக அரைத்து உண்ண முடிவதில்லை. இந்நிலை தொடர்ந்தால் போதுமான ஊட்டச் சத்தை உண்ண முடியாமல் குழந்தை போதுமான வளர்ச்சி பெற்றிருக்காது. அத்துடன் நிலைப்பற்களின் சரியான வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்து தருபவை பால் பற்களே! இவற்றின் இழப்பினால் நிலைப்பற்கள் போதுமான வளர்ச்சியின்றி கோணல் மாணலாக முளைக்க வாயப்பிருக்கின்




றது. இதனால் தாடை வளர்ச்சி பாதிக்கப்பட்டு முகத்தின் அழகும் கெடும். எனவே தாடையின் சரியான வளர்ச்சிக்கு பால் பற்களும் நிலைப்பற்களும் மிக முக்கியமானவை.

ஒவ்வொரு பல்லும் ஒவ்வொரு வேலையை செய்வதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

**வெட்டும் பல் :** உணவுப் பொருட்களை வெட்டுவதற்கு வசதியாக முனைப் பகுதியில் தட்டையாக கூர்மையாக கத்தி போன்ற வடிவத்தில் இருக்கும்.

**கோரைப் பற்கள் :** உணவுப் பொருட்களை குத்திக்கிழிக்க உதவும்.

**கடைவாய்ப் பற்கள்:** உணவுப் பொருட்களை நன்றாக அரைக்க உதவும். இவ்வாறு அரைக்கப்படும்போதுதான் உமிழ்நீருடன் நன்கு கலந்து உணவுப்பொருள் இரைப்பைக்குள் செல்ல இயலுகிறது. இவற்றைவிட பற்கள் மேலும் பல முக்கிய பங்கை வகிக்கின்றன.

**பேசுவதற்கு :** நமது குரல் தொண்டையிலிருந்து எழுந்தாலும் நாக்கு, அண்ணம், உதடு, பற்கள் மற்றும் கன்னங்கள்தான் வார்த்தையை உச்சரிக்க உதவுகின்றன.

**அழகு :** பற்கள் உதடுகளுக்கு அமைப்பை அழகை அளிக்கின்றன. அழகான புன்னகைக்கு சீரான வரிசையான பற்கள் தேவை. இனி அனைவருக்கும் முக அழகையும் இனிமையான பேச்சு வளத்தையும் கொடுக்கும் பற்களைச் சீரழியச் செய்யும் சில தீய பழக்க வழக்கங்களைப் பற்றிப் பார்ப்போம்.

## பற்களைச் சேதப்படுத்தும் சில தீய பழக்கங்கள் :

1. **அதிகளவில் அமிலத்தன்மையான பானங்களை அருந்துதல்-**
   இவை பற்களின் பாதுகாப்பான வெளிபூச்சை (enamel) கரைக்கக் கூடியவை.

2. **மது அருந்துதல்-**
   மதுவின் அமிலத்தன்மையால் பற்களின் கழுத்துப்பகுதி கரைந்து பற்கூச்சம் ஏற்படுகிறது.

3. **குச்சியால் பல் குத்தும் பழக்கம்-**
   பற்களின் இடுக்குகளில் சேரும் உணவுத் துணிக்கைகளை குச்சியால் குத்தி எடுக்கும்போது முரசு சேதப்படுகிறது.

4. **கராம்பு போன்ற கை மருந்துகளின் பிரயோகம்-**
   பல் வலிக்கு கராம்பு கடிப்பது பாட்டி வைத்தியம். ஆனால் கராம்பிலுள்ள யூஜினோல் (eugenol) பற்கூழை செயலிழக்கச் செய்யும்.

5. **கடினமான பொருட்களைக் கடித்தல்-**
   இதனால் பற்களில் விரிசல் விழலாம். பல் மிளிரி (enamel) உடைந்து போகலாம்.

6. **கிருமிகள்-** பற்களை சுத்தமாக வைக்காவிட்டால் அவை கிருமிகளின் கிடங்குகளாகி வாய் மற்றும் முழு உடம்பிற்கும் பற்பல நோய்களை உண்டாக்கும்.

பொதுவாக நாம் பல்லில் கவனம் செலுத்தும் அறிகுறிகள் என்னவென் றால்,

1. பல்வலி 2. வீக்கம்
3. வாய் துர்நாற்றம் 4. இரத்தம் வடிதல்-

பல் துலக்கும்போதும் தூங்கி எழுந்த பிறகும் இரத்தம் கசிவதைக் கண்டால் தான் நாம் நமக்கு முரசு சம்பந்தப்பட்ட பிரச்சினை இருக்கிறது என்பதனையே உணர்கிறோம். பற்கள் ஏதேனும் உடைந்துவிட்டால் முக்கியமாக முன் பல்லாக இருந்தால் மட்டுமே உடனே அதனைக் கவனிப்பதில் நம்மவர்கள் அதிக எச்சரிக்கையாக இருப்பார்கள். இதேபோல உடைந்த பற்கள் பின் பற்களாக இருந்துவிட்டால் பிறகு பார்க்கலாம் என்று அலட்சியம் செய்கிறார்கள்.

பற்களை நாம் எப்படியெல்லாம் வீணாக இழக்காமல் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி காண்போம்.

1. பற்களுக்குள் ஏற்படும் வலி போன்றவற்றை அவ்வப்போது கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பல்வலி பல காரணங்களால் ஏற்படுகின்றது. பற்சொத்தையாக இருக்கலாம் முரசு சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். அத்துடன் முக்கியமாக இருதய நோய்க்கான அறிகுறியாக இருக்கலாம். உடனடியாக வைத்தியரிடம் காண்பிப்பது உகந்தது.

2. பற்களுக்குள் உள்ள சொத்தைகளை சரியான நேரங்களில் சரிசெய்துகொள்ள வேண்டும். இதற்கு மிகவும் அதிநவீன முறைகளைத் தற்பொழுது மருத்துவர்கள் கையாளுகின்றனர். எனவே காலத்திற்கு ஏற்றவகையில் நம் நிரந்தரப்பற்களை சீரமைக்கும் முறைகளைப் பயன்படுத்திக்கொள்வது நல்லது.

3. அவ்வப்பொழுது மருத்துவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப பற்களையும் முரசுகளையும் சுத்தம்செய்து கொண்டால் முரசு சம்பந்தப்பட்ட நோய்களை அண்டவிடாமல் செய்யலாம். அவ்வாறே நம் பற்களுக்கு தூண்களாக விளங்கும் தாடை எலும்பு போன்றவற்றை நல்ல நிலையில் பல ஆண்டுகளாக நம்மால் வைத்திருக்க முடியும். வாய்த் துர்நாற்றம் போன்றவற்றிலிருந்து விடைபெறலாம். இரத்தம் கசிதல் என்ற பேச்சிற்கே இடம்கொடுக்காமல் முரசை நல்லமுறையில் பாதுகாக்கலாம். **“வலுவான முரசுகள் வலுவான பற்களுக்கு அத்திவாரம்”**

“வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பதே சாலச் சிறந்தது” என்ற கூற்றுக்கமைய பற்களிலும் முரசிலும் தினமும் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக கடைப்பிடிக்க வேண்டிய சில வழிமுறைகள்:

**சீராகப் பல்துலக்குதல் :**

இருவேளை காலையும் மாலையும் சரியானவிதத்தில் பல்துலக்க வேண்டும். இவ்வாறு செய்யும்போது உணவுப் பொருட்கள் பற்குழிகளில் தங்காமல் நீக்கப்படுகின்றது. காரைகள் பற்களின் மேற்புறத்தில் படிவது

தவிர்க்கப்படுகின்றது. பெரும்பாலும் மருத்துவர்களின் ஆலோசனைக்கேற்ப பல் துலக்கும் முறையை அறிந்துகொண்டு துலக்குவது நல்லது.

பற்களுக்கிடையேயுள்ள உணவுப் பொருட்கள் வெளியேவராவிட்டால் 'Inter Dental Tooth Brush' (பல் இடுக்குகளுக்குள் பயன்படுத்தும் விசேட பற்தூரிகை) பயன்படுத்தலாம். இல்லையென்றால் 'flossing' (ஃப்ளாஸ்) முறையாகச் செய்யலாம். சிறிய நூல்போன்று மெல்லியதாகக் கிடைப்பது 'Dental Floss'. இவற்றை பற்களுக்கிடையில் *பயன்படுத்துவதால் பற்களுக்கிடையே* தங்கும் உணவுப்பொருட்களை நன்றாகச் சுத்தம் செய்யலாம். முரசுகளில் காரைகள் படியாமல் தடுக்கலாம். இவற்றைப் பயன்படுத்துவது மிகவும் எளிது. தற்பொழுது உள்ள அதிநவீன 'floss' பயன்படுத்தினால் அவற்றைப் பற்களுக்கிடையே புகுத்தி முன்னும் பின்னுமாக அசைக்கலாம். இல்லாவிடில் மேலும் கீழுமாக அசைத்தல் போதுமானதாக இருக்கும். ஒவ்வொரு உணவிற்கு பின்னும் flossing செய்வதினால் பற்களை ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும். ஏனெனில் tooth brush சென்றடைய இயலாத இடங்களிலும் இந்த floss சென்றடையும். இவ்வாறு செய்வதினாலும் வாய்த்துர்நாற்றம் வருதல், முரசுகளில் இரத்தம் கசிதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியும்.

இவற்றுடன் கிரமமான பல் மருத்துவ சோதனை செய்துவருதல் சாலச் சிறந்தது. இவ்வாறு செய்வதன்மூலம் எமக்குத் தெரியாமல் ஒளிந்திருக்கும் பல், முரசு, வாய் சம்பந்தப்பட்ட நோய்*களை கண்டறிந்து சரியான நேரத்தில்* சிகிச்சைபெற உதவும்.. "பல்லுப் போனால் சொல்லுப் போச்சு" என்ற சான்றோர் கூற்றுக்கமைய எமது அழகிய பற்களை இவ்வாறான நல்ல பழக்க வழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலமாக சிறந்தமுறையில் பேணிக்காத்து வந்தால் நம் வாழ்நாளில் கடைசிவரை பற்களை தக்கவைத்துக்கொண்டு நல்ல முறையில் சந்தோசமாக கதைத்துப் பேசி மகிழலாம்.



நெடுஞ்சாலைகள், புகையிரதங்கள், விமான நிலையங்கள் மற்றும் இரைச்சல் நிறைந்த பிரதேச வீடுகளில் வாழ்வோர் பழையவற்றை மீட்டுப் பார்க்கும் ஞாபகசக்தி குறைவுள்ளவர்களாகவும் புதிய விடயங்களை இலகுவில் கிரகிக்கவும் கற்கவும் முடியாதவர்களாயும் உள்ளனராம். காரணம் இவர்களின் தூக்கம் இரைச்சல்கள் மத்தியிலே நடைபெறுவதாகும். ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் ஒருவர் தடங்கல்கள் சத்தங்களுடன் தொடர்ந்து நித்திரையிலீடுபடுவதால் ஞாபக சக்தியையும் கற்கும் ஆற்றலையும் இழந்து விடுகின்றனர் என ஆராய்ச்சிகள் கூறுகின்றன. மூளையின் ஞாபகசக்திக்கு உதவும் பிரதேசம் hippo campus பகுதியாகும். இப்பகுதிக்கு ஆழ்ந்த நித்திரைக்கு இடைஞ்சலற்ற அமைதி, அதிகளவு வெளிச்சம் இல்லாத சூழல் என்பன அவசியம். அப்படியான உறக்கத்தின் போது மூளையின் இப்பகுதி சரியாக வேலை செய்யும் எனக் கூறுகின்றனர் ஆய்வாளர்கள்.

***Vebrand Van der werf of the Netherlands Institute of Neurosciences***



# முள்முருக்கு

-அனுராதா பாக்கியராஜா (K)

சிறுகதை

காலை 7 மணிதான் இருக்கும். வாசலைக் கூட்டிக்கொண்டு நின்ற சேகர் திடீரென்று சிரிக்கத் தொடங்கினான். 'என்ன இது விடியற் காலையிலேயே சிரிக்கிறானே இவனுக்கு பயித்தியம் கியித்தியம் பிடிச்சிட்டுதோ? மனதுக்குள் நினைத்தபடியே வெளியே வந்து பார்த்தேன். முற்றத்தில் பருத்த அடியோடு விசாலித்து வளர்ந்து நின்ற இரண்டு முள்முருக்கு மரங்களையும் வைத்த கண் வாங்காமல் பார்த்தபடியே மறுபடியும் சிரித்தான் அவன். என்னால் பொறுக்க முடியவில்லை. "ஏண்டாப்பா சேகர்! என்னாச்சு உனக்கு? போயாவும் முடிஞ்சு இரண்டு நாளாச்சு! தனியாய் நிற்கிறாய்! தனியாய் சிரிக்கிறாய்! என்ன ஆனாலும் என்கிட்டயும் சொல்லிட்டு சிரிடா"! இப்படி அவன் சிரித்தால் ஏதோ சங்கதி இருக்குமென்று எனக்குத் தெரியும். எனவே அவனிடமிருந்து விஷயத்தைக் கறக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு. அந்த நேரத்தில் அவன் என்னை எதிர்பார்க்கவில்லை போலும். திடீரென்று திரும்பியவன் "ஓ! ரேவதியம்மாவா.. வாங்க வாங்க" என்று வாயார வரவேற்கத் தொடங்கினான்.

"சரி.. சரி.. நீ வரவேற்றது போதும் ! உன்னோட சிரிப்புக்குக் காரணமென்ன? முதல்ல அதைச் சொல்லு பார்ப்போம்.. என்றேன் நான். "அதொன்றுமில்லம்மா.. நம்ம மரகதத்தம்மாவ நினைச்சேன்.. சிரிப்புத் தாங்க முடியல்ல.. அதான் சிரித்தேன்" வெகு சாதாரணமாகச் சொல்லி வைத்தான் அவன். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனைக்கும் மரகதத்தம்மா வேறு யாருமில்லை. நான் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரி. சேகருக்கு எஜமானியம்மாள். அப்படியிருக்க அந்த அம்மாவையே கேலி பண்றமாதிரி பேசுறானே முட்டாள்! இப்படித்தானே நாளைக்கு நம்மைப் பற்றியும் பேசுவான் என்ற எண்ணம் தோன்றவே "சரி.. சரி.. அந்தம்மா அப்படி என்னதான் பண்ணிற்றா? மறுபடியும் நானே கேட்டேன்.

"சொல்றேம்மா". காவி படிந்த தன் பற்களைக் காட்டிச் சிரித்தபடியே "ஒரு நிமிசம் பொறுங்க.. இந்தக் குப்பையைக் கூட்டி எரிச்சுப்போட்டு வந்து சொல்றன்" என்றவன் மீண்டும் மிகவேகமாகக் கூட்டத் தொடங்கினான். உள்ளே இட்லிச் சட்டியிலிருந்து விசில் சத்தம் பலமாகக் கேட்கத் தொடங்கியது. அவன் வருவதற்குள் இட்லியை இறக்கி பொட்டுக் கடலைச் சட்னியும் அரைத்துவிடலாம் என்ற எண்ணத்தில் அவசர அவசரமாக

உள்ளே ஓடினேன். அப்போதுதான் மரகதத்தம்மா படுக்கையிலிருந்து எழும்பியிருந்தாள். சேகரின் மனைவி மீனாட்சி அவளுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். பரபரவென்று என் வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு வெளியே வராண்டாவில் வந்து அமர்ந்து கொண்டேன்.

பட்டுப்போல நிலம். ஒரு தூசு துரும்பில்லாமல் துடைத்திருந்தான் சேகர். அவனும் அவன் மனைவியும்தான் இந்த வீட்டின் எல்லாப் பொறுப்புகளையும் பார்த்துக் கொள்கின்றனர். நான் இந்த வீட்டுக்குக் குடியிருக்க வந்து ஐந்து வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. சேகரும் மீனாட்சியும் எனக்கு முன்பிருந்தே வேலை பார்க்கிறார்கள். பாவம் பாரிசவாதத்தால் படுக்கையில் விழுந்துவிட்ட மரகதத்தம்மாவிற்கு இவர்கள்தான் ஆதாரம். எழுபத்தெட்டு வயசான மரகதத்தம்மாவுக்கு அமெரிக்காவில் ஒரு பெண்ணும் லண்டனில் ஒரு மகனும் சந்தோஷமாக வாழ்க்கை நடாத்துகிறார்கள். கிழவிக்கு இரவும் பகலும் அவர்கள் கதைதான். "என்ர குஞ்சுகள் ரெண்டும் கண்காணாத தேசத்துல கிடந்து என்ன கஷ்டப்படுதுகளோ? பெருமாளே! என்ர பிள்ளைகளக் காப்பாத்துப்பா" கண்ணீர் வடியக் கடவுளைக் கும்பிடுவார். "என்னம்மா பிள்ளையள் பிள்ளையள் எண்டு உருகிப் போறயள். அவங்க உங்களைப்பற்றி நினைச்சும் பார்க்கிறாங்களில்லையே" சொல்லிவிட்டு சேகர் சிரிப்பான்.

உண்மைதான் நாலு வருஷங்களுக்கு முன்னால ஊரிலிருந்த காணி பூமியையெல்லாம் வித்து மனுஷி ரெண்டு மக்களுக்கும் கல்யாணம் பண்ணி வெளிநாட்டுக்கு அனுப்பி வைச்சதுதான் மிச்சம். ஐந்து ஆறு மாசத்திற்கு ஒருக்கா ரெலிபோன் கோல் எடுப்பதோடு சரி. அதுவும் முறை வைத்துத்தான் பேசுவார்கள். மீனாட்சி சொல்லுவாள் "அம்மா பெரியம்மாவுக்கு ரொம்ப முடியலைம்மா.. இந்த மாசம் மட்டும் ரெண்டு தடவை அப்பலோவுக்குக் கொண்டுபோனம். அம்பியூலன்சுக்குக் கொடுத்ததிலேயே செலவாயிடுச்சு. அம்மா பேருக்கு ஏதாச்சும் அனுப்புங்கம்மா" அவள் பேசி முடிக்கு முன்னமே "என்னடி சொல்லுறாய் மீனாட்சி வீட்டு வாடகைக் காசெல்லாம் அம்மாவுக்குத்தானே கொடுக்கிறம். ரெண்டு வீட்டு வாடகையும் முப்பதாயிரத்துக்கு மேல வருமே.. அத வச்சுச் சமாளிக்க முடியாதா உனக்கு?" எதிர்முனையிலிருந்து கிழவியின் மகள் கீரிடுவாள். "அம்பியூலன்சிற்கு மருந்துச்செலவிற்கு வாட்டுச் செலவிற்கெல்லாம் அது காணாதம்மா" இது மீனாட்சியின் வாதம். "அப்படியா.. இனி யாராவது ஆயுள்வேத வைத்தியரிடம் காட்டிப்பாரு. வயசுபோன காலம். எவ்வளவு செலவழிச்சாலும் தேறப்போறதில்ல.. சரியா" என்பாள் அவள். அவ்வளவோடு பேச்சும் முடிந்துவிடும். மீனாட்சி ஒன்றுமே சொல்லமாட்டாள். அடுத்தமுறை கிழவியின் மகன் கோல் எடுப்பான். வீடு வாசல் மரஞ்செடியெல்லாம் நன்றாக இருக்கிறதா? என்று விசாரணை ஆரம்பமாகும். "அம்மாவுக்குத்தான் ரொம்ப முடியல்ல ஐயா.. செலவுக்குக் காசும் போதல்ல... அம்மா ஒரே உங்களையெல்லாம் பார்க்கணுமாம் என்று சொல்றாங்க" என்பாள். "சரி.. சரி.. அக்கா எல்லாம் சொன்னாங்க.. அவ சொன்னபடியே செய்" என்று சொல்லிவிட்டுக் கடமைக்காக தாயிடம் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு வைத்துவிடுவான்.

கிழவியைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கும். "என்னம்மா மகன் என்ன

சொன்னாரு?" நான் மெதுவாக விசாரிப்பேன். "என்னப் பார்க்க ஆசை தானாம்.. பாவம் பிள்ளைக்கு லீவு கிடைக்கல்லியாம்.. சின்னதுகளுக்கு படிப்புக் குழம்பிடுமாம்.. மருமகளுக்கும் லீவு கிடைக்க வேணுமாம்.. வசதிப்படுறபோது வருவானாம்" மகனின் வார்த்தைகளை நம்பியதில் மனுஷிக்கு மனசு பூரித்துப்போனது. ரெண்டு மக்களும் அன்று பயணப்படும் போது நீ ஒன்றுக்கும் யோசிக்காதம்மா. எனக்குப் பீ.ஆர் கிடைச்சதும் நான்தான் முதலில் கூப்பிடுவன் என்றான் மகன். அம்மா அதைப்பற்றிக் கவலையே படாதம்மா.. மாதா மாதம் காசனுப்புவன்.. எல்லாம் சரிவந்த உடனே நீ என்கூட வந்திடவேண்டும் என்றாள் மகள். அந்தளவில் மரகதத்தம்மாள் பாக்கியசாலிதான் என்று நான் நினைத்தேன். ஆனால் காலம் போகப்போகத்தானே எல்லாம் புரிஞ்சுது. இந்த நாலு வருஷ காலத்துக்கும் மனுஷிக்கு ஒரு பிஸ்கட் பக்கற் கூட அவர்கள் அனுப்பியது கிடையாது. ஆனால் மனுஷியோ மக்களுக்காக உருகிப்போவாள். பிள்ளைகள் வருவார்கள்.. பார்ப்பார்கள்.. கூட்டிப்போவார்கள் என்ற ஆசையெல்லாம் போய் இப்போது பிள்ளைகளை ஒருதடவையேனும் தான் பார்க்க மாட்டோமா என்று மனுஷி ஏங்கித் தவிக்கிறது.

"அம்மாவைப் பார்க்கிறது ரொம்பக் கஷ்டமாயிருக்கிறதம்மா.. ஒரே உங்க நினைவாத்தான் இருக்கிறா.. மருந்துகூட சாப்பிடுறாவில்ல" என்று மீனாட்சி ஒரு தடவை சொன்னாள். "ரொம்பப் பாடுபடுத்தினா எங்காவது முதியோர் மடத்துல சேர்த்துவிட வேண்டியதுதான் மீனாட்சி" என்றாள் மகள். நான் அதிர்ந்துபோனேன். பெத்து வளர்த்து ஆளாக்கிவிட்ட தாய்க்கு.. ஒரு மகள் சொல்லவேண்டிய வார்த்தைகள்தான். மீனாட்சி கலங்கிப்போனாள். அவளுக்குப் பராமரித்த பாசம். மகனும் மகளும் சீதனக்காசில் வாங்கிப் போட்ட வீடு. கிழவி காவலுக்கு இருந்து காலத்தைக் கடத்துறா. கிழவியின் கண்ணுக்குப்பிறகு இதையும் விற்றுவிடுவார்களாக்கும். இதுதான் என் யூகம்.

முன்னர் சொன்னபடியே வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு சேகர் வந்து என் முன்னால் கிடந்த திண்டொன்றில் குந்திக் கொண்டான். "என்ன சேகர் வேலையெல்லாம் முடிஞ்சிட்டுதோ?" நான்தான் கேட்டேன். "ஒருபடியா எல்லாம் முடிஞ்சுதம்மா.. இனி அம்மா வீட்டுக் காரியங்கள்தான் பார்க்க வேண்டும்" என்றான் அவன். அம்மா வீட்டுக் காரியங்கள் என்று அவன் சொன்னதெல்லாம் வேறொன்றுமில்லை. மரகதத்தம்மா குளிப்பதற்குக் கொஞ்சம் வென்னீர் வைக்கவேண்டும். அவவோட மெத்தை தலையணைகளையெல்லாம் காயப் போடவேண்டும். கழுவிப் போடவேண்டும். இத்தியாதி.. இத்தியாதி.. சொல்லிக் கொண்டே போகலாம். வேலைகளை முடித்தாலும்கூடகிழவி அவனைச் சும்மா இருக்கவிடாது. ஏதாவது வேலை சொல்லிக்கொண்டே இருப்பா. ஆனாலும் பாவம். இல்லாக் கொடுமையினால் புருஷன் பொண்டாட்டி இருவருமே வருஷக்கணக்காக கிழவிக்கு விசுவாசிகளாகத்தான் இருக்கிறார்கள். எனக்குத் தெரியும் இன்னும் ஐந்து நிமிடம்கூட அவன் இங்கே இருக்கமாட்டான்.

அதற்குள் அவனுக்கு ஏதோ ஒரு வேலை காத்திருக்கும் என்பது நிச்சயம். எனவே "எதுக்குடா சேகர் காலையில சிரிச்சனீ" என்று கேட்டேன். சாறன் மடிப்புக்குள் இருந்த வெற்றிலைச் சரையைப் பிரித்து பாக்கு சுண்ணாம்பு புகையிலை சேர்த்து வெற்றிலையைக் குதப்பியவன்

"இந்த முள்முருக்க மரத்தைப் பாரு தாயி.. ஒருக்காப் பார்த்திட்டு எப்பிடி இருக்குதென்று சொல்லு பார்ப்பம்" என் றான். அவன் சொன்னபடியே அண்ணாரந்து பார்த்தேன். அடக் கடவுளே அடி பெருத்து விசாலித்து வளர்ந்திருந்த முள்முருக்கு மரம் நிரம்ப ஏதோ ஒரு நோய் பிடித்து இலைகள் எல்லாம் தொழுநோய் பிடித்த மாதிரி சுருண்டு சுருண்டு கருகிப்போய் மொட்டையாய்க் கிடக்க மரம் முழுவதும் மயிர்க்கொட்டிப் புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தன. "என்னடா சேகர் இது? மரக்கந்துகளைக் களைந்து விடடா இல்லாட்டி மரம் பட்டுப்போய்விடும்" என்றேன் நான். சேகர் சிரிக்கத் தொடங்கினான். "என்னம்மா மரக்கிளைகளை களையச் சொல்றீங்களா?.. ஒரு நிமிஷம் நில்லுங்க.." "பெரியம்மோய்.. இந்த முள்முருக்கு மரம் இனித்தாக்குப் பிடிக்காது பெரியம்மா.. மேல் கந்துகளை மட்டுமாவது வெட்டிவிட்டா? கந்துகளை வெட்டிவிட்டா மாதலிச்சு வளர்ந்திரும்மா.." சொல்லிவிட்டு அவன் என்னைப் பார்த்தானோ இல்லையோ "அடேய் தலையால பிறந்தவனே! அது பந்தல் கால் முருங்கையடா.. கல்யாணக்காலுக்கு வைச்ச முருங்கையில கைவச்சுப் போடாதடா.. கண்காணாத தேசத்துல இருக்கிற என்ர குஞ்சுகள் நல்லாயிருக்க வேணும்.. சொல்லிப்போட்டன் கந்தைக் கிந்தை வெட்டிப்போடாத.. வேணுமெண்டா வேப்பஞ்சருகுகளை எரிச்சி சாம்பலை விசிறிவிடடா எல்லாஞ் சரியாய்ப் போயிடும்" தன் சக்தியெல்லாம் ஒன்று சேர்த்துக் கத்தினாள் மரகதத்தம்மாள்.

"பார்த்தீங்களா அம்மா பெரிய விவசாயக் கொலிச்சில படிச்சி வந்தவங்க மாதிரிப் பேசுறாங்க. இதுக்குச் சிரிக்காமல் என்னம்மா பண்றது? நாலைஞ்சு கந்துகளை வெட்டிவிட்டா நல்லா தழைச்சு செங்கொழுந்தாய்ப் பூக்குமே என்று பார்த்தன்.. மனுஷி கேட்டால்தானே மரத்தில கை வைச்சால் மக்களுக்குக் கூடாதாம். இப்ப சொல்லுங்க" சொல்லிக் கொண்டே மீண்டும் என் முகத்தைப் பார்த்தான் அவன். நான் ஒரு நிமிடம் மௌனித்துப் போனேன். பிறகு "அது தாண்டா தாயுள்ளம் என்கிறது. சேகர் உனக்குத் தெரியுமாடா? கோழி இருக்குதே கோழி.. அது மழையோ வெய்யிலோ ஆபத்தோ அதிர்ச்சியோ, எது வந்தாலும் தன் குஞ்சுகளை செட்டைக்குள் வைத்துக் காப்பாற்றும் பார். அதுபோலத் தாண்டா தாய் மனசும்.. தான் நொந்தாலும் தன் பிள்ளைகள் வாழவேண்டும் என்பதுதாண்டா ஒரு தாயோட தவம்.. அப்படியிருக்க மரகதத்தம்மா மட்டும் எப்படி விதிவிலக்காவா? அவவோட நம்பிக்கை அந்த முள்முருக்கென்றால் நாமும் நம்பிக்கொள்வோமே" சொல்லிவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். சேகரின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழியத்தொடங்கியது. "ஏன்டா.. ஏன்டா சேகர் அழுறே" இது என் கேள்வி. "இப்படி ஒரு தாயைப்பெற எனக்குத்தான் கொடுப்பினை இல்லையே அம்மா.. நான் பொறக்கும்போதே என் தாயை முழுங்கிட்டேனாம். எங்கப்பாரு சொன்னாரு. காலையில சிரிச்சேன். இப்ப அழுகிறேன். பார்த்தீங்களா" அவன் சோகத்தோடு என்னைப் பார்த்தான். "சரி சரி கவலைப்படாத மரகதத்தம்மா சொன்ன மாதிரி வேப்பிலையைப் புகையவிட்டு சாம்பலை மரக்கிளைகளில விசிறிவிடு. அடுத்த சீசனுக்கு முள்முருக்கு உன் விருப்பம்போல செங்கொழுந்தாய்ப் பூத்துச் சிரிக்கும்." "சரிம்மா வேப்பம் சருகுகளை எரித்து சாம்பலை விசிறிவிடுகிறேன்" என்றபடியே முள்முருக்கை நோக்கி நடக்கத் தொடங்கினான் அவன். ■

(யாவும் கதாசிரியரின் கற்பனையில் உதித்தவையே)

# ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளின் தனித்துவ அம்சங்கள்

*- ஏ.லோகமலர்* [1] -

ஈழத்தில் 1980களில் தான் பெண்கள் பெண்ணிய நோக்கில் கவிதை எழுதத் தொடங்கிய போதிலும் இதற்கு முன்பு பெண்களைப் பற்றி பெரும் பாலான ஆண்களும் ஒரு சில பெண்களும் கவிதைகளை எழுதியிருந் தாலும் அவை பெண்களுடைய உண்மையான வாழ்க்கை நிலையை அடி மன உணர்ச்சிகளை, மனக் குமுறல்களை வெளிப்படுத்துவனவாக அமையவில்லை. ஆனால் பெண்கள் தாமாகவே எழுதுகின்ற போது தான் தமது முழுமையான உணர்வுக்களை வெளிப்படுத்த முடிகின்றது. இலங் கையைப் பொறுத்தளவில் பெண்கள் கவிதை எழுதுவதற்கு காரணமான அரசியல் பின்னணிகளாக அரச இன ஒடுக்கு முறையின் உச்சக்கட்ட விளைவுகள், தமிழிழ விடுதலை இயக்கங்களில் பெண்கள் இருந்தமை முக்கியமானவையாகும். இலங்கைப் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட இத்த கைய சமூக அரசியல் மாற்றங்கள் கவிதைகளில் வெளிப்பட்டமை கார ணமாக இலங்கைப் பெண் கவிஞர்களின் கவிதைப் போக்குகள் தமிழ கத்திலிருந்து சிற்சில விதங்ககளில் வேறுபட்டிருப்பதைக் காண முடிகின்றது. ஈழத்துப் பெண்களின் நவீன கவிதைகளின் தனித்துவங்களை மேற்கூறிய வகையில் வகைப்படுத்தலாம்.

- பிரக்ஞை பூர்வமாக பெண் என்ற நிலையிலிருந்து தமது உணர்வுக ளையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தும் கவிதைகள்.
- போராளிப் பெண்களின் கவிதைகள்.
- புகலிடப் பெண்களின் கவிதைகள் .

அந்த வகையில் பிரக்ஞை பூர்வமாக பெண் என்ற நிலையிலிருந்து தமது உணர்வுகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் தன்மையை நோக்கு வோமாயின்,

ஆண்கள் பெண்களின் உடலை மட்டும் நோக்குவதை கேலி செய்தும் கண்டித்தும் எழுதுதல். பெண்களின் சமூக விழிப்புணர்ச்சியின் கவிதை நிலைப்பட்ட முதற்குரல் இலங்கையிலிருந்து 1986ல் ஒலித்தது. ஆழ்ந்த அர்த்தம் பொதிந்த **சொல்லாத சேதிகள்** என்ற கவிதைத் தொகுப்பாக அது வெளிப்பட்டது. இத்தொகுப்பில் இடம்பெறும் **அ.சங்கரியால்** எழு தப்பட்ட **அவர்கள் பார்வையில்** என்ற கவிதை ஆண்கள் பெண்களின் உடலை மட்டும் நோக்குவதை கேலி செய்தும் கண்டித்தும் எழுதப் பட்டுள்ளதைக் காணலாம்.

"எனக்கு
முகம்இல்லை
இதயம்இல்லை
ஆத்மாவும்இல்லை
அவர்கள் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன....."

சீதனக் கொடுமையை கண்டித்து எழுதும் போக்கையும் இவர்களது கவிதைளில் காணலாம். ஔவையார் **கலியாணம்** என்ற தலைப்பில் எழுதிய கவிதையானது ஒரு பெண்ணுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டு மற்றப் பெண்ணுக்காக சீதனம் பற்றிக் கவலைப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலை எடுத்துக்காட்டுவதாகக் காணப்படுகின்றது.

"காணிநிலம் வீட்டுடன் கலியாணம் முடிந்தது
அப்பாடா என்று மூச்சு விடுவதற்குள்
முப்பது வயது முழுதாய் முடிந்தது
முற்றிருந்தால் மற்றவள்........."

ஈழத்துப் பெண் கவிஞர்கள் பெண்களுக்கு சமூகத்தில் விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை கண்டித்தும் எழுதியுள்ளனர். ஒரு பெண்ணுக்கு இழைக்கப்படுகின்ற கட்டுப்பாடுகளை **கனவுப் பூக்கள்** என்ற கவிதைத் தொகுதியில் காணலாம். பெண் சமூகத்தில் வாய் கூட திறக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

"நாம் பாட நினைத்து வாய்திறந்தால்
எம்மைச் சூழவுள்ள கூண்டின் கம்பிகள்
எம்மை ஊமையாக்குகின்றன
நாம் ஆடவென்று உடலசைத்தால்
அச்சுறுத்தும் பல வழிகள் எம்மைப்
பிடுங்குகின்றன....."

இத்தன்மையை அ.சங்கரி **சொல்லாத சேதிகள்** என்ற தொகுப்பில் **இன்று நான் பெரிய பெண்** என்ற கவிதையிலும் கூறுகின்றார்.

"இன்று
நான் பெரிய பெண்
உரத்துச் சிரித்தல் கூடாது........."

## ஆங்கிலக் குறுக்கெழுத்துப் போட்டி இல- 05க்கான சரியான விடைகள்

***இடமிருந்து வலம்:***

| | | | | |
|---|---|---|---|---|
| 01. Perambulator | 10. Flea | 11. Inch | 12. Religion | 14. In |
| 16. Bay | 17. Velvet | 19. Einstein | 20. Sin | 21. It |
| 22. Rabbit | 24. Mouse | 27. Radius | 28. Trident | 30. Team |
| 31. Horn | 32. Titanic | 33. Paste | 35. Neon | 36. Union |
| 37. No | 39. Hag | 40. Tear | | |

***மேலிருந்து கீழ் :***

| | | | | |
|---|---|---|---|---|
| 01. Parliament | 02. Eel | 03. Rebel | 04. Afganisthan | 05. Bin |
| 06 . University | 07. Iceland | 08. Ah | 09. Orientation | 13. Oyster |
| 15. Tsunami | 18. Vibrate | 23. Biennial | 25. Onrush | 26. Utopia |
| 29. Die | 34. Leo | 38. On | | |

***முற்றிலும் சரியான விடைகளை எழுதிப் பணப்பரிசு பெறும் வாசகர்கள்:***

1ம் பரிசு - ரூ.250.00 T.சிவசீலன், விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம். கி.ப.கழகம்.
2ம் பரிசு - ரூ.200.00 S.பிரசாந்த், விலங்கியல்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.
3ம் பரிசு - ரூ.150.00 S. தர்ஷினி, 46, சின்ன உப்போடை றோட், மட்டக்களப்பு.

***பாராட்டுப் பெறுபவர்கள்:***

A.J.M.ஹரிஸ், விலங்கியல்துறை, கி.ப.
திருமதி.S. தயாளன், தாவரவியற்றுறை, கி.ப.
S. பிரதீபன், 384/12, பார் வீதி, மட்டக்களப்பு.
S.M. லக்ஷா, 18, பயனியர் வீதி, மட்டக்களப்பு.
G. ஜெயகாந்த், வேதியற்றுறை, கி.ப.
T. அக்ஷயன், 21, இருதயபுரம், மட்டக்களப்பு.
T. கவிஷிகா, புனித அந்தோனியார் வீதி,மட்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல- 45க்கான சரியான விடைகள்

***இடமிருந்து வலம்:***

| | | | | |
|---|---|---|---|---|
| 01. வக்கிரதந்தன் | 08. சம(ர்)த்தன் | 09. மிக | 10. துக்கிதம் | 11. பாழ் |
| 12. கேள்வி | 13. வாகரை | 15. கரடு | 17. பாணன் | 19. கண்டிலன் |
| 22. சாமரம் | 23. முறிகண்டி | 24. அக | | |

***மேலிருந்து கீழ் :***

| | | | | |
|---|---|---|---|---|
| 01. வசக்கேடு | 02. விக்கிரமன் | 03. கித்துள் | 04. ரதம் | 05. தன்தரை |
| 06. தமிழ்வாணன் | 07. பாகன் | 14. கபாலம் | 16. பிடிமண் | 18. கண்ணன் |
| 20. கரடி | 21. முகை | 22. சாக | | |

***முற்றிலும் சரியான விடைகளை எழுதிப் பணப்பரிசு பெறும் வாசகர்கள்:***

1ம் பரிசு ரூ.250.00 எம்.மகேந்திரன், 41/12, திசவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு
2ம் பரிசு ரூ.200.00 ச.பிரசானி, 515/48A, திருமலை வீதி, மட்டக்களப்பு
3ம் பரிசு ரூ.150.00 த.ஸ்ரீதரன், விவசாயப்பொறியியல் திணைக்களம், கி.ப.க.

***பாராட்டுப் பெறுபவர்கள்:***

தி.செல்லையா, விவசாயப்பொறியியல் துறை, கி.ப.க.
செ.மகேந்திரன், விவசாய உயிரியல் துறை, கி.ப.க.
ச.பிரசாந்த், விலங்கியல் துறை, கி.ப.க.
திருமதி. ச.தயாளன், தாவரவியல் துறை, கி.ப.க.
ஆ.பரமானந்தம், விவசாய இரசாயனவியல் துறை, கி.ப.க.
ந.குமரையா, தாவரவியல் துறை, கி.ப.க.
த.குகதாசன், தாவரவியல் துறை, கி.ப.க.
த.ரேணுகா, உபவேந்தர் அலுவலகம், கி.ப.க
B.டிலக்ஷனா, பொருளியல் துறை, கி.ப.க.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை எழுதுதல் பெண் கவிஞர்களின் போக்கில் ஒன்றாக காணப்படுகின்றது. சிவரமணி வாழ்ந்த காலப்பகுதி யிலே பெண்களுக்கெதிரான சம்பவங்கள் இடம்பெற்றன. இதுவே அவரை பெண்ணிலை நோக்கில் கவிதை எழுதத் தூண்டியதாகும். முனைப்பு என்ற தலைப்பில் சிவரமணி எழுதிய கவிதையைக் குறிப்பிடலாம்.

" பேய்களால் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப்பட்டேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்.............."

ஆரம்பத்தில் பெண்கள் இருந்த நிலையை எண்ணி வெட்கப்படும் நிலை யையும் பெண்களின் கவிதைகளில் காணலாம். இத்தன்மை சிவரமணியின் **வையத்தை வெற்றி** கொள்ள என்னும் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

" சரிகைச் சேலைக்கும்
கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள்
அந்த வெட்கம் கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்திடுவோம்..............."

பெண்களுடைய கவிதைகளில் அவர்களுடைய காதல் உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல் ஒரு தனிப்போக்காகவே இருக்கிறது. ஏற்கனவே ஆண் கள் தான் பெண்களாகத் தங்களைப் பாவித்து பெண்களின் உணர்ச்சி களை வெளிப்படுத்தினார்கள். பெண்களின் காதல் உணர்வுகளை ஆண் கள் வெளிப்படுத்துவதற்கும் பெண்கள் வெளிப்படுத்துவதற்கும் வேறுபாடு உண்டு. **உயிர் வெளி** என்னும் கவிதைத் தொகுதியில் இடம்பெறும் கவி தைகள் இத் தன்மையானவையாகும். **கண்கள்** என்ற கவிதையில் சங்கரி பின்வருமாறு எழுதுகின்றார்.

" உனது கண்கள்
என்னிடம் பேசுவது அதிகம்
உனது தொடுதல்
பேசுவதை விட
கண்களை விசாரிக்க முயன்று
எப்போதும் தோற்றுப் போகிறேன்............."

இது கண்களுக்கும் காதலுக்குமிடையேயுள்ள தொடர்பை சுட்டிக் காட்டுகின்றதைக் காணலாம்.

அடுத்துப் போராளிப் பெண்களின் கவிதைகளின் தனித்துவங்களை நோக்குகையில்,

காலத்தின் தேவையை கருதி தவிர்க்க முடியாதபடி கவிதைச் செயற்பாட்டில் புதிய விழிப்புணர்வுடன் அரசியல் கவிதைகள் தோற்றம் பெற்றன. இவை ஈழத்து தமிழ்க்கவிதைகளின் சமகால அரசியல் முக்கியத்துவமுள்ள கவிதைகளாகவே பிரிநிலைப்படுத்திப் பார்க்கும் தேவையை இயல்பாக்கிக் கொண்டனர். சன்மார்க்கா எழுதிய **ஒரு தாயின் புலம்பல்** என்ற கவிதையில்,

“தனிநாடு கேட்டு மேடையேறி
கணக்கக் கதைத்தவர்கள்
அயல் நாட்டில் விருந்துண்டு
பாதுகாப்பாய் இருக்கையிலே
ஊருக்காய் மடிந்த பிள்ளை
தெருப்புழுதியில் கிடக்கின்றான்......”

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களது மன உணர்வுகளை எழுதியுள்ளதையும் காணமுடிகின்றது. ஔவை எழுதிய **தாயின் குரல்** என்ற கவிதையில்,

“இன்னுமா தாய் நிலம்
புதல்வர்களைக் கேட்கிறது.....”

எனக் கேட்கும் போது உதடுகளை மூடிக்கொண்டு இதயத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் தாய்மாரின் ஈனக்குரல்களாகவே கேட்கிறது.

விடுதலைப் போராளிப் பெண்களுடைய கவிதைகளில் பல கருத்தாழங்களை கவனிக்க வேண்டியது அவசியமாகும். இவற்றை நோக்கும் போது பொதுவாக ஆண்களின் கருத்துக்களும் காணப்படுகின்றன. போர் நடவடிக்கைகள் நாட்டுப்பற்று சம்பந்தப்பட்ட கவிதைகளைக் குறிப்பிடலாம். இவர்களுடைய கவிதைகளில் மரணம், போர்க்கள அனுபவம், சுதந்திர உணர்வு, விடுதலை மீதான நம்பிக்கை என்பன வெளிப்படுகின்றன.

தன்னுடனிருந்து உண்டு உறங்கி மகிழ்ச்சியாக இருந்த போராளி இறந்த போது சாதாரணமான பெண்களுக்குத் தாங்க முடியாது.ஆனால் போராளிப் பெண்கள் அதனை ஒரு பெரிய வீரச் செயலாக உருவகித்து மதிப்பு கொடுத்து **காவியமானவர்கள்** என உயர்த்துவது வழக்கம் அந்த வகையில் **பயணம் தொடர்கிறது** என்ற கவிதையில் கலைமகள் பின்வருமாறு கூறுகின்றார்.

“நேற்று வரை
கதை பேசிச் சிரித்த முகம் இன்று
கண்ணெதிரே நின்று
காவியமாய்ப் போனது.........”

புகலிடப் பெண்கள் கவிதைகளின் தனித்துவங்களை நோக்கும் போது, புகலிடப் பெண்கள் கவிதைகளில் வாழ்க்கையின் பல கோணங்களையும் பல பக்கங்களையும் அனுபவித்து எழுதப்பட்டவையாக இருக்கின்றன. புகலிடப் பெண்களுக்கு இருந்த இரட்டை நிலை இவ்வாறான உருக்கமான கவிதைகளை எழுதத்தூண்டி இருக்கலாம். புலம்பெயர்ந்த பெண்கள் ஒரு பண்பாட்டுக் காவிகளாக இருக்கும் போது அல்லது அந்த சமூகம் அவர்களை அவ்வாறு பார்க்கும் பெண்கள் இரண்டக நிலையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தங்களை இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. **மறையாத மறுபாதி** என்ற கவிதைத்தொகுப்பு இதற்கு சிறந்த சான்றாகும்.

வாழச் சென்ற இடத்தில் வதைக்கப்பட்ட செய்திகயைக் கூறுவதாக கல்யாணியின் **சாம்பற் பூச்சிகள்** என்ற கவிதை அமைந்திருக்கின்றது.

"எங்கள் சூட்டில் குளிர்காய
நிறங்கள் அடுக்கிய
விறகுக் கட்டைகளை சுமந்தபடி
அடுப்பங்கரையில்
சாம்பற் பூச்சிகளாய்
இனியும் நாங்கள்
இருக்க மாட்டோம்........."

என்ற வரிகளில் வெளிப்படும் உணர்ச்சியில் தான் வேண்டாப் பொருளாகப் பயன்பட்டதையும் இனி அவ்வாறிருக்க மாட்டோம் என்ற உறுதியும் வெளிப்படுகின்றது.

புலம்பெயர்வு ஏற்படுத்திய அனுபவங்களில் ஒன்று நிற வாதம் பற்றிய அனுபவமாகும். இதுபற்றி கிருபா என்ற கவிஞர் பின்வருமாறு கூறுகின்றார்.

"அம்மா
நாங்கள் ஏன் அகதிகளானோம்
என் தாய் நாடு எங்கே?
என் தாய் மொழி எது?
நாங்கள் ஏன் கறுப்பர்களாயிருக்கின்றோம்?
அவர்களால் ஏன் ஒதுக்கப்படுகின்றோம்?
துருக்கித்தோழி ஏன்
எரிக்கப்பட்டாள்........?"

மேற்கூறியவற்றை தொகுத்து பார்க்கும் போது,ஈழத்துப் பெண் கவிஞர்கள் இவ்வாறான அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளதோடு கவிதையாக்க முறைகளாக நான் என்று பேசுதல், புதிய உவமைகள் உருவகங்கள், படிமங்கள், பெண்ணுக்கான தனி மொழி, பழம்பெரும் கவிஞர்களின் கருத்துக்களை எடுத்தாழல், பாதிக்கப்பட்ட பெண்களை குறியீடாக வைத்து எழுதுதல் போன்ற கவிதையாக்க முறைகளையும் கையாண்டு கவிதைகளை எழுதியுள்ளதைக் காண முடிகின்றது.

குட்டிக்கதை



# புலமைப் பரிசு

- Dr.எஸ்.எஸ். ᵐ -

மாலை நேரத்து வெயில் பட்டு வெவ்வேறு வண்ணங்களில் பூத்துக்குலுங்கிக் கொண்டிருந்த அந்த வைத்தியசாலை வளாகத்திலிருந்து பூங்கன்றுகள் அழகாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தன. வண்ணாத்துப் பூச்சிகள் இங்கொன்றும் அங்கொன்று மாய் சிறகடித்த வண்ணமிருந்தன. அந்த அழகையே பார்த்துக் கொண்டிருந்த லக்ஷிக்கு ஒரு வண்ணாத்துப் பூச்சியாவது பிடித்துப் பார்த்து விட ஆசை. அதற்குரிய முயற்சியில் பல முறை தோற்றுப்போயிருந்தாள் அந்த சிறுமி.

"நான் பிடித்து தரவா" என்று கேட்ட வண்ணம் அருகில் வந்தவனை வியப்புடன் பார்த்தாள் லக்ஷி. "ஒன்று பிடித்துத் தந்தா ஒரு டொபி தருவேன்". எனக்கு டொபி வேணாம் ஆனால் பிடிச்சுத் தாரன்" என்று கூறியபடி தனது மேல் சட்டையை கழற்றி பறந்து கொண்டிருந்த வண்ணாத்துப் பூச்சிமேல் எறிந்து ஒன்றைப் பிடித்துக் கொடுத்தான்.

"தாங்ஸ், உன்ட பேர் என்ன?". என்ட பேர் பாலா, உங்கட பெயர் என்ன?" "என்ட பேர் லக்ஷி. எப்படி இவ்வளவு லேசா இதைப்பிடிச்சனி", என்ற லக்ஷிக்கு "நாங்க பங்குடாவெளி. எங்களுக்கு இதெல்லாம் லேசான விசயம்" என்றான் பாலா. "நீ என் ஆஸ்பத்திரிக்கு வந்தனி? உனக்கு சுகமில்லையா" என்ற லக்ஷிக்கு தனது வருகைக்குரிய காரணத்தை கூறினான் பாலா.

~※※※~

"பூமணி, பூமணி என்று குரல் கொடுத்தவாறே வளவுக்குள் நுழைந்தான் சிதம்பரம். "ஏனப்பா இன்றைக்கு மத்தியானமே வந்திட்டீங்க" என்றவாறு குசினிக்குள்ளிருந்து வெளியே வந்த பூமணிக்கு ஒரே ஆச்சரியம். நீண்ட காலமாக சாராயத்தைத் தொடாமல் இருந்த சிதம்பரத்திடமிருந்து சாராய வாசனை வந்து கொண்டிருந்தது. சைக்கிளில் இரண்டு கோழிகள் கால்கள் கட்டப்பட்டு படி கிடந்தன. இதைவிட ஓர் பெரிய பை நிறைய சமையல் சாமான்கள் என அமர்க்களப்படுத்திக் கொண்டிருந்தான் சிதம்பரம். " டொக்டர் குடிக்க கூடாது" என்று சொல்லி இவ்வளவு காலமும் குடிக்காத நீங்க இன்றைக்கு ஏனப்பா திடீரென்று குடிச்சிருக்கீங்க, கோழியெல்லாம் வாங்கி வந்திருக்கிறீங்க, என்னப்பா என்ன விசயம்" என்றவாறே பூமணி சாமான்களை எடுத்து அடுக்கத் தொடங்கினாள்.

"நான் செங்கலடியில் மரக்கறியெல்லாம் வித்திட்டு நிற்கிற நேரம் பாலாவோட பள்ளிக்கூட மாஸ்டர் கண்டவர். பாலா ஸ்கொலசிப் பாஸ் பண்ணித்தானாம். நூற்றுப்பன்னிரண் டாவதா வந்திருக்கிறானாம். எனக்கு சந்தோஷம் தாங்க ஏலாமல் போச்சு. அதுதான் அப்ப டியே கொஞ்சம் போட்டிட்டு கோழி வாங்கி வந்தனான். அவனுக்கு ஒரு சேட் வாங்கி வந்தனான். பாவம் பிள்ளை பின்னேரத்திலையும் காலம்பிறையும் பால் கொண்டு போய் குடுத்து விட்டு வந்து படித்து பாஸ் பண்ணிட்டான்" என்றவன் "பெரியவனைக் கூப்பிட்டு கோழியை வெட்டச்சொல்லு நான் கொஞ்சம் படுத்தெழும்புறன்" என்றவாறு விறாந்தை யில் துண்டைப்போட்டு படுத்தான் சிதம்பரம்.

மதியம் எழும்பி எல்லோருமாக சந்தோஷமாக சாப்பிட்டு விறாந்தையிலிருந்து கதைத்துக் கொண்டிருந்த வேளை வயிற்றைப் பொத்திய படி வாந்தியெடுத்தான் சிதம்பரம். வாந்தியுடன் சிறிது இரத்தமும் கலந்து வந்தது. அலறியடித்துக் கொண்டு ஆட்டோவைப் பிடித்து செங்கலடி ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார்கள். சிதம்பரத்தை மேலதிக சிகிச்சைக் காக மட்டக்களப்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருந்தார்கள்.

தனது கதையை கூறி முடித்த பாலா "அம்மாவப் பார்க்கத் தான் ஈஸ்பத்திரி வந்தன்" என்றான். "நீங்க ஏன் ஆஸ்பத்திரிக்கு வந்தனீங்க? உங்கட வீட்டில யாருக்கும் சுகமில்லையா? என்று கேட்டான். " நானும் ஸ்கொலசிப் பில் பாஸ் தான், ஆனால் பன்னிரண்டாவது. ஏன் முதலாவது வரவில்லை என்று கேட்டு அம்மா எனக்கு பிரம்பால அடிச்சவ. இஞ்ச என்ர காலைப் பார்" என்றாள் லக்ஷி. அந்தப் பிஞ்சின் முழங்காலுக்கு கீழே வரி வரியாக தழும்புகள் பதிந்திருந்தன. கால்களைப் பார்த்த பாலாவுக்கு ஆச்சரியம் உண்மையிலேயே அவனால் அதை நம்ப முடியவில்லை. "உங்கட அம்மாவுக்கு லூசா? மாவட்டதிலயே 12வது வந்ததுக்கு அடிச்சிருக்காவே" என்றான். " அம்மாவுக்கு லூஸ் இல்லை. அவ ரீச்சர். அதுவும் ஸ்கொலசிப்புக்கு படிப்பிக்கிறவ. அப்பா எஞ்சினியராக கொழும்பில வேல செய்கிறார். அப்பா ஒரு நாளும் எனக்கு அடிக்கற இல்ல. அவளை கொஞ்சம் நேரம் விளையாட விடு என்று ஒரே அம்மாவிற்கு சொல்லுவார். ஆனால் அம்மா கேட்க மாட்டா ஒரே படி, படி என்று எனக்கு கரைச்சல் தருவா. ரிஷல்ட் வந்ததும் அம்மா வீட்ட வந்து எனக்கு ஒரே அடி. முதலாவதா வராம நான் தன்ர மானத்த வாங்கித்தனாம். தான் எப்படி வெளியில தலை காட்டுவது என்று சொல்லி அழுது கொண்டே இருந்தா. இரண்டு நாளாக அவ சாப்பிடவும் இல்லை. கடைசியா சத்தியும் வயிறு எரிவும் என்று டொக்டரிட்ட காட்டினனாங்க. அவர் அல்சர் கூடிற்றுதாம் என்று வாட்டில நிப்பாட்டித்தார. அது தான் அம்மாவைப் பார்க்க வந்தனாங்க" என்று கூறியபடியே வண்ணத்துப்பூச்சியின் இறக்கையை பார்த்துவிட்டு அதனை அப்படியே பறக்க விட்டாள் லக்ஷி. அது பறப்பதனையே அந்த இரண்டு பிஞ்சுகளும் சிரித்து மகிழ்ந்தபடி பார்த்துக்கொண்டிருந்தன.

(கதையின் அனைத்து கதாபாத்திரங்களும் சம்பவங்களும் கதாசிரியரின் கற்பனையே)

# கர்ப்ப காலத்தில் கலவி
# (Sex During Pregnancy)



- வே.பிரகாஷ் (0), Dr.கே.ஈ.கருணாகரன் (n) -

மனித உயிர் உருவாவதற்கு இறைவனால் கொடுக்கப்பட்ட இயற்கையான ஒரு வழிமுறைதான் ஆண்-பெண் கலவி ஆகும். இது மனிதனின் உடற் தேவையை மட்டுமல்ல ஒரு சமூகத்தின் தேவையையும் பூர்த்தி செய்யும் ஓர் ஏற்பாடாகும். திருமணத்தின் பின் தாம்பத்தியம் குடும்பம் என்பன முழுமையடைவது குழந்தைப் பாக்கியம் பெற்ற பின்னரே என்பது எம் மத்தியில் காணப்படும் பொதுவான கோட்பாடாகும். எனவே குழந்தையொன்று தேவையெனில் மனிதனுக்கு பாலுறவு அவசியமாகின்றது. இதன் மூலம் உடல் தேவையும் தாம்பத்திய உறவும் பூர்த்தி செய்யப்படுகின்ற அதேநேரம் கணவன்-மனைவி உறவிற்கும் மிகத் தேவையான ஒன்றாக இது காணப்படுகின்றது. ஆனால் பெண்களின் கர்ப்ப காலத்தை இவ்வுறவுகளுக்கு தகுந்த காலமல்ல அல்லது அதைத் தவிர்க்கவேண்டும் என்ற கருத்தைப் பலர் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் பெரும்பாலான தம்பதிகள் கர்ப்ப காலத்தின்போது கல்வியில் ஈடுபடுவது (உடலுறவு வைத்துக்கொள்வது) பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாயும் அமைந்திருப்பதை உணர்ந்திருக்கின்றனர். சாதாரணமாக கர்ப்ப காலத்தில் பெண்களில் பலவித முக்கியமான உடலியல் மற்றும் உணர்வுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம் மாற்றங்கள் சில பெண்களில் பாலுறவில் ஈடுபாட்டை, ஆவலை அதிகரிக்கவோ அல்லது குறைத்துவிடவோ காரணமாக அமைகின்றன. பெரும்பாலான தம்பதியர், கர்ப்பம் தரித்திருக்கும் நிலையில் உடலுறவில் ஈடுபட்டால் அப்பெண்ணுக்கு உடல் ரீதியான அசௌகரியமோ பிறக்கப்போகும் குழந்தைக்கு சிலவேளை ஏதேனும் ஊறுகள் ஏற்படலாமோ எனும் அச்சம் கொண்டு பாலியல் நாட்டத்தை கணிசமானளவு குறைத்துக் கொள்வதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## பாலுணர்வுத் தன்மையில் ஏற்படும் மாற்றங்கள்: (Changes in Libido)

அநேகமான பெண்கள் தங்கள் கர்ப்ப காலத்தில் பாலுறவு நாட்டத்திலும் ஆவலிலும் சில மாற்றங்கள் ஏற்படுவதை உணரக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். அதற்கு பின்வரும் சில காரணங்களும் மிக முக்கியமான விடயங்களாகக் கருதப்படுகின்றன.

### 1. 1ஆம் கர்ப்பகால மாதத்தில் (1st Trimester):

பலவீனமான தன்மை (fatigue, காலைக் காய்ச்சல் (morning sickness) எனப்படும் வாந்தி அல்

லது தலைச்சுற்று என்பனவும் பாலு றவு நாட்டத்தை *குறைவடையச்* செய் யலாம்.

**2. 2ஆம் கர்ப்பகால மாதத்தில் (2nd Trimester):**

பெருக்கின்ற இடுப்புப் பகுதிக்கு அதி கரிக்கும் குருதிப் பாய்ச்சலும் மார்பக அளவின் அதிகரிப்பும் பாலுறவு நாட் டத்தினை *அதிகரிக்கச்* செய்யலாம் அல்லது *அதிக இன்பத்தை* கொடுக்க லாம்.

**3. 3ஆம் கர்ப்பகால மாதத்தில் (3rd Trimester):**

பலவீனமான உணர்வு(fatigue), முதுகுநோ (back ache), கர்ப்பக்கால உடலியல் அசௌகரியம் என்பன மீண் டும் நாட்டத்தை *குறைவடையச்* செய் யலாம்.

மொத்தத்தில் அநேகமான பெண்கள் (எல்லோருமல்ல) தங்கள் கர்ப்ப காலத் தில் பாலியல் உறவு கொள்வதில் நாட் டம் குறைவாகவே இருப்பதாக உணர் கின்றனர். இது ஒரு பிரச்சினையல்ல. அநேகமான சந்தர்ப்பங்களில் இந்த நிலைமை பிள்ளைப் பேற்றின் பின்னர் சாதாரணமாக மாறிவிடும். அதேநேரம் சில பெண்கள் தாங்கள் கர்ப்ப காலங்க ளில் இவ்வாறான மாற்றங்களையோ அல்லது பாலுறவு நாட்டம் குறைவடைந் ததாகவோ காணவில்லை எனவும் கூறு கின்றனர். இதுவும் ஒரு சாதாரணமானதும் ஆரோக்கியமானதுமான நிலைமையே ஆகும்.

துணையின் கர்ப்ப காலத்தில் துணை வர்களும்கூட தங்கள் பாலுணர்வு ஈடுபாடு களில் மாற்றங்களை உணர்வதாக கூறு கின்றனர். இது ஏனென்றால் தங்கள் துணையின் உடலியல் மாற்றங்களை காண்கின்றபோது ஏற்படும் ஓர் அதிக ரித்த கலக்கம் அல்லது பயம் காரண மாக இருக்கலாம். அத்தோடு தங்கள் பிறக்கப் போகும் குழந்தையின் உடல் நிலையை பாதித்துவிடுமோ என்ற பயவுணர்வும் கூட காரணமாக இருக் கலாம். அதுமட்டுமல்ல தான் இனி மேல் ஒரு 'அப்பா'வாகப் போகிறோம் என்ற உணர்வும்கூட அவர்களில் மாற் றங்களை ஏற்படுத்தலாம்.

## என்ன செய்யலாம்?

என்னதான் மாற்றங்கள் ஏற்பட்டா லும் இக் கர்ப்ப காலத்தில் தம்பதியர் தங்கள் பாலுணர்வு ஈடுபாடுகள் சம் பந்தமாக ஒருவரோடு ஒருவர் திறந்த மனதுடன் பேசிக்கொள்வது மிக முக் கியம். இந்த விரைவான உடலியல் மாற்றங்களால் ஒரு சில வாரங்கள் சந்தோஷமானதாகவோ சௌகரியமான தாகவோ தோன்றும். அதேவேளை மற்ற சில வாரங்கள் மிக வேதனை தரக்கூடியதாகவும் அமையலாம். எனவே பாலுறவு நாட்டமோ ஆர்வமோ குறைவடையும் சந்தர்ப்பங்களில் தம் பதிகள் வேறு இலிங்க உடலுறவுக்கு அப்பாற்பட்ட முறைமைகளை சந்தோ ஷத்திற்காகத் தெரிவுசெய்து கொள்ள லாம். (உ+ம்) கட்டித் தழுவிக்கொள் ளல் அல்லது மசாஜ் பண்ணுதல் போன்றன.

## பாதுகாப்பு:

மிக அதிகமான பெண்கள் தங் கள் கர்ப்பகாலத்தின்போதான உட லுறவுத் தொடர்புகள் மற்றும் கலவி கள் பாதுகாப்பானதாக உணர்ந்திருக்

கின்றனர். ஆயினும் சில விதிவிலக்கான பின்வரும் சந்தர்ப்பங்களில் பாலுறவு கொள்வது பாதுகாப்பற்றதென கருதப் படுகின்றது. அவை:


1. பிறப்புறுப்பில் குருதிப் பெருக்கு
2. அடிவயிற்று நோ, தசைப்பிடிப்பு
3. வெடித்த மென்சவ்வுகள் (eg: பன்னீர்க்குடம் உடைந்த நிலை)
4. முதிர்வுறா நிலையில் கருப்பை வழி திறந்திருத்தல்
5. முதிராக் குழந்தையை ஈனும் அதி ஆபத்தான நிலைமை (eg: முன்னைய சரிதையின் பிரகாரம் முதிராக் குழந்தை ஈன்றெடுத்துள்ளமை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளை கர்ப்பத்தில் கொண்டிருந்தமை)

இவ்வாறான அறிகுறிகள் ஏதேனும் உடையோர் மருத்துவரின் ஆலோசனைகளை நாடுவது நலமானது. இப்படியான சிக்கலான நிலைமையைக் கொண்டிராத எவரும் தங்கள் கர்ப்ப மாதத்தின் 3ஆம் மும்மாத நிலையிலும் (3rd Trimester) கூட பாலுறவில் தாராளமாக ஈடுபடலாம். சில பெண்கள் இவ்வாறு ஈடுபடுவதால் தங்களுக்கு சிலவேளைகளில் முதிராக் குழந்தைப் பிரசவம் ஏற்பட்டுவிடலாம் என்று நினைப்பது தவறானது. உண்மையில் சில ஆய்வுகளின்படி, இவ்வாறான காலத்தில் கலவியில் ஈடுபடுவதானது முதிராக் குழந்தையைப் பிரசவிக்கும் வாய்ப்புக்களை கணிசமானளவு குறைத்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது! கர்ப்ப காலத்தில் பாலுறவு கொள்வதால் சிசுவுக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படுவதில்லை. காரணம் அவ்வேளை சிசுவானது கருப்பையின் வாயிலான கருப்பைக் கழுத்து (cervix of the uterus) மூடியிருக்கும் நிலையில் அவ்வாயிலில் சீத அடைப்பு (mucus plug) மூடியிருக்கும் நிலையிலுமான கவசத்தினுள் பாதுகாப்பாக உறங்கிக்கொண்டிருக்கும்.

எப்படியாயினும் இன்னும் சில விடயங்களில் முக்கியமான பாதுகாப்பு அம்சங்களை கவனத்தில்கொள்ள வேண்டித்தான் இருக்கின்றன. பாலுறவால் கடத்தப்படும் தொற்றுக்கள் (eg: HIV or gonorrhea) கர்ப்பிணிப் பெண்களைத் தாக்கலாம். அதுமட்டுமல்ல குழந்தையை முன்கூட்டிய பிரசவத்துக்கும் கொண்டு செல்லலாம். சிலவேளை துக்ககரமாக நோய் சிசுவைக் கூட தொற்றலாம் அல்லது மரணத்துக்கும் கொண்டு செல்லலாம். எனவே இத்தொற்றுள்ளோர் இத் தொற்றுக்களை தவிர்க்க, தடுக்க சரியான தடுப்பு முறைகளை (eg: condoms) கையாளுவது சிறப்பாகும்.

சிலவேளைகளில் பெண்கள் தங்கள் கர்ப்ப காலங்களில் பாலுறவு கொள்ளும்போது சில குறிப்பிட்ட 'பாலுறவு நிலைகளை'(sexual positions) அசௌகரியமாக உணரலாம். இதனால் சில மருத்துவர்கள் பெண்களின் 3ஆம் கர்ப்ப மாதங்களில் வழமையான உடலுறவு கொள்ளும் நிலைகளைத் (missionary position) தவிர்க்குமாறு ஆலோசனை கூறுகின்றனர். இது ஏனெனில் பெண் மல்லாக்க படுத்திருக்கும்போது கர்ப்பந் தரித்த கருப்பையானது இதயத்துக்கு குருதியைக் கொண்டு செல்லும் குருதிக் கலன்களை அழுத்தி சிக்கல்களை உருவாக்கலாம். எனவே வேறு பொருத்தமான சௌகரியமான நிலைகளில் (Position) உறவில் ஈடுபடுவது நல்லது.

எனவே கர்ப்ப காலத்தில் சில விதிவிலக்கான சிக்கலான நிலைமைகள் இல்லாத பட்சத்தில் கணவன் மனைவி கலவியில் ஈடுபட்டு மகிழ இது பொருத்தமான காலமே.



# Bone
# A Marvel of Strength

V.Pragash (o)

*Bone has been described as " an engineering master piece of tensile, compressive and elastic strength" Why?*

- *The human skeleton consists of approximately 206 bones and 68 joints.*
- *The longest bone is the femur, or thigh bone, the smallest is the stapes, a bone inside your ear.*
- *As Skilled gymnasts clearly demonstrate, bones, muscles, cartilage, and joints can give a healthy body an astonishing degree of flexibility and range of movement.*
- *"The thumb alone would convince anyone that the architect of our body (whoever that may be to each one of us) had to be a genius" says the National Space Biomedical Research Institute.*
- *Bones can also take an incredible pounding. (They are constructed in exactly the same way that reinforced d concrete is constructed; states the Institute.*
- *"The steel of reinforced concrete provides the tensile strength, while the cement, sand, and rock provide the compressional strength.*
- *However, the compressional strength of bone is greater then that of even the best reinforced concrete".*

- *"We only wish we would mimic it", said Robert O. Ritchie, a Professor of Materials Science at the University of California, Barkeley, U.S.A.*
- *Unlike concrete, bone is an essential part of countries living organisms.*
- *And it is dynamic*
- *It is able to repair it self, respond to hormones that affect its growth and development, and even play key role in the manufacture of blood cells.*
- *Also, like muscle, it slowly grows stronger. as the load on it increases.*
- *Hence, athletes have heavier bones than do so called couch potatoes.*

*What do you think?*

*Is bone a product of chance?*
*Or was it designed?*

(Thanks : Awake)

---

எமது உடலில் சுமார் 200 வித்தியாசமான கலங்கள் காணப்படுகின்றன. எமது உடலானது 100 ட்ரில்லியன் (100 Trillion) நுண்ணிய கலங்களால் அமைக்கப்பட்டுள்ளது.


**(உ+ம்)** என்பு கலங்கள், குருதிக் கலங்கள், மூளைக் கலங்கள்

ஒரு கன சென்ரிமீற்றரைக் கொள்ளளவாக கொண்ட ஒரு கிராம் DNA இல் உள்ளடக்கக்கூடிய தகவல்களின் எண்ணிக்கை என்னவென்று தெரியுமா? சுமார் ஒரு ட்ரில்லியன் CDக்களில் உள்ளடக்கக்கூடிய அளவு தகவல்களாகும்.

**(Prof. Leanard M.Adlemen,**
Moleular Biology and computer Science
Scientific American)

# மலேரியாவின் பொது அறிகுறிகள்

*சென்ற இதழ் தொடர்ச்சி*



*- வீ.பத்மநாதன் (p) -*

இக்காய்ச்சலின் நடையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன குளிர், சூடு, வியர்வை என்பன

1. காய்ச்சல் தோன்ற முன் உடல் உளைவும், ஒரு வகையான சோம்பல் குணமும் காணப்படும். சடுதியாக நடுக்கமும் தோன்றும். இதன் சிறிது நேரத்திற்குள் நடுக்கம் உரமாகும். பற்கள் கிடுகிடுக்கும். உடம்பு குளிரும், முகம் வெளிரும், மயிர் சிலிர்க்கும். கம்பளிகளால் அல்லது சேலையால் தம்மை போர்த்தி சுருண்டு படுப்பர். உடல் வெப்பநிலையை அளப்பின் 2 அல்லது 3 பாகை கீறுகள் ஏறி இறங்கும். இக்குளிர் நிலை அரை மணியளவில் நிலைக்கும் பின் சூடு தோன்றும்.

2. உடலுக்குள் சூடு ஏறியவுடன் அவனுக்கு உடல் வெப்பமாகத் தோன்றும். தலையிடி கூடும். உடல் சூடாகவும் எரிகிறதாகவுமிருக்கும். உடற்சூடு இன்னமும் ஒன்று அல்லது இரண்டு பாகை ஏறி 103°,104° இல் காய்ச்சல் காயும். இந்த வெப்பநிலை 06 மணித்தியால நேரம் நிலைத்த பின் வியர்வை தோன்றும்.

3. நோயாளி வியர்வையால் தோய்வான். முதல் நெற்றியும் பின்பு உடல், உடல் அங்கங்களும் குளிர்ந்தவுடன் உடற்சூடு குறையும். அவனுடைய வேதனை நிலையும் குறையும். காய்ச்சல் தொடங்கி 2–7 மணிக்குள் உடற்சூடு ஒன்று அல்லது இரண்டு பாகை பொதுவான சூட்டிலும் பார்க்கக் குறையும். நோயாளியானவன் களைத்தவன் போலும் சுகமுடையவன் போலும் காணப்படுவான். வெள்ளி நகைகள் கறுக்கும். மூன்று நாளுக்கொரு தரம் (மூன்றாம் முறையெனில்) முறைக் காய்ச்சலாக விட்டு விட்டு காய்ச்சல் காயும். ஏற்ற மருத்துவம் செய்யாவிடின், இரு கிழமைகளுக்குள் மும்முரமான முறைக் காய்ச்சலாக காய்ந்து, பின்னர் சில நாட்களுக்கு காயாது விடும். இதன் பின்னர் சீற்றம் குறைந்த காய்ச்சலாக காய்ந்து பின்னர், சில நாட்களுக்கு காயாது விடும். இதன் பின்பு முறைக்காய்ச்சலாக சில நாட்களுக்கு காய்வதும் விடுவதுமாக காணப்படும். இக்காலக் கூற்றில் நோயாளிக்குப் பலக்குறைவும் அல்குருதிமையும் (வெளிறல்) கூடும். மண்ணீரல் பெருக்கும். சிறிது காலம் கழிய காய்ச்சல் இடைக்கிடை கானப்படும். இறுதியில் தானாகவே விட்டாலும் சில நோயாளருக்கு ஒரு முறை காய்ச்சல் தோன்றி பின்பு தோன்றுவதில்லை. நோயாளருக்கு மருத்துவம் உடனடியாக செய்யப்படுவதால் காண்பதற்கரியது.

செங்குருதிக் கலங்கள் இம் மலேரியாக் கணங்களால் தாக்குதலடையும் போதெல்லாம் காய்ச்சல் உண்டாகின்றது. காய்ச்சல் தோன்றி 2 அல்லது 3 நாட்களுக்குள்

புணரிக்குழியங்கள் குருதியில் காணப்படும். இவை காய்ச்சலை உண்டாக்குவன அல்ல. மலேரியாக் கணச்சந்ததியை பெருக்குவதற்காகவே உண்டாகுவன. இவை நுளம்பின் வயிற்றில் வேறு வளர்ச்சியடைகின்றன. 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின் தான் இப்பருவங்கள் தோன்றும்.

மலேரியா நோய் வாய்ப்பட்டவர்களுக்கு மீண்டும் இந்நோய் தோன்றுவது இல்லை.

இதன் உள்ளீட்டு அடைப்புக் காலம் 10 –15 நாட்களாகும். சில ஒட்டுண்ணிகளை பொறுத்தமட்டில் நோய்வாய்ப்பட்ட பின்னர் மாதங்கள் சென்று தான் நோய் தோன்றும். 2 அல்லது 3 நாட்களில் முற்குறி பொதுவாக தோன்றும். இவையாவன, தலையிடி, கைகால் நோக்காடு, நாரி நோ, பசியா முதலியனவும் சில சமயங்களில் குமட்டலும் வாந்தி தோன்றும் மெல்லிய நடுக்கமும் இவற்றுடன் உடல் குளிர்தலும் தோன்றும்.

இந்நோய் சடுதியாக தோன்றல், படிப்படியாக இடைவிட்ட காய்ச்சலாக இருந்து பின்னர் தன் சிறப்புக் குறிகளைக் காட்டும் சில சமயங்களில் நாளுக்கு நாள் முறைக் காய்ச்சலாவும் பிற்பகல் அல்லது மாலை நேரங்களிலும் இது நுளம்பினால் ஏற்படும்.

இந்நோய் காவும் நுளம்பினால் இரு நாட்களுக்குள் அடுத்தடுத்து தோன்றுவிக்கப்படுவதனால் உண்டாகும், மருந்து உட்கொள்ளாவிடில் இரு கிழமைகளுக்குள் மண்ணீரல் பெருக்கத் தொடங்கும். இதனால் வயிறு பெருக்கம் அவ்வளவு கெடுதி இல்லை. பெலக் குறைவு, மெலிவு, காய்ச்சற் கட்டி, அல்குருதியை (வெளிறல் காணப்படுவதால் முற்றின நோயில்) பேதி போன்ற நோய்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். காய்ச்சல் காணும் பொழுது மருந்தை உட்கொண்ட பின் முற்றிய நிலை தோற்றத்தைத் தடுக்கலாம். விட்டு விட்டு காயும் காய்ச்சல் (குழந்தைகளில் சிறப்பாக) வலி தோன்றும். மழையில் நனைந்தால் அல்லது உடல் களையுற்றால் காய்ச்சல் தலை காட்டும்.

குருதியில் அல்பால் ஒட்டுண்ணி வகையில் எல்லா வடிவங்களும் தொடக்கம் மோதிரம் முதல் முதிர் பின் பிறவுண் வடிவம் ஈறாக நேச வேளையிற் சுற்றியற் குருதியில் காக்கூடியதாக இருக்கும். வளர்ச்சி படி நிலைகளைப் பொறுத்து ஒரு வடிவம் பெருமளவில் காணப்படும்.

சிலருக்கு குளிர்படி நிலை நீடித்து இருக்கும்.- வெப்பப்படி நிலை பல மணிகளுக்கு நிலைக்கக்கூடும். குமட்டலும் வாந்தியும் இப்படி நிலையிற் பெரும்பாலும் காணப்படும் குறிகளாம் வியர்வுப்படி நிலைக்குப் பின்னர் வெப்பநிலை மிகத் தாழ்ந்து நோயாளி மடிவுறக் கூடும்.

## அடைகாலமும் முற்குறிகளும் :

அடை காலம் 08 நாட்களிலிருந்து 15 நாட்கள் வரைக்கும் இருக்கக்கூடும். முற்குறிகள் அடைகால பிற்பகுதியில் தோன்றும் பெரும்பாலும் கடும் மண்டையிடி, என்பு தசைகள் நோ, சிறப்பாக நாரி திரிபுடை தாங்கி ஆகிய பிரதேசங்களில் இழுவல், குத்து,

ஆகிய குறிகளுடன் தோன்றும். குளிர் நடுக்கம் குமட்டல், வாந்தி, குழலரிவு (கழிச்சல்) ஆகிய குறிகளும் இடைக்கிடை காணப்படும்.

## சிக்கலற்ற தாக்கம்:

சிதைந்த குறிகள் முன்னம் நீடிய காலத்துக்கு குருதியில் ஒட்டுண்ணிகள் உள்ளதாம், இது சிறப்பாக வருவிக்கப்பட்ட எதிர்ப்பு உள்ளவர்களில் அல்லது மலேரியாவை அடக்கும் மருந்துப் பொருட்களை பிழையான வகையில் பயன்படுத்தியவர்களில் காணப்படும். இவர்களில் நோய் மறைமுகமாக தோன்றும் குடலரிவு, அலுப்புத் தன்மை, நாரி நோ ஆகிய அறிகுறிகள் தோன்றும். பின்னர் உடலுழுப்பு, உள மாறாட்டம், பிதற்றல் ஆகிய குறிகள் காணப்படும். நோயாளி மிகவும் களைப்புறுவார்.

முன்பு கூறப்பட்டிருக்கும் மலேரியாக் காய்ச்சலின் நடையோடு கூறப்பட்டிருக்கும் மலேரியாக் காய்ச்சலின் ஒத்திருக்காது மெல்ல மெல்லக் காய்ச்சல் தொடங்கிப் படிப்படியாக உரத்து தைபொயிட்டுக் காய்ச்சல் போலக் காயும். இவ்வித நிலையில் நடுக்கமும் வியர்வையும் காணப்படாது. நோயாளி உயிருக்குக் கேடு நிகழ் நிலைமையில் இருக்கும் பொழுது சில வேளைகளில் காய்ச்சல் மெலிதாக் காயும். காய்ச்சலானது விட்டுவிட்டுக் காயும். விடாக்காய்ச்சலாக இருக்கக் கூடும். நீடிய காலத்துக்கு காயும்.

மாறாட்டம், வாந்தி, செங்கண்மாரி ஆகிய குறிகள் தோன்றும் சில நாட்களுக்கு ஒரு வருத்தமும் இல்லாதவர் போல தோன்றும் சடுதியாக மாறாட்டம், உணர்வு இல்லா நிலை, அல்லது கோமா, குறிகள் காட்டும் கெடுதி விளைவிக்கும் சன்னி பாதக் காய்ச்சலாகவும் அல்லது ஒரு நீர்க்காய்ச்சலாகவும் மாறக்கூடும்.

## கோதாரி மலேரியா

இத் தோற்றத்தில் நீர்மயமான குடற் கழிச்சல்கள் பெருமளவில் கழிக்கப்படும் சக்தி, வாந்தி, கை, கால்களில் தசைப்பிடிப்புக்கள் காணப்டும்.படிப்படியாக உடலிலிருந்து நீரகற்றல் கூடிக்கொண்டே போகும். மலமானது சிறு மலத் துண்டுகளும் சிறிதளவிற் குருதியும் மியுக்கசுவும் கொண்டதாயிருக்கும். குருதியினதும் ஊறு நீரினதும் உப்புக் கொள்ளளவு குறைந்தளவாக இருக்கும். இந்நிலையானது அதிகளவு நீர் உடலில் இருந்து வெளியேறும் போது குருதியிற் பெருந்தொகையான ஒட்டுண்ணிகளும் உள்ளன. இதனால் இந்நோயை கட்டுப்படுத்த முடியாமல் மரணம் ஏற்படுகின்றனவாம்.

(அடுத்த இதழில்.....மலேரியாவின் விவரங்கள் தொடரும்...)


### பாம்புக்கடியால் பரிதவிக்கும் மக்கள்



உலகம் பூராகவும் 4.5 Million மக்கள் ஒவ்வொரு வருடமும் பாம்புக் கடியால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் கிட்டத்தட்ட 10000 பேராவது பாம்புக் கடியால் இறக்கின்றனர் என்றும், மீதி 250000 மக்கள் நிரந்தர ஊனமாகின்றனர் என்கிறது ஒரு அறிக்கை.

**University of Melborn. Australia.**

# மட்டக்களப்பு மாவட்ட கல்வி வளர்ச்சியும் தேசிய மட்டத்தில் உயர்தர மாணவர்களை சித்திபெறச் செய்தலும் அதன் முக்கியத்துவங்களும்



ஆய்வுக் கட்டுரை

*கலாநிதி.தெய்வநாயகம் திருச்செல்வம்* (௧)

ஒரு பிரதேச அபிவிருத்தியென்பது பாதைகளைச் சீர்செய்தலிலோ நவீன, உயர்ந்த மாடிக் கட்டடங்களைக் கட்டுவதிலேயோ மட்டும் தங்கிவிடுவதில்லை. மாறாக அப்பிராந்தியத்தின் கல்வி வளர்ச்சியிலே பெரும்பாலும் தங்கியிருக்கின்றதென்பதே உண்மை. கல்வித்துறையை சீர்செய்யும்போது பிற துறைகள் தானாகவே முன்னேறிவிடும் என்பது உலகளாவிய உண்மை. கற்ற சமூகத்தின் சிந்தனை, நடைமுறை, கால ஓட்டத்துக்கு ஈடுகொடுக்கும் திறன், மாற்றங்களை உள்வாங்கி அவற்றை செயற்படுத்தும் திறன் போன்றவை மேலோங்கும் என்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறே கற்றவர்களால் முன்னெடுக்கப்படும் எத்துறைசார்ந்த நடவடிக்கைகளும் ஆக்கபூர்வமானதாகவும் குறுகிய காலத்தில் பயன்பெறக்கூடியதாகவும் இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. மிகக் குறுகிய காலத்தில் (30 வருடங்களில்) விரைவாக முன்னேறிய நாடான நோர்வேயை இதற்கான உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அந்நாட்டின் கல்வி வளர்ச்சியே மிகக் குறுகிய காலத்தில் அந்நாட்டினை இவ்வகையானதொரு சிறப்பான நிலைக்கு இட்டுச்சென்றுள்ளதென்பதனை நாம் யாவரும் உணர வேண்டும்.

இந்தவகையில் இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டமானது அன்றுதொட்டு இன்றுவரை கல்வியின் முக்கியத்துவத்தை உணராத, பாடசாலைக்குச் செல்வதை புறக்கணிக்கும் சமூகத்தைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காத தன்மையைக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாக காணலாம். ஒரு பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும் அப்பிரதேசத்தின் வறுமைக்கும் நேரடித் தொடர்பு இருக்குமென ஆய்வாளர்கள் கண்டிருக்கின்றனர். கற்ற சமூகம் வறுமையில் வாடுவதாக நாம் அறியவில்லை. இதுபோலவே இன்று அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் ஆணிவேரே கல்விதான் என்பதை நாம் அனைவரும் உணர்ந்தால் எமது மாவட்டத்தையும் இவ்வகையானதொரு குறுகிய கால அபிவிருத்திக்கு தயார் பண்ணலாம் என்பதை நான் தாழ்மையுடன் உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவட்ட ஒதுக்கு முறையிலேயே (District Quota) மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவம், பொறியியல், பல்வைத்தியம் போன்ற பிரபல்யமான துறைகளுக்கு பெரும்பாலும்

மாவட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற ஒதுக்கீட்டு அடிப்படையிலேயே மாண வர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரி வாகின்றனர் என்பது நம்மில் பலருக்குத் தெரிவதில்லை. மாறாக தேசிய ரீதியி லான சிறப்பு தெரிவு முறைமூலம்(Merit Entrance) மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு மாணவர்கள் அதிகமாகச் செல்லும் போது மாவட்ட அடிப்படையிலான ஒதுக்கு முறை பாதிக்கப்படாது அவ்வாறே இருக்க மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதுதான் உண்மை. இதற்காக ஓரளவேனும் கடந்த காலங் களில் பாடுபட்டவன் என்னும் வகையி லும் என்றைக்கும் எனது பிரதேசம் தழைத் தோங்கவேண்டும் என்னும் அவாவுடன் வாழ்ந்துகொண்டிருப்பவன் என்ற வகை யிலும் இந்த கட்டுரையை நான் எழுது கிறேன். இது வாசிக்கப்படவேண்டியதும் வாசித்தபின் யோசிக்கப்படவேண்டியது மாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் எனது கருத்துக்களை முன்வைக்கிறேன். மட்டக்களப்பு போன்ற ஒரு சராசரியான மாவட்டமொன்றிலிருந்து எவ்வாறு மாண வர்களை தேசிய ரீதியிலான சிறப்பு தெரிவு மூலம் (Merit Entrance) பல்க லைக்கழகங்களுக்கு அதிகளவில் அனுப்பலாம் அதற்கான சாத்தியப்பாடு கள் எவை என்பதை எனது அறிவுக்கும், அனுபவத்துக்கும் உட்பட்ட வகையில் நான் இங்கு சிலவற்றை சம்பந்தப்பட்ட வர்களுக்கு எடுத்துரைக்க ஆசைப்படுகி றேன்.

கல்வி சார்ந்த முன்னேற்றம் அல் லது ஒரு மாணவனின் அடைவு மட்டம் என்பது பல சிக்கலான காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றதென்பது நம்மில் பலருக்கு தெரிவதில்லை. பிறக்கும்போது ஒரு குழந்தைக்கு உண்டான மூளை விருத்தி மற்றும் அக்குழந்தையின் அறி வுத் திறன் (Intelligent Quotient- IQ) என்பவற்றில் தொடங்கி அக்குழந்தை யின் குடும்ப பின்னணி, வாழும் சூழல், அதன் முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி (Pre and Primary Education) என்பவற் றில் சார்ந்து அதனுடைய இரண்டாம் நிலைக் கல்வி (Secondary Education) மற்றும் அதுசார்ந்த நடவடிக்கைகளால் பெரிதும் ஆதிக்கம் செலுத்தப்பட்டு பின் னரே அந்த மாணவன்/மாணவியினு டைய உயர்தரக் கல்வி (க.பொ.த.உ/த) சிறப்பு பெறுகிறதென்பது மறுக்க முடி யாத உண்மை. மாறாக விதிவிலக்கா னவர்களும் உண்டு. மேற்குறிப்பிட்ட நிலைகள் எல்லாவற்றிலும் பின்தங்கிய மாணவன் அல்லது மாணவி யொருத்தி உயர்தரப் பரீட்சையில் சிறப் பாக சித்தி யடைந்த சம்பவங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இப்படியான திடீர் மாற்றத்துக்கு மாறுபட்ட சூழல் மற்றும் குடும்ப பின்னணி அல்லது அந்த நபரின் வைராக்கியம் போன்றவை கார ணங்களாக இருக்கலாம். ஆனால் இது ஒரு சிலருக்கே பொருத்தமாக இருக் கும் பொதுவானதாக எடுத்துக்கொள்ள முடியாதது.

ஆகவே பொதுவாக கல்வியானது பல படிமுறைகளில் ஆதிக்கம் செலுத் தப்படுகிறதென்பதுதான் உண்மை. ஆகவே இவ்வாறானதொரு சிக்கலான தொகுதியிலிருந்து பின்னாளில் தேசிய ரீதியிலான சிறப்பு பெறுபேற்றை பெறக் கூடிய ஒரு மாணவன் அல்லது மாண வியை எவ்வாறு தயார்படுத்த முடியும் என்பதை இனிப் பார்ப்போம்.

**1. பெற்றோரின் அர்ப்பணிப்பும் ஈடுபாடும்**

ஒரு குழந்தையின் மிக இளவயது பிராயத்திலிருந்து அப்பிள்ளை பல்கலைக் கழகம் செல்லும் வரைக்குமான அத்தனை காலப் பகுதியிலும் பெற்றோரின் ஈடுபாடும் அக்கறையும் அர்ப்பணிப்பும் அப்பிள்ளையின்பால் இருக்க வேண்டுமென்பதே எனது வாதம். எல்லாத் துறைகளிலும் பெற்றோர்கள் வழிகாட்டிகளாக அல்லது சிறப்பான வழிகாட்டலுக்கு அடிகோலிகளாக இருக்கவேண்டியது கடமை. ஒரு குழந்தையின் மனவளர்ச்சியில் இது பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்து கின்றதென்பது உண்மை. இவ்வாறே தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய நேரத்தை ஒதுக்குவதும் அவர்களது தலையாய கடமையாகும். என்னுடைய பிரதிபலிப்புத்தான் எனது குழந்தைகளிடம் காணப்படும் என்னும் அடிப்படை உண்மையை சகல பெற்றோரும் உணர வேண்டும். ஒரு குழந்தையின் முன்மாதிரிகள் அல்லது எடுத்துக்காட்டுகள் (Role Model) ஆரம்பத்தில் அக்குழந்தையின் தந்தையோ அல்லது தாயாகவோதான் இருக்க வேண்டுமே தவிர பிறராக இருக்கு முடியாது. ஆனால் பின்னாளில் தனது பெற்றோரை புரிந்து கொண்டு அவர்கள் தனது போக்கிற்கு 100 வீதம் ஒத்துப் போகாதவர்கள் என்னும் நிலை வரும்போதுதான் ஒரு குழந்தைக்கு வேறு ஒருவர் மாதிரியாக அல்லது நாயகனாக (Hero) தெரிகிறார். ஆனால் பல சிறப்பான குடும்பங்களில் இன்றைக்கும் தனது பெற்றோரையே மாதிரியாக வரித்து பல படிகளில் முன்னேற்றம் கண்டுள்ள அநேக மாணவர்களை நான் கண்டிருக்கிறேன். அதனால்தான் கூறுகிறேன் எந்தத் தொழில், என்ன கல்வித்தரம், எந்த பிரதேசம் சார்ந்தவர் என்ற பேதங்களை எல்லாம் தள்ளிவிட்டு உங்கள் குழந்தைகளுக்கு நீங்களே ஒரு சிறப்பான வழிகாட்டிகளாக மாறுங்கள். அப்படி மாறுவீர்களேயானால் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத் திருப்பங்களை நீங்கள் நினைப்பதுபோல் மிகச் சுலபமாக எதிர்பார்க்க முடியும்.

ஆகவே உங்கள் குழந்தையின் எதிர்காலம் உங்கள் கைகளிலேயே ஆரம்பத்தில் அளிக்கப்படுகிறது. அதனை சிறப்பாக பராமரித்து உரிய தரத்தோடு சரியான சந்தர்ப்பத்தில் உங்கள் பிள்ளைகளின் கைகளில் ஒப்படைக்கும்போதுதான் நீங்கள் ஒரு பூரணமான பெற்றோராகின்றீர்கள் என்பதையும் நீங்கள் சார்ந்த சமூகத்தில் ஒரு சிறப்பான பிரஜையாகின்றீர்கள் என்பதையும் உணர வேண்டும்.

**2. முன்பள்ளி/ஆரம்ப பாடசாலையின் தரம் :**

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இயற்கையாகவே ஒரு சிலருக்கு மூளை வளர்ச்சி, சிந்தனை ஆற்றல் மற்றும் அறிவுத்திறன் என்பன பாரியளவில் சிறப்புற்றிருந்தாலும்(Extra Ordinary Child) பெரும்பாலான குழந்தைகள் பொதுவாக குறிப்பிட்ட அறிவுத் திறனையே ஆரம்பத்தில் கொண்டிருக்க வாய்ப்புண்டு. ஆகவே இவர்களுக்கான முன் மற்றும் ஆரம்பக் கல்வி என்பன எந்தப் பாரபட்சமும் இல்லாது சமமாக வழங்கப்பட வேண்டும் என்பதே எனது வாதம். நகர் சார்ந்த பிள்ளைக்கு ஒருவாறான பாடசாலை மற்றும் சிறப்பான கல்வி கிராமம் சார்ந்த

பிள்ளையொன்றுக்கு பின்தங்கிய கல்வி என்கின்ற போக்கினில் முதற் கண் மாற்றம் வரவேண்டும். இங்கிலாந்து மற்றும் இந்தியா போன்ற கல்வியில் துரித வளர்ச்சி கண்டுள்ள நாடுகளில் முன்பள்ளி மற்றும் ஆரம்ப பாடசாலைகளுக்கே பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை நான் கண்கூடாக அவதானித்திருக் கிறேன். இங்கிலாந்தில் எல்லா மாகாண அல்லது மாவட்டங்களுக்கு ஒப்பான இடங்களிலும் (இங்கு ஒவ்வொரு நிருவாக பிராந்தியமும் County என அழைக்கப்படுகிறது) ஆரம்பக் கல்வி சமமாகவே நடாத் தப்படுகின்றதென்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது போல் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் திறமை அவர்களுக்கான பயிற்சி என்பவற்றில் அரசு அதிக அக்கறை செலுத்துவதையும் பார்க் கக்கூடிய தாக இருக்கின்றது. ஆனால் மட் டக்களப்பு மாவட்டத்தில் அல்லது இலங்கையில் இவ்வாறானதொரு நிலை இல்லையென்றே நான் கூறு வேன். உதாரணமாக கன்னங்குடாவி லுள்ள ஒரு ஆரம்ப பாடசாலையை கோட்டைமுனை கனிஸ்ட வித்தியா லத்துடன் எவரும் தர அடிப்படை யில் ஒப்பிடமுடியாது. ஏன்? இதற் கான காரணம் என்ன? இக்கல்வி முறைக்கு ஏதேனும் நவீன ஆய் வுகூடங்கள் தேவைப்படுகின்றதா? அல்லது பாரிய சிக்கலான கற்றல் முறைகளை உள்ளடக்கிய பாடத் திட்டங்களா? எவற்றைக் கூறமுடியும். வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை, நிர்வாகத்திறன் மற்றும் ஆளுமை இவற்றையே குற்றச்சாட்டாக கூற முடியும். ஒரு குறிப்பிட்ட ஆரம்ப பாட சாலைக்கு மட்டுமே படையெடுக்கின்ற நிலைமை மட்டக்களப்பில் கல்வித் துறையைச் சார்ந்தவர்களை இது வரை சிந்திக்கத் தூண்டவில்லை என்பது வேடிக்கையான விடயமாக தென்படவில்லையா?

இதுதவிர ஆரம்ப பாடசாலைகளின் பால் மாவட்ட கல்வி நிர்வாகிகளுக் கும் அரசுக்கும் உள்ள அசமந்த போக்கும் காரணங்களாகின்றன. ஒரேயொரு சிறிய உதாரணத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகி றேன். உங்கள் தோட்டத்தில் நடப் பட்டுள்ள பயிரில் இருந்தேதான் அடுத்த போகத்துக்கான விதைக ளையோ அன்றி நாற்றுக்களையோ பெறப்போவதாக இருந்தால் அப்பயிர் களின் ஆரம்பகால வளர்ச்சியில் அக்கறை கொள்ளாதவிடத்து என்ன பயன். இதுபோல் தோட்டத்திலுள்ள பயிர்கள் போன்றவர்கள்தான் மாண வர்கள், விதைக்காகவும் நாற்றுக் காகவும் தெரிவுசெய்யப்படப் போகி றவர்கள்தான் திட்டத்தின் Merit மாணவர்கள் என்பதை இத்தருணத் தில் உணர்ந்துகொண்டு என்னால் முன்மொழியப்படவிருக்கும் சாதா ரண திட்டங்களுக்கு தயாராகுங்கள்.

a) மாவட்டத்திலுள்ள சகல முன்பள்ளி மற்றும் ஆரம்ப பாடசாலைகளுக் கான வளங்களை பெற்று அவற்றில் கடமையாற்றும் ஆசிரியர்களை ஒன் றிணைத்தல்

b) இவர்களுக்கான கருத்தரங்குகள் மற்றும் மேலதிக பயிற்சித் திட்டங் களை வகுத்தல்

c) சகல ஆரம்ப பாடசாலை அதிபர்க ளையும் ஒருங்கிணைத்து அவர்களி

டையே பாடத்திட்டம் சம்பந்தமாக ஒருமைப்பாடு, ஆசிரியர்களின் திற னாய்வு, மாணவர்கள் பெற்றோர் மற் றும் பாடசாலை நிர்வாகம் என்பவற் றிடையிலான தொடர்பு என்பவற்றை மேன்படச் செய்தல்.

d) இவ்வாறே ஒரு சிறப்பான ஆரம்பப் பாடசாலை அல்லது பிரபல்யமான ஆரம்பப் பாடசாலையிலிருந்து ஆசி ரியர்களைக் கொண்டு கற்பித்தலி லுள்ள நுணுக்கங்களை சகல ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக் கும் வழங்கச் செய்தல்

e) இதுதவிர மாவட்டந்தோறும் சிறந்த ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டியொன் றை வருடந்தோறும் நடாத்தும் நடை முறையை அறிமுகம் செய்தலும் அவர்களுக்கான கௌரவத்தை சிறப் பாக நடாத்துதலும். அதனால் ஆசிரி யர்களின் வினைத்திறன் பெரிதும் அதிகரிக்க வாய்ப்புண்டு. இவ்வாறே சிறந்த அதிபர்களைத் தெரிவுசெய் யும் திட்டத்தினையும் ஏற்படுத்துதல்.

f) குறிப்பாக மிகவும் பின்தங்கிய ஆரம்ப பாடசாலைகளின் பால் நிர்வாகிகளி னதும் மற்றும் சமூக அக்கறை கொண்ட கல்விமான்களினதும் ஈடு பாட்டை அதிகரிக்கச் செய்து அவற்றை முன்னேற்றப் பாடுபடுதல்.

g) இவ்வாறே பாரபட்சமின்றி மாவட்டந் தோறும் சகல ஆரம்ப பாடசாலைக ளிலும் ஆங்கில கல்வியின் முக்கி யத்துவத்தை வலியுறுத்தி அவற்றுக் கான நடவடிக்கைகளை மேற்கொள் ளுதல். சகல ஆரம்ப பாடசாலைக ளிலும் போதிய ஆங்கில ஆசிரியர் களை நியமித்தலும் அவர்களுக்காக மேலதிக ஆங்கில அறிவை ஏற்ப டுத்துதலும். இதற்காக கல்விக் கல் லூரி மற்றும் பல்கலைக்கழகத்தின் உதவியை நாடுதல்

h) பின்னர் சகல ஆரம்ப பாடசாலைக ளிலுமிருந்தும் மிகச் சிறப்பான மாண வர்களைத் தெரிவுசெய்து அவர் களை இரண்டாம் நிலைக் கல்விக் காக தரமான பாடசாலைகளில் அனு மதிபெற திட்டம் வகுத்தல்.

i) இவ்வாறே இங்கிலாந்தில் காணப் படுவதுபோல் மிகத் திறமையான மாணவர்களை இந்த காலகட்டத் தில் இனங்கண்டு அவர்களுக்கான சிறப்பு இரண்டாந்தர பாடசாலை யொன்றை சிபார்சு செய்தல் (இங்கு இதனை Grammar School என்கின் றனர்). இதற்காக பட்டிருப்பு, மட்டக்க ளப்பு, வாழைச்சேனை ஆகிய கல்வி வலயங்களில் குறைந்தது ஒவ்வொரு பாடசாலையையேனும் தெரிவுசெய்து அதனை சிறப்பானதாக மாற்றி சகல வளங்களையும் வழங்கச் செய்தல். இதே நேரம் ஆண்டு 5இல் தொடங்கி ஆண்டு-10 வரைக்குமான காலப்பகுதி யில் எந்த பாடசாலையிலிருந்தேனும் மிகத் திறமையான மாணவர்களை எந்த நேரத்திலும் இந்த சிறப்பு பாட சாலை உள்வாங்க தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு ஆரம்பக் கல்வியினை உறுதியாகவும் திடமாகவும் ஏற்படுத் துவதனால் மாணவர்களிடையான நம் பிக்கையும் அக்கறையும் அதிகரிப்பத னால் அவர்கள் இலகுவாக தங்க ளது இரண்டாம் நிலைக் கல்விக்கு தங்களை தயார்படுத்துவார்கள் என் பது உறுதி. இப்போது நாம் அடுத்த

போகத்துக்கான விதை மற்றும் நாற்றுக்களை பெற்றுக்கொள்வதற்காக ஒரு சிறப்பான ஆரம்பக்கட்ட தெரிவை செய்தவர்களாக மாறியிருக்கின்றோம் என்பது நிஜம்.

நான் ஒரு உண்மையை இங்கு கண்டிப்பாக குறிப்பிட்டே ஆகவேண்டும். ஆண்டு-5 இல் நடைபெறுகின்ற பொது உளச்சார்பு பரீட்சைக்கு தமது பிள்ளைகளை தயார்படுத்துவதில் பெற்றோர்கள் காட்டும் அக்கறை தொடர்ந்து அப்பிள்ளை உயர்தரம் செல்லும் வரை இருப்ப தில்லை. ஆண்டு-5இல் நடைபெறுகின்ற பொது உளச்சார்பு பரீட்சையானது எதிர்காலதத்தில் அம்மாணவனோ அல்லது மாணவியோ தேசிய மட்டத்தில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான மாணவர்களாக கண்டிப்பாக இருப்பார்கள் என்பதற்கான அத்தாட்சியல்ல என்பது தான் எனது வாதம். என்னுடைய காலகட்டத்தில் இவ்வாறு பொது உளச்சார்பு பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் கூட அவ்வளவாக பிரகாசிக்கவில்லையென்பதும் உண்மை. தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவியர்களை நேர்கண்டவன் என்றவகையில் பின்வருவனவற்றை நான் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

அவர்களது குடும்ப பின்னணியில் தொடங்கி அம்மாணவனது அய ராத உழைப்பு, ஒழுங்கான கற்பித் தல் என்பவற்றால் அது பிரகாசம் பெற்றே அந்த பெறுபேறு கிடைக்கப்பெற்றதை நான் கண்டிருக்கிறேன். ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள் பட்டிருப்பு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற மாணவன் தேசிய மட்டத்தில் சித்தி பெற்ற அதேநேரம் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் பயின்ற மாணவரொருவர் சகல பாடங்களிலும் கோட்டைவிட்டதையும் நாம் கண்டிருக்கிறோம். இந்த கட்டத்தில் பிரபல்யமான உயர்தரம் பயிலும் பாடசாலையின் தரத்தில் மட்டுமே பெறுபேறுகள் தங்கிவிடுவதில்லை என்பது இப்போது உங்களுக்கு தெளிவாக புரிந்திருக்கும். ஆகவே இரண்டாம் நிலைக்கல்வி, மாணவர்களது தனிப்பட்ட அக்கறையென்பது மிகவும் முக்கியமானதென் பதை நாம் உணர்ந்து அதற்கான சிறப்பு திட்டங்களை வகுத்துக்கொள்வது நமது தலையாய கடமையாகும்.

ஆகவே என்னால் இங்கு முன்வைக்கப்படும் சாதாரண திட்டங்கள் ஒரு பரீட்சார்த்தகரமான நடவடிக்கையாக ஏன் கொள்ளமுடியாது என்ற வாதத்தின் பின்னணியிலேயே புனையப்படுகிறது.

## 3. இரண்டாம் நிலைக் கல்வியும் பாடசாலைகளின் தரமும்

மேலே நாம் கண்ட அத்தனை விடயங்களையும் செயற்படுத்தி அதிலிருந்து வெளிவருகின்ற மாணவ மாணவியருக்கான சிறந்த இரண்டாம் நிலை பாடசாலைகள் அமைந்திருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் இங்கு உணரவேண்டும். மட்டக்களப்பை பொறுத்தவரை அநேகமான நகர்ப்புற பாடசாலைகள் இரண்டாந் தர பாடசாலைகளாகவும் அதேநேரம் உயர் தரங்களைக்கொண்டதுமான பாடசாலைகளாகவே காணப்படுகின்றன. ஆனால் பெரும்பாலான கிரா

மப்புற பாடசாலைகள் 10ம் தரத்து டன் நின்றுவிடும் இரண்டாந்தர பாட சாலைகளாகவே இன்றும் இருப்பதை நாம் காணமுடியும். மாவட்டத்தில் எந்தப் பிரதேசமானாலும் ஆரம்ப கல் வியை முடித்துள்ள சிறந்த மாண வர்களை தரமான இரண்டாந்தர பாட சாலைகளில் சேரவிடுவதென்பது அதி காரிகளின் தலையாய கடமையாகும்.

அடிப்படையில் எமது நோக்கம் பல்க லைக்கழகத்துக்கு தேசிய ரீதியி லான சிறப்பு அடிப்படையில் மாண வர்களை அதிகளவில் அனுப்புவது தான் எனில் அதனை வெறுமனே உயர்தர வகுப்புகளில் போதிப்பதை விட நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல இது ஒரு நீண்டகாலத் திட்ட மாகும் (மீண்டும் பயிர் அடுத்த போகத் துக்கான விதை தெரிவை மீட்டிக் கொள்ளுங்கள்). இதனை அடிப்படை யிலிருந்தே தெளிவாக சகலரும் புரியும் வண்ணம் நடைமுறைப்ப டுத்த வேண்டியதன் முக்கியத்து வத்தை நாம் இங்கு உணரவேண் டும். ஆகவே எதிர்காலத்தில் இத்திட் டத்துக்கு உள்வாங்கப்படும் மாணவ மாணவியரை இக் காலகட்டத்திலே தான் அதிகளவில் தெரிவு செய்ய முடியும் என்பது எனது கருத்தாகும். உதாரணமாக க.பொ.த.(சா.த) மாண வர்கள் கணித பாடத்தில் திறமை யற்றவர்களாக இருப்பார்களேயா னால் அவர்கள் எந்த துறை சார்ந்த உயர் தரத்தை கற்றாலும் திண்டா டவே செய்வர் என்பது உண்மை. ஆகவே இந்த இரண்டாந்தர கற்றல் காலப் பகுதியானது குறிப்பாக கணி தம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டிய காலப் பகு தியாகும். இன்று உலகெங்கும் கணி தம் சார்ந்த துறைகளுக்கே முன்னு ரிமை அளிக்கப்படுகின்றதென் பதை நாம் உணர வேண்டும். உலகையே ஆட்டிப் படைக்கின்ற கனணித் துறை யின் முதுகெலும்பே இந்த கணிதத் துறைதான் என்பது உண்மை. இது தவிர கணிதத்தில் அக்கறை கொண்ட மாணவன் பிற துறைகளிலும் நாட் டம் கொள்வதோடு பிற பாடங்களை விளங்கிக் கொள்ளும் திறனும் அவர் களுக்கு அதிகரிக்கின்றதென்பது ஆய்வு. இவ்வாறே ஆங்கில அறிவு டைய எந்தவொரு மாணவ மாண விக்கும் வாசிப்பதிலும் எந்த தேட லையும் இலகுவாக்கிக் கொள்ளவும் முடியும் என்பதும் உண்மை.

இவ்வாறே என்னைப் பொறுத்தவரை இயற்றாத சட்டமாக இதனை வைத் துக் கொள்ளலாம். மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாம் நிலைக் கல்வி என்பது கட்டடாயமானது {க.பொ.த.(சா.த.)வரை} எனவும் இதை கண்காணிக்க சிறப்பான ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்ப தும் எனது பணிவான வேண்டுகோள். இந்த காலகட்டத்திலேதான் க.பொ.த. சா.த பரீட்சையை மையமாக கொண்ட கல்விமுறையை நாம் மாணவர்கள் மத்தியில் போதிக்க ஆரம்பிக்கின் றோம். ஆகவே பின்வரும் நடவடிக் கைகளை சிறப்பான இரண்டாம் நிலை கல்விக்காக மேற்கொள்ளலாம் என்பது எனது கருத்து.

a) மாவட்டந்தோறும் தற்போதுள்ள சகல இரண்டாந்தர பாடசாலைகளி னதும் பெறுபேற்றுக்கமைய அவற்றைத் தரப்

படுத்தி பின்தங்கிய அனைத்து பாடசாலைகளையும் தரமுயர்த்துவதற்கான திட்டங்களை வகுத்தல். இவ்வேளை முகாமைத்துவ மாற்றம், ஆளணி மாற்றம் பௌதிக வள அபிவிருத்தி என்பன பிரதானமாக கொள்ளப்படவேண்டும்.

b) ஒவ்வொரு கல்வி வலயத்திலும் குறைந்தது ஒரு பிரபல்யமான இரண்டாந்தர பாடசாலையை உருவாக்கி அதில் அந்த வலயத்திலிருந்து ஆரம்ப கட்டத்தில் தெரிவாகும் சிறப்பான மாணவர்களை உள்வாங்குவதில் முன்னுரிமையளித்தல்.

c) இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் தரத்தையும் அதன் கல்வி நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக உன்னிப்பாக அவதானித்தலும் குறைகளை நிவர்த்தி செய்தலும்.

d) மாணவர்களின் ஆக்கத் திறமையை வருடந்தோறும் ஒரு தரமான மாதிரிப் பரீட்சையை சகல பாடத்திலும் தெரிவு செய்யப்பட்ட அனைத்து பாடசாலைகளிலும் பொதுவாக நடாத்தி மாணவர்களின் அடைவு மட்டத்தை தொடர்ச்சியாக அவதானித்தலும் அதனை மேம்படுத்துதலும். இதற்காக கடந்த கால வினாத் தாள்களையோ அல்லது கடினமான முன்மாதிரிப் பரீட்சைகளையோ நடாத்தமுடியும். குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களை பிரதானமாக கொள்ள வேண்டும்.

e) இதே காலகட்டத்தில்தான் வளங்களின் பயன்பாட்டை முழுமையாக நாம் பயன் படுத்தவேண்டும். இந்த வகையில் ஆளணி முகாமைத்துவம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. நான் ஏற்கனவே ஆரம்ப பாடசாலை விடயத்தில் குறிப்பிட்டதுபோல நன்கு பிரபல்யமான கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களின் சேவையை தெரிவு செய்யப்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் சமமாக கிடைக்கும் வண்ணம் அவர்களிடையான பரிமாற்றத்துக்கு ஆவன செய்தலும் அவர்களைக் கொண்டு ஒரு ஒருமைப்பாடான கற்பித்தல் திட்டத்தை வகுத்தலும் அவர்களுக்கிடையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதலும்.

f) க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை எதிர்கொள்ள இருக்கும் மாணவர்களை அந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே வரப்போகும் பரீட்சைக்கு தயார்படுத்துவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும. இதற்காக கடந்த கால க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை வினாத்தாள்களை பயன்படுத்தி மாணவர்களின் அடைவு மட்டத்தையும் அவர்கள் எந்த அளவுக்கு வரப்போகின்ற பரீட்சைக்குத் தயாராக இருக்கின்றனரென்பதையும் அறிந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

g) இறுதியாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையை எழுதி முடித்துள்ள நல்ல பெறுபேறுகளைப் பெறுவார்கள் எனக் கணிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரைக்குமான காலப்பகுதி முழுவதிலும் ஒரு முடுக்கிவிடப்பட்ட வகையிலான ஆங்கில கற்கைநெறியை பிரபல்யமான திறமையான ஆங்கில ஆசிரியர்களால் ஏற்படுத்தி மாணவர்களுக்கான ஆங்கில அறிவை வளர்த்தல். இதற்காக வெளி மாவட்டங்களில் இருந்துகூட ஆங்கில ஆசான்க

ளையும் மற்றும் இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்களையும் சிறப்பான முறையில் பயன்படுத்த நடவடிக்கை யெடுத்தல்.

h) பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றபின்னர் க.பொ.த. உயர்தரத் துக்கான திட்டத்தை அமுல்படுத்த தொடங்குதல். அதற்கான முன்னேற் பாடுகளையும் அதனுடன் சார்ந்த திட்டங்களையும் இனிவரும் அத்தி யாயத்தில் விரிவாகப் பார்ப்போம். இதுவே எமது திட்டத்தின் பிரதான பாகமும் அதிக அக்கறை எடுக்க வேண்டிய காலப்பகுதியுமாகும்.

## 4. உயர்தரப் பாடசாலைகளும் உயர் தரக் கல்வியும்

மேற்படி எமது சிறப்பான திட்டத்தின் மூலம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற தெரிவு செய்யப்பட்ட பாட சாலை மாணவர்களையோ அன்றி மாவட்டத்தில் எந்த பாடசாலையிலி ருந்தும் மிகச் சிறப்பாக தேறிய மாணவ மாணவியர்களையோ உள் வாங்குவதற்காக மாவட்டத்தில் தற் போதுள்ள பிரபல்ய பாடசாலைகளின் தற்போதய நடைமுறையில் சில மாற் றங்களைக் கொண்டுவர வேண்டிய தன் முக்கியத்துவத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கிலாந்தில் நடமுறையிலுள்ளது போல் ஒரு மாணவனின் சாதாரண தர வகுப்பின்போதே அந்த மாணவ மாணவியின் எதிர்கால துறையை சுமூகமாக திட்டமிடுகின்றனர். ஒழுங் கான தொடர்ச்சியான கணிப்பீட்டின் அடிப்படையில் அவர்களின் கணிதத் திறன், விஞ்ஞான திறன் மற்றும் உயர்தர பாடநெறிக்கு தேவையான பிற பாடங்களின் தரம் என்பவற்றின் அடிப்படையில் மாணவர்களை நான்கு பிரதான பாதைகளில் தெரிவுசெய் கின்றனர் (இதனை இங்கு Pathways என அழைக்கிறோம்). இந்த இறுதித் தெரிவின்போது மாணவ மாணவியு டன் அவர்களின் அனைத்து பாட ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சேர்ந்த ஒரு திறந்த உரையாடலின் பின் அம்மாணவ மாணவியின் கடந்த கால பெறுபேறுகள் பெற்றோரிடம் தெளிவாக எடுத்துரைக்கட்டு அவர்க ளின் விருப்பத்துடன் துறைகள் தெரிவு செய்யப்படுகின்றன. பின்னாளில் என் மகளோ அல்லது மகனோ ஒரு வைத்தியராக அல்லது ஒரு பொறியி யலாளராகத்தான் வரவேண்டுமென்று விடாப்பிடியாக இருக்கும் தன்மை அற்றுப்போக என்னுடைய பிள்ளை இந்த துறைக்குத் தான் மிகப்பொருத் தமானவர் என்னும் ஒரு தெளிவு பெற்றோரிடத்தும் மாணவரிடத்தும் வர கற்றல் தெளிவாக நடைபெறு கிறது.

இந்த அடிப்படையில் கணிதம், மற் றும் விஞ்ஞானம் போன்ற பாடங்க ளில் சிறந்து விளங்குபவர்களை பல் கலைக்கழகங்களின் உயர்ந்த துறை களுக்கான பிரிவிலும் (Medicine, Engineering and Technologies), இதற்கு அடுத்தபடியான திறமை யான மாணவர்களை பல்கலைக்கழ கங்களின் பிறதுறைகளுக்கான நெறிக்கும் (Commerce, Arts and other Courses) இதற்கும் கீழுள்ள வர்களை டிப்ளோமா கற்கை நெறிக் கான துறைகளுக்கும் (Diploma Courses) இறுதியாக உள்ளவர்களை அத்தாட்சிப்பத்திரம் பெறக்கூடிய

துறைகளுக்கும் (Certificate Course) தெரிவு செய்கின்றனர். ஆகவே ஒரு பிள்ளையின் எதிர்காலம் சிறப்பான, மிகத் தெளிவான முறையில் திட்ட மிடப்படுகின்ற அதேவேளை தெரிவு செய்யப்பட்டவர்கள் தத்தம் துறை களில் சிறந்து விளங்குகின்றனர். காரணம் அவர்கள் சகல பாடங்களிலும் தலையை நுழைத்து குழம்பிப் போகா மல் தத்தமது துறைகளில் மிக பாண்டித்தியம் பெற்றவர்களாக பின் னாளில் அத்துறை சார்ந்த தொழி லுக்கோ அன்றி மேற்படிப்புக்கோ செல்ல ஏதுவாக இருக்கின்றது.

இவ்வாறே பல்கலைக்கழகங்களுக்கு ஆரம்ப கட்டத்தில் செல்ல வாய்ப்பற் றவர்களான 3ம் 4ம் கூட்டத்தினரை அவர்களின் Diploma மற்றும் Certificate Course முடிவுற்றதும் அதன் பெறுபேறுகளின் அடிப்படை யில் பல்கலைக்கழகங்களில் முத லாவது ஆண்டில் சேர்ந்து கொள்ள வும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை இது ஒரு சிறப்பான திட்டமென்றே கூறலாம். ஆனால் இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் இவ்வகையான தொரு கல்வித் திட்டத்தை நடைமு றைப்படுத்துவதில் பாரிய சிக்கல்கள் இருக்கின்றதென்பதை நன்கு உணர்ந்தவன் என்பதால் பின்வரும் மாற்றீடுகளை ஒரு மாணவன் அல் லது மாணவி தனது உயர்தர கற்கை நெறியை தெரிவுசெய்து அந்த பாட சாலைக்கு செல்லும் முன்னர் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கை களாக சிலவற்றை முன்வைக்க ஆசைப்படுகிறேன்.


க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைப் பெறு பேறுகள் கிடைக்கப் பெற்றதும் நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மாண வர்கள், ஆசிரியர்கள் பேற்றோர்கள் அடங்கலான ஒரு திறந்த கலந்துரை யாடல் இடம்பெற வேண்டும். இவ்வே ளையில் மாணவனின் துறை சார்ந்த திறமை (இதற்காக கணிதம், விஞ் ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்க ளின் புலமை அடிப்படையாக கொள் ளப்படலாம்) அடிப்படையில் அந்த மாணவன் கற்க வேண்டிய உயர்தர துறை தீர்மனிக்கப்படவேண்டும். இதில் மாணவனுக்கும் அவர் பெற்றோருக் குமிடையிலான புரிந்துணர்வும் ஒரு மைப்பாடும் மிக அவசியமாகும். தனது பிள்ளை சுமக்கக்கூடிய பழு எது என்பதை அப்பிள்ளை உணராதவி டத்து பெற்றோர் அதை உணர்த்துவ தோடு தான் விரும்பிக் கற்கப்போகும் துறையை பெற்றோர்கள் மனப்பூர்வ மாக ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை யும் கொண்டிருக்க வேண்டும். சமூ கத்தில் வைத்தியர்களும், பொறியிய லாளர்களும் மாத்திரமே மேலோங்கி யவர்கள் அல்லது அதிகமாகச் சம்பா திப்பவர்கள் என்னும் மடைமையை முதற்கண் துடைத்தெறியவேண்டும். சமுகத்தில் ஒவ்வொருவரும் தத்த மது துறைகளில் சிறந்தவர்களே என் னும் சிந்தனை யாவருக்கும் வர வேண் டும் என்பதே எனது அவா. உதாரண மாக இன்று உலகிலுள்ள அதி செல் வந்தர்களை 1 இலிருந்து 10 வரை வரிசைப்படுத்தினால் அதில் எவரும் வைத்தியரோ அன்றி பொறியியலா ளரோ இல்லை. இவ்வாறே ஒரு சமூ கத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்ற வர்கள் வைத்தியர்களும் பொறியிய லாளர்களும் மாத்திரமல்ல என்னும் யதார்த்தமும் உணரப்பட வேண்டும்.

ஆகவே மேற்கண்டவாறு நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் தத்தமது துறைகளைத் தெரிவுசெய்து மாணவர்களை உயர்தரத்துக்கு சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையே இத்திட்டத்தின் பிரதானமான காலப்பகுதியாகும். ஒரு பாடசாலையிலிருந்து க.பொ.த.சாதாரண தரம் சித்தியெய்திய பின்னர் மாணவன் மற்றும் பெற்றோரின் இறுதியான கற்கைநெறி தெரிவுக்குப் பின்னர் அந்த மாணவன் அல்லது மாணவியை மாவட்டத்திலுள்ள உயர்தரத்தை கொண்ட எந்த பாடசாலையிலும் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் அதேநேரம் எமது திட்டத்திற்கான வேலைத் திட்டங்களாக பின்வருவனவற்றை மேற்கொள்ள ஆரம்பிக்கலாம்.

a) எமது சிறப்புத் திட்டத்தில் பங்கெடுக்கும் பாடசாலைகளின் தெரிவும் அதனுடன் தொடர்புடைய விடயங்களும் இத்தருணத்தில் முக்கியம் பெறுகின்றன. இவ்வேளையில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் சிறப்பான பாடசாலையில் சிறப்பான மாணவர்களை தெரிவு செய்யும் நடவடிக்கையின் முதற் கட்டமாக உயர்தர விஞ்ஞானப் பிரிவு மற்றும் கணிதப் பிரிவுக்கான சிறப்பு பாடசாலைகளை இனங்காணலும் அதனை மேம்படுத்தலும். உதாரணமாக புனித மைக்கல் கல்லூரி, வின்சென்ட் மகளிர் கல்லூரி, சிவாநந்தா சேசிய பாடசாலை போன்றவற்றை முதற்கட்டமாக தெரிவுசெய்ய முடியும். இதுபோன்று வர்த்தகம், கலை பிரிவுகளுக்காகவும் சிறப்பு பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும். இவ்வாறே மற்றைய இரண்டு கல்வி வலயங்களான பட்டிருப்பு மற்றும் வாழைச்சேனை பிராந்தியத்தில் தலா ஒரு பாடசாலையேனும் தெரிவுசெய்யப்பட்டு அதனை மேம்படுத்தும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

b) ஆரம்பத்தில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் மிகத் திறமையான பெறுபேறுகளைப் பெற்ற எந்த மாணவ மாணவியருக்கும் அவர்களால் முடியும் பட்சத்தில் எந்த சிறப்பான பாடசாலையிலும் அனுமதியளிப்பதில் முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். நகர்ப்புற மாணவர்களுக்கு நகர்ப்புற பாடசாலையும் கிராமப்புற மாணவர்களுக்கு கிராமப்புற பாடசாலையும் என்ற போக்கினை முற்றாக மாற்றவேண்டும். புத்திசாலியான, திறமையான, சிறப்பான மாணவர்களுக்கே சிறப்பான பாடசாலைகளில் முன்னுரிமை என்னும் தீர்மானம் இனிவரும் காலங்களில் உருவாகவேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்...)



# 10வது 'மினி ஒலிம்பிக்' விளையாட்டுப் போட்டியில் தடம் பதித்த கிழக்குப் பல்கலைக்கழகம்

*-திரு.கணேசமூர்த்தி ரவீந்தர்*[r]-

**வ**ருடாந்தம் நடைபெற்று வரும் அகில இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் 3 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் விளையாட்டுப் போட்டியினை **"மினி ஒலிம்பிக்"** (Mini Olympic) போட்டியென சிறப்புப் பெயர் சூட்டி நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1981ம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்து வரும் எமது கிழக்குப் பல்கலைக்கழகமானது உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், எல்லே போன்ற விளையாட்டுக்களில் மாத்திரமே 2ம், 3ம், 4ம் இடங்களை மிக உச்ச பெறுதியாக அடைந்திருந்தது. ஆனால் இவ்வருடம் முதல் தடைவையாக பழைய மாணவர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்களின் நெடுநாள் கனவுகளை நனவாக்கும் முகமாக உள்ளக அரங்கு விளையாட்டுக்களான கூடைப்பந்து, கராத்தே, மல்யுத்த அணிகளும் மற்றும் தனிநபர் 400m ஓட்டத்திலும் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளமை சிறப்பம்சங்களாகவுள்ளது. இப்போட்டிகளில் 10 தங்கம், 02 வெள்ளி, 09 வெண்கலம் உள்ளடங்களாக 21 பதக்கங்களை வெற்றி கொண்டு இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகம் 11வது இடத்தினைப் பெற் றுக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கூடைப்பந்தாட்டத்தைப் பொறுத்த வரையில், நடப்புச் சம்பியனாகத் திகழ்ந்த கொழும்பு மற்றும் மொரட்டுவ, பேராதனைப் பல்கலைக்கழகங்களுக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் சவாலாக விளங்கியதுடன் மொரட்டுவ, பேராதனை பல்கலைக்கழகங்களை முறையே அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் வீழ்த்தி எமது கிழக்குப் பல்கலைக்கழகமானது சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளமை நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டியதொரு விடயமாகவுள்ளதோடு இப்பெருமையை சேர்த்து தந்த எமது மாணவர்களின் மனோபலத்தையும் திறமையினையும் வியந்து பாராட்ட வேண்டிய அம்சமாகும். அத்துடன் எமது கிழக்குப் பல்கலைக்கழக




கூடைப்பந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் திரு.S.சதீஸ்குமார் அவர்கள், கிழக்குப்பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு பிரிவு உத்தியோகஸ்தரும் முன்னாள் தேசிய கூடைப்பந்தாட்ட அணி வீரருமாவார்.

கராத்தே விளையாட்டினைப் பொறுத்தவரையில், போட்டியில் முதன்முறையாக பங்கெடுத்துக்கொண்ட எமது கிழக்குப் பல்கலைக்கழகமானது திரு.மு.குகதாசன் (தேசிய அணி வீரர்)



**KARATE**
**SLUG 2010**
**Eastern University**

அவர்களின் பயிற்றுவிப்பின் கீழ் ஆண்கள் பிரிவில் 05 பதக்கங்களையும், முதன்முறையாக அகில இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி நிரலில் இணைத்துக்கொள்ளப்பட்ட பெண்களுக்கான கராத்தே போட்டியில் 06 தங்கம், 01 வெள்ளி, 02 வெண்கலம் உட்பட 09 பதக்கங்களை சுவீகரித்து பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்தமை மற்றுமொரு பெருமை சேர்க்கும் சிறப்பம்சமாகும். பயிற்சிகளை மேற்கொள்வதற்குக் கூட நிரந்தர இடவசதிகளைக் கொண்டிராதபோதும் விளையாட்டுத்துறை பொறுப்பாளரின் அதீத ஈடுபாடும் பயிற்றுவிப்பாளரின் சிறந்த நெறிப்படுத்தலும் மாணவர்களின் கடின உழைப்பும் குறுகியகால ஆயத்தத்துடன் போட்டியில் பங்குபற்றி சிறந்த பெறுதியைப் பெற்றுக்கொள்ள வழிகோலியது.

மல்யுத்த விளையாட்டினைப் பொறுத்தவரையில், 2006ம் ஆண்டிலேயே முதன்முறையாக எமது பல்கலைக்கழகம் காலஞ்சென்ற தனபாலன் அவர்களின் பயிற்றுவிப்பின் கீழ் P.மோதீஸ் பங்குபற்றி முதலாவது தங்கப்பதக்கத்தை வெற்றி கொண்டு பல்கலைக்கழக மட்டத்தில் அறிமுகத்தை ஏற்படுத்திக்கொண்டது. அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் படிப்படியாக முன்னேறியதுடன் 2007ம் ஆண்டு மினி ஒலிம்பிக்குடன் ஒப்பிடுகையில் 2010ம் ஆண்டு மினி ஒலிம்பிக்கில் திரு.S.திருச்செல்வம் அவர்களின் பயிற்றுவிப்பின் கீழ் 02 தங்கம், 01 வெள்ளி உள்ளடங்களாக 04 பதக்கங்களை வெற்றிகொண்டு தரவரிசை



**WRESTLING - 1ST RUNNER-UP**
**(SLUG 2010)**
**EASTERN UNIVERSITY**

யில் 01 புள்ளி குறையினால் 02ம் இடத்திற்கு தள்ளப்பட்டது. இவ்விளையாட்டினைப் பொறுத்தவரையில், பல்கலைக்கழகத்தால் பயிற்சிகளை மேற்கொள்வதற்குப் போதிய இடவசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படாத போதிலும் பயிற்றுவிப்பாளர்களின் அர்ப்பணிப்பும் மாணவர்களின் கடின உழைப்புமே சிறந்த பெறுதிகளை ஈட்டிக்கொள்வதற்கு உறுதுணையாக அமைந்தது. மேலும், மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 400m தனிநபர் ஓட்டப்போட்டியில் S.சிவசங்கர்

தங்கப்பதக்கத்தையும் 4x400m அஞ்சல் ஓட்டப்போட்டியில் எமது பல்கலைக்கழகம் வெண்கலப்பதக்கத்தையும் சுவீகரித்துள்ளமை மற்றுமொரு சிறப்பம்சங்களாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட சாதனைகளை இது நாள்வரை புரிந்திருக்கும் எமது கிழக்குப் பல்கலைக்கழகமானது 2007ம் ஆண்டின் மினி ஒலிம்பிக்கிலும் பார்க்க இவ்வருடம் 2010இல் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளது. ஒருபோதும் எம்மால் வெற்றிகொள்ள முடியாது என்ற நிலையிலிருந்துகொண்டிருந்த மேற்குறிப்பிடப்பட்ட உள்ளக அரங்கு விளையாட்டு


S.SIVASANKAR
400M - Gold Medal
SLUG 2010
Eastern University

நிகழ்ச்சிகள் இன்று மாணவர்களினதும் பயிற்றுவிப்பாளர்களினதும் விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர்களினதும் கடின உழைப் பினால் வருங்காலத்தில் எம்மை அசைக்க முடியுமா? என்ற கேள்வியை ஏனைய முதன்நிலைப் பல்கலைக்கழகங்களின் மனங்களில் எழவைத்துள்ளது.

இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில், எமது மாணவர்கள் பிரமிக்க வைக்கும் உள்ளக விளையாட்டு அரங்குகளையும் அதற்கான அனைத்து வசதிகளையும், முன்னாள் தேசிய சாதனையாளர்களையும் கொண்டு எம்மைப் போன்ற சிறிய மற்றும் வளர்ந்துவரும் பல்கலைக்கழகங்களை மிரளவைத்து வெற்றியைத் தம்பால் இலகுவாக்கி வந்த முதன்நிலை பல்கலைக்கழகங்களின் மனதில் இன்று கிழக்குப் பல்கலைக்கழகம் என்றால் கிலி ஏற்படும் அளவிற்கு தமது மனோபலத்தையும் உடல் பலத்தையும் ஒருங்கிணைத்து சாதனையை நிலைநாட்டியுள்ளனர். மேலும் முதன்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு ஈடான அரங்கு மற்றும் ஏனைய உட்கட்டுமான வசதிகளைக் கொண்டிராது எமது மாணவர்கள் பெற்ற வெற்றி மற்றும் அவர்களின் மனோபலம், உடற்பலம் அர்ப்பணிப்பு என்பவை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியில் அக்கறையுள்ள நம் அனைவராலும் வியந்து பாராட்ட வேண்டிய சாதனையாகும். அத்தோடு எந்தவொரு உள்ளக விளையாட்டு அரங்கு வசதிகளுமற்ற எமது மாணவர்களின் சாதனைகள் தொடருமுகமாகவும் வினைத்திறனான பல்கலைக்கழகப் பட்டதாரிகளை சமூகத்திற்கு வழங்கும் முகமாகவும் நிலவும் குறைகளை தீர்த்து வைக்க வேண்டியது பல்கலைக்கழகத்தினதும் பல்கலைக்கழக அபிவிருத்தியில் அக்கறையுள்ள அனைவரதும் கடமையாகும்.

இன்றைய இந்நிலைமையானது எதிர்வரும் காலங்களில் ஏனைய முதன்நிலை பல்கலைக்கழகங்களுக்கு சவாலை ஏற்படுத்தக்கூடிய பல்கலைக்கழகங்களுள் ஒன்றாக கிழக்குப் பல்கலைக்கழகம் திகழப்போகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டிற்கு வழங்கப்பட்டுவரும் முக்கியத்துவம் குறைவடைந்துவரும் இக்காலத்தில் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து வினைத்திறனான பல்கலைக்கழக பட்டதாரிகளை சமூகத்திற்கு வழங்கும் பிரதான பொறுப்பானது எமது பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக அபிவிருத்தியில் அக் கறையுள்ள அனைவருக்குமுண்டல்லவா? .

**"Facing the Challenges and Winning the World"**

# பாரதி புகழ் பரப்பிய முதற் பெண் புலமையாளர் ஈழத்துப் பண்டிதை பத்மாசனி அம்மையார்

*-பேராசிரியர் செ.யோகராசா* (s)-

இருபதாம் நூற்றாண்டு கண்டு கொண்ட முக்கியமான தமிழ் ஆளுமைகளுள் பாரதியார் முதன்மையானவர். அவரது மேதாவிலாசம் அவர் வாழ்ந்த காலத்தில் உணரப்படவில்லை என்பதும் அதுபற்றி முதன் முதலாக உணர்ந்து எழுதிய இருவருள் ஒருவர் ஈழத்தவரான விபுலானந்த அடிகளென்பதும் (மற்றொருவர் சோம சுந்தரப் பாரதியார்) பாரதியியல் ஆய்வாளர்கள் (உ+ம் : பெ.சு.மணி, பேராசிரியர் கா.சிவத்தம்பி) தரும் செய்தி. எனினும், பாரதி புகழ் பரப்பிய முன்னோடிப் பெண்கள் பற்றி எவரும் குறிப்பிட்டாரல்லர். ஆக, அவ்விதத்தில் பண்டிதை பத்மாசனி அம்மையார் ஒருவரென்பதும், அவர் ஈழத்தவரென்பதும் இன்றுவரையான எனது தேடலின்படி தமிழகம் உள்ளிட்ட தமிழ் ஆய்வாளர்களுள் அவரே முன்னோடி என்பதும் விதந்துரைக்கப்பட வேண்டியனவாம். இவை பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பது இன்றைய ஆய்வுச் சூழலுக்கு அவசியமாகின்றது.

முன்பதாக, பண்டிதை பத்மாசனி அம்மையார் பற்றிச் சில கூற வேண்டும். மதுரைத் தமிழ்ச் சங்கத்து பண்டிதர் தேர்வில் முப்பதுகளளவிலே தேறிய ஈழத்தவர் ஐவருள் புலோலி ஊர் சார்ந்தவரான புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி இயற்றியதனூடாக, ஈழத்தில், மரபுவழிக் கவிதை எழுதிய முதற் பெண்ணாக விளங்குபவர் தொமஸ்கிரேயின் பாடல் மொழி பெயர்ப்பினூடாக, ஈழத்தின் முதல் பெண் மொழிபெயர்ப்புக் கவிஞரானவர்! (இவரைப் பற்றி ஏலவே பேராசிரியர் சண்முகதாஸ் விரிவாக எழுதியுள்ளார்).

மேற்குறிப்பிட்ட பன்முக ஆளுமை கொண்டவரான பண்டிதை எழுதிய 'பாரதி கவிநயம்' ('பாரதி', உத்தம பாளையம், 1929 மார்ச்சு) என்ற கட்டுரையே எமது கவனத்தை ஈர்த்திருப்பது! அவரது சமகால முன்னோடிகளது கட்டுரைகளில் காண்கின்ற அதே வேளையில் காணமுடியாத சிறப்புக்களையும் அது கொண்டுள்ளமை முதலில் வற்புறுத்தப்பட வேண்டியதொன்று!

பாரதியாரின் கவிதையுலக சாதனைகளுள் முதன்மையானது அவர் தமிழின் முதல் அரசியல் கவிஞராகியமை. அதனை சரியாக இனம் கண்டு தமது கட்டுரையில் பண்டிதை அது பற்றியே முதலில் குறிப்பிடுகின்றார். பின்வரும் பகுதி அதற்குச் சான்றாகும். "இக்கவிஞர் பெருமான் தமது தாய் நாட்டின் நிலைமையையுற்று நோக்கினார். நோக்கும் போது, தேசமக்கள் அந் நியருக்கடிமையாயிருத்தலையும், தேசத்தின் பண்டைப் பெருமையையும், தற்காலமிருக்கும் கேவலநிலைமை

யையும் பெருமையடைதற்கேற்ற சாதனங்கள் நாட்டில் மலிந்திருத்த லையும் இன்னபிறவற்றையும் நன் குணர்ந்தார். இவ்வுணர்ச்சியானது பாரதியாருள்ளத்திற் சுதந்திர தாகத் தையெழுப்பியது. அச்சுதந்திர தாக மானது பாரதியார் நாவினின்றும் கவியெனும் அமிர்தமாகச் சொரிய ஆரம்பித்தது…"

பாரதியாரின் அரசியல் சார்ந்த கவிதைகளுள் 'வந்தேமாதரம்' முக் கியமானது. பண்டிதை, தொடர்ந்து அக்கவிதை பற்றியும் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

பாரதியாரின் தமிழ்நாடு, தமிழ் மொழிப் பற்றினைப் பற்றி அடுத்த தாக பண்டிதை எடுத்துரைப்பதும் மனங்கொள்ளப்பட வேண்டியதே. ஏனெனின் பாரதியாரிடம் இந்திய தேசியத்திற்குச் சமமாக தமிழ்த் தேசிய உணர்ச்சியும் காணப்பட்டது என்பது பாரதி பற்றிய பார்வையில் முக்கியமானதொரு விடயமென்பது இலக்கிய ஆர்வலர் பலரும் அது பற்றிக் கவனிப்பதில்லையென்பதும் மனங்கொள்ளத்தக்கது. (பாரதியா ரின் அத்தகைய ஆளுமையின் ஒடுக் கமே பாரதிதாசனின் ஆளுமையின் ஆரம்பமாகின்றமை யாமறிந்ததே) இயற்கை மீதான பாரதியாரின் தீரா மோகம் பற்றி எடுத்துரைப்போரும் அரிதே. பண்டிதை அது பற்றியும் விபரித்துள்ளார்.

இறுதியாகப் பண்டிதை, குறிப் பிடும் விடயமானது அதாவது "தோட் டக் கூலிகளைக் குறித்து "கரும்புத் தோட்டத்திலே என்னும் அடியை முத லாகக் கொண்டு இவர் பாடிய பாடல் எவருள்ளத்தை உருகச் செய்யாது. எவர் கண்ணில் நீரைப்பெருக்காது எவ ருள்ளத்தைக் கவராது? கல்லையுமு ருக்கிக் கடுநெருப்பையும் குளிர்விக்கு மன்றோ" என்றவாறமையாது பண்டி தையின் இரசனைப் பாங்கினை மட்டு மன்றி அவரது பெண் நிலை நின்ற பார்வையின் வெளிப்பாட்டினையும் உணர்த்துகிறது" என்று கூறுவதில் தவறில்லை.

பண்டிதை பாரதியார் கவிதைக ளின் பொருட் சிறப்புக்களை மட்டு மன்றி எடுத்துரைப்புத்திறன் பற்றியும் எடுத்துரைக்க தவறவில்லை. சந்தம், மெட்டு, இசை, சுவை முதலியன பற் றிக் குறிப்பிடுவதும் 'இவர் மோனைக் கும் எதுகைக்கும் முரண்படாதிருக்க வேண்டுமென்பதும் நோக்கொடு கவிபா டினாரால்லர்" என்று கூறுவதும் கவனத் திற்குரியவை.

பாரதியாரின் "ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தை இவர் கண்டுள்ளமை யும் பின்வரும் பகுதிகளினூடே வெளிப் படுகின்றது.

"..... இவர் சந்திரன், சூரியன், சோலை முதலியனவற்றின் இயற்கை வனப்பினை உற்று நோக்கி அதனா லுண்டாகிய இன்பத்தில் திளைத்தவ ராய்ப் பாடிய கவிகள் வாசிக்கும் தோறும் இயற்கையோடிணைந்த இன்பத்தைப் பெருக்குகின்றன…."

"இவரைச் சூழ்ந்துள்ள தோற்றங் களே இவருள்ளத்திற் புகுந்து கவியெ

னுமமிர்தமாகப் பெருக ஆரம்பித்த மையால் இவர் பாடல்களைப் படிக் குந்தோறும் அவ்வத்தோற்றல்களை நேரில் கண்டடைவது போலிருக்கி றது........"

இறுதியாகக்கூற வேண்டிய தொன்றுள்ளது. பாரதியார் பற்றிய பண்டிதையின் பார்வை விரிந்ததும் ஆழமானதுமென்பதில் ஐயமில்லை என்பதே அது. சான்றாக பின்வரும் பகுதியை அவதானிக்கலாம்.

"பாரதநாட்டிலமைந்துள்ள ஒவ்வொன் றையும் கவனிக்கும் போது இவர்நாவி னின்றும் புதிய புதிய கவிகள் - புதிய புதிய துறைகள் - புதிய புதிய மெட் டுக்கள் - புதிய புதிய இசைகள் தேனாறு போன்று இனிமையுடன் வழிக் கொள்ளுகின்றன."

மேற்குறிப்பிட்டவாறமைகின்ற பண்டிதையின் தெளிவான குரலை அவரது சமகால முன்னோடிகளிடம் காணமுடியவில்லை என்பதே நமது கவனத்திற்குரியது.

"மனத்தை அடக்கிப் பழகும் போது ஒரு எண்ணத்தை அடக்க, மற்ற எண்ணம் உதிக்கும். அதையும் அடக்க வேறொன்று உதிக்கும். அப்படியே ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டேயிருக்கும். ஆனால் எல்லா எண்ணங்களையும் வாருங்கள் என்று நினைத்தவுடன் ஒன்றும் வராது"

"மனத்தை எண்ணங்களிற் சிதற விடாமல் அடக்கிப் பழகி வர மனம் ஆன்மாவில் ஒடுங்கி விடும். இதன் பின் வரும் எண்ணங்கள் அந்த சக்தியிலிருந்து வெளிப்படும். ஒரு மாம்பழம் வேண்டுமென்ற எண்ணம் வருமாயில் உடனே மாம்பழம் கிடைக்கும். காசு தேவை என்ற நினைவு தோன்றினால் காசு கிடைக்கும்.

யோகர் சுவாமிகள்

வழங்கியவர்
**Dr.R.Rajendraprasad** (d)

## ஆங்கிலக் குறுக்கெழுத்துப் போட்டி இல– 06க்கான சரியான விடைகள்

**இடமிருந்து வலம்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. Tuberculosis | 12. Roar | 13. Leasing | 14. Incapacity | 16. Getting |
| 17. Nail | 19. Ostrich | 20. Rear | 21. SR | 22. Out |
| 24. RIP | 25. Moon | 27. Do | 28. Mu (d) | 29. Behaviour |
| 33. Entrails | 34. Cue | 35. C(a)t | 36. Ate | 37. ICBM |
| 39. Rinse | 41. Dual | 43. Youth | 44. Melody | |

**மேலிருந்து கீழ :**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. Trigonometry | 06. August | 11. Singapore | 30. Height | 41. DD |
| 02. Ounce | 07. Lea | 15. Tic | 31. Us | 42. No |
| 03. Baptism | 08. Oscar | 18. Iridium | 32. Cable | |
| 04. Erythroblast | 09. Sailor | 23. Thorium | 38. Cay | |
| 05. Clinometer | 10. In | 26. Nuncio | 40. Nun | |

### சரியான விடையை அனுப்பியோர் எவருமில்லை

## குறுக்கெழுத்துப் போட்டி இல– 46க்கான சரியான விடைகள்

**இடமிருந்து வலம்:**

| | | | |
|---|---|---|---|
| 01. சீதபித்தசு (வ)ரம் | 02. (கி)ராமத்தை | 08. சினம் | 09. கந்துவட்டி |
| 12. தக்(க)ம் | 13. காந்தாரி | 15. தம்மம் | 16. கொ(ள்ளி)டம் |
| 18. பூசு | 19. திதி | 21. சர்வதாரி | 22. ஊம் |

**மேலிருந்து கீழ :**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. சீமந்தபுத்திரி | 02. வராகம் | 03. பித்துக்குளி | 04. வத்தை | 05. ரசி |
| 06. சுதரிசனம் | 10. காட்டம் | 11. மடிந்(து) | 14. தாம்பூலம் | 17. கொழு(நீ)ர் |
| 20. தாதி | | | | |

### எவருமே சரியான விடை எழுதி அனுப்பவில்லை. இருப்பினும், பின்வரும் 4 பேரும் மூன்று தவறான விடைகளுடன் எழுதி அனுப்பி பாராட்டுப் பெறுகின்றனர்.

1. **எஸ்.ஆகர்ஷ்யா**
   15, சின்ன உப்போடை,
   மட்டக்களப்பு.

2. **செ.மகேந்திரன்**
   குமாரவேலியார் கிராமம்,
   செங்கலடி.

3. **செ.நிவேதித்**
   இல.14, பாரதி லேன்,
   மட்டக்களப்பு.

4. **எம்.குமரன்**
   41/12, 3ம் குறுக்கு,
   திசவீரசிங்கம் சதுக்கம்,
   மட்டக்களப்பு.

## குறுக்கெழுத்துப் போட்டி இல - 47

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | ✦ | 8 | | | | | |
| 9 | 10 | ✦ | | ✦ | 11 | | |
| 12 | | 13 | | | ✦ | 14 | |
| 15 | | | ✦ | ✦ | 16 | | |
| 17 | | | 18 | 19 | ✦ | ✦ | ✦ |
| | ✦ | 20 | | | 21 | 22 | ✦ |
| | ✦ | | ✦ | 23 | | | |

பெயர் : ..............................

..............................

முகவரி: ..............................

..............................

..............................

கையொப்பம்:

..............................

முடிவுத்திகதி
**15.05.2011**

இக் கூப்பன்களில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்

### இடமிருந்து வலம்

01. அறிவுடனும் சுய உணர்வுடனும் இருக்கும் நிலை
08. இசைக்கருவி. ஊதியதனால் 6ம் எழுத்து இசையாகப் பறந்து குழம்பிவிட்டது.
09. "களவும் கற்று ......"
11. துணியால் தைத்து தலையில் அணிவது
12. ஒரு பொருள் பற்றிய நீண்ட மேடைப் பேச்சு
14. இறுதி எழுத்து இன்றியும் பத்தைத் தான் குறிக்கும்
15. ஒரு மொழி. 2ம் 3ம் எழுத்து இல்லாததனால் திரும்பியுள்ளது.
16. பலதாகப் பகுக்கப்பட்டதன் ஒன்று. வலமிருந்து இடமாகியுள்ளது.
17. வெகு புத்திசாலிக் குழந்தை . செய்த குறும்பினால் இங்கே குழம்பியிருக்கின்றது.
20. ஆடம்பரம், அலங்காரம், சிறப்பு, கோலாகலம் எதுவுமில்லாதது
23. இந்தக் கவிஞன் பெண்களை வர் ணித்து ஏமாந்ததாக ஒரு சினி மாப் பாடல் உண்டு.

### மேலிருந்து கீழ்

01. திகிலை உண்டுபண்ணும் பயம். சிவாஜி கணேசனின் ஒரு திரைப்படம். பயத்தினால் இறுதி எழுத்து 5ம் இடத்திற்கு ஓடிவிட்டது.
02. ஒவ்வொருவருக்கும் அல்லது ஒவ்வொன்றிற்கும்
03. ஆறு, கடல் போன்றவற்றில் உண்டாகும். இதில் அகப்பட்டதனால் குழம்பி விட்டது
04. நாய்க்கும் உண்டு. நிமிர்த்த முடியாது
05. கனவிலும் இது செய்ய நினைக்காதே
06. கொஞ்சலுடன் பேசுதல். குழப்ப மான இருக்கிறது
07. காதலர்களின் இன்பப் பேச்சு. முதல் இரு எழுத்துக்களையும் அகற்றி "இ" சேர்த்தால் முதலீட்டால் கிடைப்பது. குழப்பத்தில் இருக்கின்றது.
10. சுற்றி வந்து அளந்ததனால் கடைசி எழுத்தில்லாமல் குழம்பியும் இருக்கின்றது.
13. நீதிமன்றில் உண்மையைத் திரித்து கூறியதனால் குழம்பிப்போய் இருக்கின்றார்
18. சோகத்தால் வளர்ந்ததனால் தலைகீழாகி விட்டது.
19. ................முரடாக இருப்பதனால் தலைகீழாகி விட்டது
21. முதலெழுத்து இல்லாமலேயே பத்தும் செய்யும்.
22. காற்றில் சுழல்வதனால் முதல் எழுத்தும் இறுதி எழுத்தும் பறந்துவிட்டன.

# ஆங்கிலக் குறுக்கெழுத்துப் புதீர் இல - 07

## இடமிருந்து வலம்

01. இரத்த வாந்தியை ஏற்படுத்தும் நோய்
11. சிறந்த அப்பியாசக் கலை - 2ம் எழுத்து இறுதிக்கு இடம்பெயர்ந்துள்ளது.
12. அபிநயம் - 6ம் எழுத்து ஒழிந்து விட்டது.
13. தலையெழுத்து அல்லது விதியென்பர்.
15. சகாப்தம் - இறுதி எழுத்தின்றி.
16. விசாலம் அல்லது பரப்பு - 4ம் எழுத்து ஒழிந்து விட்டது.
17. பெருவாரியாகப் பரவி பலரைத் தாக்கக்கூடிய தொற்றுநோய் - இதன் இறுதி எழுத்து தாக்கப்பட்டுள்ளது
20. அலங்கார ஆபரணங்கள் இங்கு குழம்பிக் கிடக்கின்றன.
22. வட்டவில்
23. மட்டுநகரிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையொன்று - சுருக்கமாக.
24. கரப்பான், சொறிந்ததால் இறுதி எழுத்து கரைந்து விட்டது.
25. உயிரினங்களில் உடற்பாகங்களை அமைக்கும் இதன் இறுதி எழுத்து அமையவில்லை.
27. நரிச்சத்தம்
29. இது கொண்ட நெஞ்சம் துயரத்தின் இல்லம் - குழம்பியுள்ளதுடன் இறுதி மூன்று கட்டங்களிலும் ஒரே எழுத்துக்கள்.
31. பிறருக்கு சொந்தமானதை அனுபவிக்கும்பாத்தியதை
33. சைவ சமய தத்துவ நூல்களில் ஒன்று
35. ஐரோப்பிய நாடுகளின் கூட்டு - சுருக்கமாக
36. அண்மையில் கிழக்கு மாகாண காவல் நிலையமொன்றில் இது வெடித்ததால் பெரும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன - எனினும் இங்கு குழப்பத்தில்
37. இது இல்லையேல் உயிர் வாழ்க்கையில்லை - இங்கு நடுவெழுத்தில்லை.
38. சவம் எரிக்கப்படும் சிதை- இங்கு இறுதி எழுத்து எரிந்து விட்டது.
39. விதைகளை மூடியிருக்கும் தோல் - இங்கு கடையெழுத்து கருகி விட்டது.
40. மின்தடை அலகு - முதலெழுத்து மூன்றாம் இடத்திற்கு தாவி விட்டது.
42. பாலாடையிலிருந்து பெறலாம்.
43. வாய் மற்றும் பெண் பிறப்புறுப்பில் தொற்று ஏற்படுத்தக்கூடிய பங்கசு.

## மேலிருந்து கீழ்

01. திரவநிலை உலோகத்தின் இலத்தீன் பெயர்.
02. சராசரியாக வருவதால் குழம்பிவிட்டது.
03. சிவனுக்கு இன்னொரு பெயர்
04. இதற்கான போராட்டத்தில் மடிந்தவர்கள் ஆயிரம் ஆயிரம்
05. பிரமிட்டுக்களின் நாடு
06. நான், இங்கு செயற்படுபொருளாக
07. அதிக கோப்புக்கள், படங்களைச் சேமித்துள்ள இதன் முதலெழுத்து இறுதிடத்திற்கு தாவிவிட்டது.
08. புனித என்பது சுருக்கமாக
09. ஜனநாயகம் என்ற போர்வையில் சில நாடுகளில் இப்படியான ஆட்சியே நடந்து வருவதால் இங்கு குழம்பிக்கிடக்கின்றது.
10. பட்டுப்பூச்சி வளர்ப்புத் துறை
14. நமது இம்மை வாழ்வுக்கு இதுவே காரணமென இந்துக்கள் நம்ப 4ம் எழுத்து 6ம் இடத்திற்கு தாவியுள்ளது.
18. பலரின் இக்குணத்தால் பலவேலைகள் தேங்கி கிடப்பதால் இங்கு குழப்பம்
19. ஆகக் குறைந்த எனும் பொருள்படும் இதன் முதலெழுத்து 4ம் இடத்திற்கு தாவியுள்ளது.
21. ஓர் உயிரெழுத்து இரட்டித்து நிற்கின்றது.
26. புவிமேற்பரப்பில் சுமார் 20 மைல் உயரம் வரை இது காணப்படுவதால் முதலிரு எழுத்தக்களுத் இடம் மாறியுள்ளன.
28. நம் நாட்டில் தற்போது இவற்றின் பாவனை பெருமளவு குறைந்துள்ளதால் மகக்ள் ஓரளவு நிம்மதி கொள்கின்றனர்.
30. இந்திய பஞ்சாப் மாநிலத்தில் தலைநகர் சண்டிகரிக்கு மேற்கேயுள்ள முக்கிய நகரம் குழப்பத்தில்
32. ஆங்கில துணைவினைச் சொல்லொன்று தலைகீழாக
34. வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தில் ஒரு கட்டம்
35. இவைகள் இல்லையேல் இப்புதிரை நாம் வாசிக்க முடியாது.
38. நோய் வருமுன் காக்க உதவும் பொது நல உத்தியோகத்தர் - சுருக்கமாக
40. அறிமுக விளிப்பு
41. நிறுவன முகாமைத்துவ இயக்குனர் - சுருக்கமாக
42. கிராமமொன்றின் அரச முகவர் - சுருக்கமாக.

# ஆங்கிலக் குறுக்கெழுத்துப் புதிர் - 07

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | | | | ■ | ■ | 12 | | | | | |
| 13 | | | | | 14 | | ■ | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | 18 | | 19 | | |
| 20 | | | | 21 | | | | ■ | 22 | | |
| 23 | | ■ | 24 | | | ■ | 25 | 26 | | | |
| 27 | | 28 | | ■ | 29 | 30 | | | | | |
| | ■ | 31 | | 32 | | | | | | ■ | |
| 33 | 34 | | | | | | | | ■ | 35 | |
| 36 | | | | ■ | ■ | 37 | | ■ | 38 | | |
| ■ | 39 | | ■ | 40 | 41 | | ■ | | 42 | | |
| 43 | | | | | | | | | | | ■ |

பெயர் :........................................................................................................................

முகவரி:........................................................................................................................

........................................................................................................................

கையொப்பம்:........................................................

முடிவுத்திகதி
**15.07.2011**

**இக் கூப்பன்களில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்**

**முயலும் வெற்றிபெறும் ஆமையும் வெற்றிபெறும் - முயலாமை வெற்றி பெறாது!**

**குறிப்பு :** (இப்போட்டிகளில் "கிழக்கொளி" ஆசிரியர் பீடத்திலுள்ளவர்களின் உற வினர்கள், குடும்பத்தவர்கள் பங்குபற்ற முடியாது)

**முற்றிலும்** சரியான விடைகளை அனுப்பும் மூவருக்கு குலுக்கல் முறை மூலம் தலா 250.00 ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும். ஏனையோருக்கு பாராட்டுக்கள் பரிசாக வழங்கப்படும்)

# கேட்டதும் கொடுப்பவனே!



## - கிழக்கத்தியான் பதில்கள் -

**கேட்டது :** நாட்டில் அரச உத்தியோகத்தர்களின் "சம்பள உயர்வு" போதும் என்று நினைக்கிறீரா?

**(ஆ. கந்தசாமி, ஆரையூர்)**

**கொடுப்பது :** நான் என்ன நினைக்கிறது, அரச உத்தியோகத்தர் ஒருவர் இப்படி நினைக்கிறார் " நீங்க உயர்த்தாம போனா என்ன? நாங்க "கிம்பளத்தை உயர்த்தி சமாளிச்சுடுவமில்ல "

**கேட்டது :** நீங்க ஒரு நல்ல நகைச்சுவை நடிகனாகி ஒஸ்கார் பரிசு வாங்குவது போல் கனவு கண்டேன். பலிக்குமா?

**(தா. முத்துவேலு, பாண்டிருப்பு)**

**கொடுப்பது :** அந்தளவு பெரிய நடிகன் என்று சொல்ல முடியாதுங்க. வீட்ல நான் காட்டுற பந்தாவைப் பார்த்து மனைவி தான் அடிக் கடி "நல்லாவே காமெடி பண்ணுறீங்க" என்கிறாள். அவள் கொடுத்த கொமென்டைவிட என்னய்யா ஒஸ்காரு... பொஸ்காரு...

**கேட்டது :** நாம் எல்லோரும் குரங்குல தான் இருந்து வந்தோம் என்று சொல் றத நான் ஏத்துக்கமாட்டன். ஏன்னா குரங்குகளுக்கு வாலு இருக்கே?

**(தா. முத்துவேலு, பாண்டிருப்பு)**

**கொடுப்பது :** வாலு இருந்தாத்தான் குரங்குன்னு நீங்க கண்டுபிடிச்ச பிறகு நான் எப்படிங்க மாற்று கருத்து சொல்ல முடியும். அத்தோட வால் இல்லா குரங்குகளின் கேள்விக்கெல்லாம் நான் பதில் கொடுக்கிறதுமில்லைங்க!

**கேட்டது :** சினிமாவின் போக்கில் வன்'முறைக்காட்சிகளும், ஆபாசக் காட்சிகளும் மலிந்து விட்டது என்கிறேன்!

**(ச.சந்திரகாந்தி, சவுக்கடி, ஏறாவூர்)**

**கொடுப்பது :** கரெக்ட், பெண்கள் இப்படியானதொரு விடயத்தை கவனித்து கருத்து தெரிவிப்பது ரொம்ப ரொம்ப ஆரோக்கியமான விடயம். ஆகவே, தயவுசெய்து வீட்டில் பார்க்கும் சின்னத்திரை (மெகா சீரியல்கள்)களில் குடும்பங்களில் நடப்பதாகச் சித்தரிக்கப்படும் வன்முறை, கலாசார சீரழிவு, சமுதாய ஒழுக்க நெறிப்பிறழ்வு விடயங்கள் குறித்தும் நீங்கள் கவனம் செலுத்தி, அவற்றின் மூலம் உங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறித்தும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உங்கள் எதிர்ப்பைக் காட்ட முன்வருவீர்களாயின் அதைவிட ரொம்ப ரொம்ப கரெக்டா இருக்கும்.

**கேட்டது :** சிந்திக்க செயற்பட ஒரு அழகான பழமொழி சொல்லுங்களேன்!

**(ஆபிதா இஸ்மாயில், ஓட்டமாவடி)**

**கொடுப்பது :** "மூடன் (?) வாயில் அகப்பட்ட பழமொழி, வெறியன் கையில் அகப்பட்ட முள்ளு" - (சிந்தியுங்கள் செயற்படுங்கள்)

**கேட்டது :** மட்டக்களப்பில் தொல்பொருள், பண்டைய நாகரிகம், மாண்பு பற்றி இயம்பக் கூடிய ஓர் ஆவண சேகரிப்பு அல்லது களஞ்சியப்படுத்தல் அவசியம் பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

**(கா.கர்மராஜன், களுதாவளை)**

**கொடுப்பது :** நல்ல கேள்வி... காலங்கடந்தாலும் கிழக்குப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறை இதுபற்றி நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். நல்ல முயற்சி கூடிய விரைவில் பயன்தர அனைவரும் அதற்கு கை கொடுத்து உதவ வேண்டும் என்பது என் அவா.

# கிழக்கொளி செய்திகள்!

## விடை பெறுகின்றார்

பராமரிப்புப் பிரிவில் தொழிலாளியாக பல ஆண்டுகள் கடமையாற்றிய திரு.பி.சிவலோகநாதன் கடந்த 23.11.2010 இலிருந்து கடமையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். சிவலோகநாதன் அவர்களின் சேவையை நாம் பாராட்டுவதுடன் அவர் எம் சங்கத்திற்கு ஆற்றிய அர்ப்பணிப்புக்கும் ஆதரவுக்கும் நன்றிகளை இத்தருணம் கூறி அவரது மீதிக்காலம் இனிமையாகவும் அமைதியாகவும் கழிய எம் வாழ்த்துக்களையும் கிழக்கொளி சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.

## மாற்றலாகிச் சென்றார்

பதிவாளர் அலுவலகத்தில் கடந்த பல வருடங்களாக எழுதுவினைஞராகப் பணியாற்றிய திருமதி.சி.சண்முகராஜா கடந்த 01.11.2010 இலிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றலாகி சென்றுள்ளார். இவரின் சேவை செல்லும் இடமெங்கும் சிறப்பாக அமைய எம் வாழ்த்துக்கள்!

## நீத்தார் நினைவுகள்



திரு.எஸ்.நேசகோபால் கடந்த 08.02.2010 இல் காலமானார். அன்னார் கடந்த பல வருடங்களாக எம் பல்கலைக்கழகத்தில் தொழிலாளியாக கடமையாற்றி இறுதியில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் பணிபுரிந்தார். இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருடன் நாமும் பங்குகொள்கிறோம்

**'பாமசி' கடை முதலாளி (வாடிக்கையாளர் ஒருவரிடம்) :** *முன்பு சாப்பாட்டுக் கடையில் வேலை செய்த பையன் ஒருவனை எனது 'பாமசி'யில் வேலைக்குச் சேர்த்தது தப்பாப் போயிற்று.*



**வாடிக்கையாளர் :** *ஏன் முதலாளி? என்ன பிரச்சினை?*

**'பாமசி' கடை முதலாளி :** *மூட்டைப்பூச்சி மருந்து வாங்க வந்தவரிடம் "கொண்டு போகவா? இங்கேயே சாப்பிடவா?" என்று கேட்கிறான்.*

# படைப்பாளர் விபரம்

a) **புவிலோகசிங்கம் அருள்நேசன் :** இந்து நாகரிக சிறப்புக் கற்கை – கலை, கலாசார பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்.

b) **எஸ்.நீரஜா :** விரிவுரையாளர், முகாமைத்துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

c) **வைத்திய கலாநிதி சர்மிலா பாயிஸ் :** மனித உயிரியல் பிரிவு, சௌ.ப.வி.பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

d) **வைத்திய கலாநிதி R.ராஜேந்திரப்பிரசாத் :** சிரேஷ்ட விரிவுரையாளர், மனித உயிரியல் பிரிவு, சௌ.ப.வி.பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்.

e) **செல்வி S.பூபாலபிள்ளை :** சுருக்கெழுத்தாளர், திருமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

f) **K.C.பரராசசிங்கம் :** மேற்பார்வையாளர், பராமரிப்புப் பகுதி – கி.ப.கழகம்.

g) **ஜெகதீசன் கோபிநாத் :** இறுதி வருடம், வரலாற்றுத்துறை, கலை, கலாசார பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்.

h) **சிவானந்தன் சுதாகரன் :** இறுதி வருடம், இந்து நாகரிகம், கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

i) **ஆ.சௌந்தரலிங்கம் :** சிரேஷ்ட விரிவுரையாளர் – வர்த்தக முகாமைத்துவ பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்.

j) **வைத்திய கலாநிதி தேனுகா முரளீஸ்வரன் :** மனித உயிரியல் துறை, சௌ.ப.வி.பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்.

k) **அனுராதா பாக்கியராஜா :** களுவாஞ்சிகுடி.

l) **ஏ.லோகமலர் :** மொழித்துறை, கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

m) **வைத்திய கலாநிதி எஸ்.சிவச்செல்வன் :** மருத்துவ நிலையம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

n) **வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரன் :** சிரேஷ்ட விரிவுரையாளர், பிணி ஆய்வு விஞ்ஞானத்துறை, சௌ.ப.வி.பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்.

o) **வே.பிரகாஷ் :** தொ.நு. உத்தியோகத்தர், நோய் உடற்றொழிற்பாட்டியல் துறை, சௌ.ப.வி.பீடம்.

p) **வீ.பத்மநாதன் :** தொ.நு.உத்தியோகத்தர், மனித உயிரியல் துறை, சௌ.ப.பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

q) **கலாநிதி.T.திருச்செல்வம் :** முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் (கி.ப.கழகம்) இங்கிலாந்து.

r) **திரு.கணேசமூர்த்தி ரவீந்தர் :** உடற்கல்விப் பிரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம்.

s) **பேராசிரியர் செ.யோகராசா :** சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித்துறை – கி.ப.க.

**அட்டைப் படங்கள் : என்.பத்மநாதன் :** க.பி.உதவியாளர், நோய் உடற்றொழிற்பாட்டியல் துறை – சௌ.ப.பீடம்

**கணனி வடிவமைப்பு : அ.ஜெயசுதா (சண் அச்சகம்)**




சண் அச்சகம் - ✆ 065-2222597